# சனி தோஷம் போக்கி சந்தோஷம் சேர்க்கும்
# பைரவர் வழிபாடு!

96 பக்க தனிப்புத்தகம் இலவசம்!

சரவணபவ

Vol.14 Issue.8 ஜனவரி - 2015
ரூ.30/- (தமிழகம், புதுச்சேரி)
ரூ.32/- (மற்ற மாநிலங்களில்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் லோகத்திலிருந்து வந்துள்ள சித்தரின் நேரடி சிகிச்சை மூலம்

**சர்க்கரை வியாதி 30 நாட்களுக்குள் காணாமல் போகும்படி செய்யப்படும். ஆட்டிசம் 30 நாளிலிருந்து குழந்தையின் பெற்றோர் ஒத்துழைப்பு பொறுத்து விரைவாக அழிக்கப்படும்.**

**புற்றுநோய் மூன்றாம் நிலை வரை பரிபூரணமாக குணமாக்கப்படும். எய்ட்ஸ் 30 நாட்களுக்குள் காணாமல் போகும்படி செய்யப்படும்.**

மனிதனுக்கும் ஜென்ம நட்சத்திரத்திற்கும் உள்ள தொடர்பு தெரிந்தவர்களால் மட்டுமே வியாதியை எந்த மருந்தும் இல்லாமல் குணமாக்க இயலும்.

மற்ற எந்த கலையும் வைத்து எந்த வியாதியும் குணப்படுத்த இயலாது என்பதுதான் உண்மை.

இரத்த பரிசோதனைகள் குறிப்புகள் மற்றும் நீங்கள் வரும்போது நீங்கள் வசிக்கும் வீட்டின் நிலத்தடி மண், நிலத்தடி நீர், மிகவும் அவசியம். எனவே இதை அனைத்தும் எடுத்து வந்தால்தான் சிகிச்சை வெற்றிபெற சாத்தியம்.


சிகிச்சைக்கு நேரடியாக சென்னை அல்லது சேலம் வருபவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் ஜீவநாடி
சித்தர் சந்திரசுவாமி ஜென்ம நட்சத்திரம் சிகிச்சை நிபுணர் மையம்

**Dr. S. Vijaya Kumar,** M.D.F.R.I. M..N.D.M.C.A. B.SC., D.SC., M.I.C. E.B.E. M.S (M.Sc-BIOTECH)

Life Member of AYUSH MEDICAL ASSOCIATION

MEMBER OF INTERNATIONAL HUMAN RIGTHS- MEDICAL WING



Main Branch: B-S2 plot No.132. Chinmaya Nagar,
Stage-1 Virugambakkam.
Other Branch: *121/15*, எமரால்ட் பிளாட்ஸ்,
திருமங்கலம் EB (POWER STATION) NEAR,
அண்ணாநகர் மேற்கு, சென்னை-40. அலைபேசி:
94432-89816, 99520-01304.
WWW.DIABETICHIVCURE.COM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கதிர்ச் சுடரோனை கைதொழுவோம்!



⌘ டி.ஆர். பரிமளரங்கன்


உலகிலுள்ள உயிரினங்களுக்கெல்லாம் கண்கண்ட தெய்வமாக விளங்குபவன் சூரியன். அவனது ஒளியாலேயே உயிரினங்கள் வாழ்கின்றன. எனவேதான் சூரிய வழிபாடு பழங்காலந்தொட்டே கடைப்பிடிக்கப்படுகிறது. காலை வேளையில் சூரியனுக்குரிய மூல மந்திரத்தினை ஜெபித்து, கிழக்கு நோக்கி அமர்ந்து தியானம் செய்தால், புத்துணர்ச்சியும் ஆரோக்கியமும் கிட்டுவதுடன், உடலில் நோய் எதிர்ப்புசக்தி கூடும்; கண்ணொளி பிரகாசிக்கும்; இதயம் வலிமைபெறும்.

'காலையில் ரிக்வேதமாகவும், நண்பகலில் யஜுர் வேதமாகவும், மாலை நேரத்தில் சாமவேத சொரூபமாகவும் சூரியன் திகழ்கிறான்' என்கிறது சூரிய அஷ்டகம்.

சூரியன் வலம்வரும் தேரின் குதிரைகள் ஏழு என்பதால், சூரியனிடமிருந்து ஏழு பிராணங்கள், ஏழு ஜுவாலைகள், ஏழு சமித்துக்கள், ஏழு ஹோமங்கள் தோன்றி இதயக்குகையில் ஒடுங்குகின்றன.

சூரிய வழிபாட்டினை உலகம் முழுவதும் கடைப்பிடிக்கிறார்கள். எகிப்தியர்கள் சூரியனை ஆமன்-ரா (ஆரோக்கியம் தருபவன்) என்று போற்றுகிறார்கள். கிரேக்கர்கள் 'போபஸ்- அப்போலோ' என்றும், ஈரானியர்கள் 'மித்ரா' என்றும் அழைக்கிறார்கள். நைல் நதிக்கரையில் வாழ்பவர்கள் சூரிய வழிபாடு செய்தபின்தான் அன்றைய பணியைத் தொடங்குவார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயற்கை தெய்வங்களான சூரியன், அக்னி, வருணன் ஆகியோரை இந்தியர்கள் தெய்வமாக வழிபட்டு வந்துள்ளார்கள். குறிப்பாக தமிழர்கள் சூரிய வழிபாட்டை தெய்வ வழிபாடாகக் கருதும் அதேவேளையில்,



அனைவருக்கும்
இனிய
தமிழர் திருநாள்,
2015 புத்தாண்டு
நல்வாழ்த்துகள்
-ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மருத்துவ சிகிச்சையாகவும் கருதி கையாண்டிருக்கிறார்கள்.

இந்தியத் திருவிழாக்களில் சூரியனை பிரதான தெய்வமாகக் கருதி வழிபடும் விழாக்களும் உண்டு. சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கும் நாளை 'மகர சங்கராந்தி' என்று வட இந்தியாவிலும், 'பொங்கல் திருநாள்' என்று தமிழகத்திலும் கொண்டாடுகிறார்கள். இரண்டுமே சூரியனுக்கு நன்றி செலுத்தும் விழாக்களாகும்.

இந்தியாவில் வேத காலத்திலிருந்தே சூரிய வழிபாடுகள் நடந்ததாக வேதநூல்கள் கூறும். கருங்கடல் கரையோர நாடுகளில் கி.மு. 3,000 ஆண்டுகளுக்கு முன்னரே சூரிய வழிபாடு மேற்கொள்ளப்பட்டதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

எகிப்தில் கி.மு. 14-ஆம் நூற்றாண்டிலேயே சூரிய வழிபாடு மேற்கொள்ளப்பட்டதற்குச் சான்றாக பிரமிடுகள், புராதனக் கலைப்பொருட்கள், கட்டடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஈரானில் கி.மு. 551-லும், சுமேரியாவில் கி.மு. 4000-லும், மேற்கு ஐரோப்பாவில் கி.மு. 2000-லும் சூரிய வழிபாடு நடந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இயற்கையின் வடிவமைப்பில் முதலிடம் பெறும் சூரியனை ஒரு கிரகமாகக் கருதினாலும், புராணங்கள் கூறும் தகவல்கள் நம்மைக் கவர்வதாகவே உள்ளன. காசிபர்- அதிதி தம்பதியினருக்குப் பிறந்த- விஸ்வான் என்றழைக்கப்படும் சூரியன் ரஜினி, சுவர்ணா, சாயா, ஸுவர்ச்சலா ஆகிய நான்கு மனைவிகளைக் கொண்டவன் என்றும், செம்பொன் மேனியையுடையவன் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

சூரியனின் ரதத்திலுள்ள சக்கரமே காலச்சக்கரம் என்றும், ஏழு குதிரைகளே வாரத்தின் ஏழு நாட்கள் என்றும், சூரியன் தான் காலத்தின் கடவுள் என்றும் ரிக்வேதம் கூறுகிறது.

ஒவ்வொரு மாதமும் சூரியன் ஒவ்வொரு பெயரைப் பெறுகிறான்; தன் ஒளிக்கிரணங்களின் சக்தியை கூட்டியும் குறைத்தும் பயணிக்கிறானென்று புராணம் கூறுகிறது. அதனை அறிவியலும் ஏற்கிறது.

சித்திரை மாதத்தில் விஷ்ணு என்ற பெயரில் ஆயிரம் கதிர்களுடனும்; வைகாசி மாதத்தில் அர்யமான் என்ற பெயரில் ஆயிரத்து முந்நூறு கதிர்களுடனும்; ஆனி மாதத்தில் விஸ்வஸ் என்று பெயர் பெறும் சூரியன் ஆயிரத்து நாநூறு கதிர்களுடனும்; ஆடி மாதத்தில் அம்சுமான் என்று ஆயிரத்து ஐந்நூறு கதிர்களுடனும்; ஆவணி மாதத்தில் பர்ஜன் என்ற பெயரில் ஆயிரத்து நாநூறு கதிர்களுடனும்; புரட்டாசி மாதத்தில் வருணன் என்ற பெயரில் ஆயிரத்து முந்நூறு கதிர்களுடனும் பிரகாசிக்கும் சூரியன், ஐப்பசி மாதத்தில்



இந்திரன் என்று பெயர் பெற்று ஆயிரத்து இருநூறு கதிர்களால் ஒளிரச் செய்கிறான். கார்த்திகை மாதத்தில் தாதா எனும் பெயர் பெற்று ஆயிரத்து நூறு கதிர்களையும்; மார்கழி மாதத்தில் நண்பனாக ஆயிரத்து ஐந்நூறு கதிர்களுடனும் விளங்குகிறான். தை மாதத்தில் பூஷாவான் என்ற பெயரில் ஆயிரம் கதிர்களுடன் ஒளிவீசுபவன், மாசி மாதத்தில் பகன் என்ற பெயரில் ஆயிரம் கதிர்களுடன் ஒளிவீசுகிறான். பங்குனியில் துவஷ்டா என்ற பெயரில் ஆயிரத்து நூறு கதிர்களால் அனைவரையும் மகிழ்ச்சியூட்டுகிறான். மேலும், வடக்கு நோக்கிச் செல்லும் உத்ராயன காலத்தில் அதிகமான ஒளிக்கதிர்களுடனும்; தெற்கு நோக்கிச் செல்லும் தட்சிணாயன காலத்தில் குறைந்த ஒளிக்கதிர்களுடனும் பவனிவந்து அனைத்துலகையும் காக்கிறான். சூரியனுக்கு மேலும் பல பெயர்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வழிபடும் பக்தர்களுக்கு சூரியன் அருளிய பெயர்கள் குறித்து புராணத்தில் தகவல்கள் உள்ளன.

'ஆயிரம் நாமங்கள் கொண்டு எவரொருவர் என்னைத் துதித்து வழிபடுகிறார்களோ. அவர்களின் எண்ணங்களை முழுமையாகப் பூர்த்தி செய்வேன். எனது ஆயிரம் நாமங்களை நினைவுகூர்ந்து ஜெபிக்க இயலாதவர்கள், எனது இருபத்தொரு நாமங்களைக் கொண்டு பூஜித்தாலும் முழுத் திருப்தி அடைவேன்' என்று சூரிய பகவான் கூறிய இருபத்தொரு நாமங்கள்:

**'ஓம் விகர்த்ததோ விவஸ்வாம்ஸ்ச**
**மார்த்தாண்டோ பாஸ்கரோ ரவி**
**லோகப் பிரகாச: ஸ்ரீமாம்**
**லோக சாக்ஷி த்ரிலோகேச:**
**கர்த்தா ஹர்த்தா தமிஸரஹ'**
**தபனஸ் தாபனஸ் சைவ கசி:**
**ஸப்தாஸ்வ வாஹன**
**கபஸ்தி ஸ்தோஹ ப்ரம்மாச**
**ஸர்வ தேவ நமஸ்கிருத:'**



மேற்கண்ட நாமங்களை சூரிய வழிபாட்டின்போது ஜெபித்தால் சூரிய பகவானின் முழு அருளையும் பெற்று வளமுடன் வாழலாமென்று கூறப்படுகிறது.

பலவாறு புகழப்படும் சூரியனைப் போற்றி வழிபடும் நாளாக தமிழகத்தில் தை மாதம் முதல் தேதியன்று பொங்கல் விழா மிகச் சிறப்பாகவும் உற்சாகமாகவும் கொண்டாடப்படுகிறது.

கேரளாவில் தைப்பொங்கலை முன்னிட்டு பகவதி அம்மன் கோவில்களில் பொங்கல் படைத்து வழிபடுவர். ஆந்திராவில், பெருமாள் கோவில்களில் சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் நடைபெறும்.

கர்நாடகாவில் பொங்கல் திருநாளை முன்னிட்டு கரும்புகளினால் பந்தலிட்டு சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடுவது வழக்கம்.

மகாராஷ்டிராவில் மூன்று நாட்கள் பொங்கல் விழா கொண்டாடுவர். அப்போது எள்ளுருண்டை முக்கியத்துவம் பெறுகிறது. முதல் நாள் போகி அன்று எள் சேர்த்து கேழ்வரகு மாவு ரொட்டியும், காய்கறி கூட்டும் சமைத்து இறைவனுக்குப் படைத்து உண்பர். இரண்டாம் நாள் சங்கராந்தியன்று இனிப்பு, பழங்கள், கரும்புகள், பொங்கல் படைப்பர். மூன்றாம் நாள் கிங்கராந்தியன்று வடை செய்வார்கள். தை மாதம் குளிராக இருப்பதால் வழிபாட்டில் எள்ளுருண்டை முதலிடம் பெறுகிறது.

அஸ்ஸாம் மற்றும் மணிப்பூர் மாநிலங்களில் 'போகாலிபிஹு' என்ற பெயரில் அறுவடைத் திருவிழா கொண்டாடுவர். உத்திரப்பிரதேசத்தில் பொங்கலன்று வீட்டுக்கு வருபவர்களை கரும்புத்துண்டுகள் மற்றும் தாம்பூலத்துடன் ஆசீர்வதிப்பர்.

உலகெங்கும் வாழும் இலங்கைத் தமிழர்கள், மார்கழி மாதம் முழுவதும் வீட்டு வாசலில் சாணத்தால் பிள்ளையார் பிடித்துவைப்பர். அதனைச் சேர்த்து வைத்து பொங்கலுக்கு மறுநாள் பிள்ளையார் பொங்கல் கொண்டாடுவர். சாணப்பிள்ளையாரை ஆற்றில் கரைத்துவிடுவார்கள்.

இங்கிலாந்தில் பழங்குடி இனத்தைச் சார்ந்த ஒரு பிரிவினர் திறந்தவெளியில் ஒன்றுகூடி, ஒரு சமூக விழாவாக 'சூரியன் உலகைப் படைத்தவர்' என்று போற்றி வழிபடுகிறார்கள்.

பாரீஸில் வாழும் மக்கள் 'உடல்நலனுக்கு அடிப்படை சூரியன்' என்று போற்றுவர். ஜப்பானிலும் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. நாம் 'பொங்கலோ பொங்கல்' என்று குரல் கொடுப்பதுபோல ஜப்பானியர்கள் 'ஹங்கரோ ஹங்கரோ' என்று குரல் கொடுப்பர். பொங்கலுக்கு மறுநாள் நாம் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவதுபோல் அவர்கள் குதிரைப்பொங்கல் கொண்டாடுவர். பர்மாவில் (மியான்மர்) பொங்கல் திருநாளன்று புத்தாடை அணிந்து சூரிய வழிபாடு செய்வதுடன் கால்நடைகளுக்கும் பூஜைசெய்து போற்றுவர்.

எனவே, உலகம் போற்றும் சூரியனை தைப்பொங்கல் திருநாளில் வழிபடுவதுடன், தினமும் வழிபட்டு சுகம்பெறுவோம்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெண் சித்தர்களில் ஒருவராக வைத்து எண்ணப்படும் பெருமையுடையவர் சட்டைமுனி என்கிற அரிய சித்தர். இவர் இலங்கையில் ஒரு சிங்களப் பெண்ணுக்கும் ஒரு தமிழருக்கும் மகனாய்ப் பிறந்தவரென்று சொல்லப்படுகிறது.


பிழைப்புக்காக இவரது பெற்றோர் தமிழகம் வந்தார்கள். பொருட்செல்வம் தேடுவதில் ஈடுபட்டார்கள். ஆனால் சட்டைமுனிக்கு பொருட்செல்வத்தில் எந்த நாட்டமும் இருக்கவில்லை.

மிக இளம்வயதிலேயே அவர் கடுமையான ஜெபதபங்களில் ஈடுபட்டார். பல சித்துகள் அவருக்குத் தாமே வசப்பட்டன. அணிமா, மகிமா, லகிமா என்னும் பற்பல ஆற்றல்களை அவர் தம் கடும் தவத்தால் அடைந்தார். பல சித்து விளையாடல்களை அவர் மக்களிடையே நிகழ்த்தினார். குடும்பத்தைத் துறந்து ஆலயம் ஆலயமாக தெய்வத்தைத் தேடியலைந்தார்.

பெற்றோர் 'இவன் துறவியாகிவிடுவான்' என்று அஞ்சினார்கள். தங்கள் ஒரே மகனைத்

# திருமாலுக்கு அலங்காரம் செய்த சட்டைமுனி!





50

ஜ திருப்பூர் கிருஷ்ணன்

என்றும் வாழும் சித்தர்கள்

துறவுக் கோலத்தில் காண அவர்கள் மனம் ஒப்பவில்லை. எனவே கட்டாயப்படுத்தி சட்டைமுனிக்கு ஓர் அழகிய பெண்ணைத் திருமணம் செய்துவைத்தார்கள். அப்படியாவது அவர் உலக இன்பங்களில் ஆசை கொள்வாரென அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.


என்ன செய்ய? இறைவன் சித்தம் வேறாக இருந்தது. மணவாழ்வில் சட்டைமுனியின் மனம் ஒருசிறிதும் ஈடுபடவில்லை. ஒருநாள் சொல்லாமல் கொள்ளாமல் தம் பெற்றோரையும் மனைவியையும் வீட்டையும் துறந்து சென்றுவிட்டார். என்றும் நிலையான வீடுபேற்றை அவர் மனம் நாடியதால் தன்வீடு அவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

'மார்கழியில் தரிசிக்க மாலவனின் திருக்கோவில்கள்' என்ற தலைப்பில், கடந்த இதழில் பெட்டிச் செய்திகள் வழங்கியிருந்தோம். அதன் தொடர்ச்சி இவ்விதழிலும் ஆங்காங்கே...

**11. பெரும்பாக்கம்**



ஒரே நேரத்தில் திருப்பதி, காஞ்சிபுரம் திவ்ய தேசங்களை தரிசித்த பலனைத் தருபவராக, விழுப்புரத்திற்கு அருகிலுள்ள பெரும்பாக்கத்தில் வேங்கடவரதராஜப் பெருமாள் வீற்றிருக்கிறார். பக்தர் ஒருவர் கனவில் தோன்றிய பெருமாள், 'தொரமானியம்' என்னும் நிலத்தில் தான் பூமிக்கடியில் புதைந்துகிடப்பதாகவும், எடுத்து கோவில்கட்டி வழிபடும் படியும் ஆணையிட்டார். அவ்விடத்தில் தோண்டியபோது ஸ்ரீதேவி, பூதேவியரோடு கிடைத்த வேங்கடவரதராஜப் பெருமாள் விக்கிரகத்தை கோவில் அமைத்து பிரதிஷ்டை செய்தனர். தனிச்சந்நிதியில் உள்ள பெருந்தேவித் தாயாரை வலம்வந்து வழிபடுவோருக்கு விருப்பம் விரைவில் நிறைவேறும். இங்குள்ள கல்யாண ஆஞ்சனேயர் திருமண தோஷம் போக்குபவராக விளங்குகிறார். மஞ்சள் பூசிய- உரிக்காத மட்டைத் தேங்காயை வைத்து பெருமாள், தாயாருக்கு அர்ச்சனை செய்து, அந்த தேங்காயை ஆஞ்சனேயர் சந்நிதியில் சமர்ப்பிக்கவேண்டும்.

பொதிகை மலையில் பல துறவியரையும் சித்தர்களையும் சந்தித்துப் பல்வேறு ஆன்மிகச் செய்திகளை அவர் பரிமாறி வாழ்ந்து வரலானார். ஆன்மிகத்தில் மேலும் மேலும் முன்னேற வேண்டுமென்பது மட்டுமே அவரது ஒரே நோக்கமாக இருந்தது. அந்தத் தருணத்தில் ஒரு விந்தையான தவ முனிவரை அங்கே சந்தித்தார் சட்டைமுனி. உரோமசர் என்பது அவர் பெயர்.

உரோமசருக்கு சிவன் நேரில் காட்சி கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. கங்கைக்கு இணையான தாமிரபரணி என்ற நதி ஒன்று அங்கே தோன்றுமென்றும்; அந்த நதியில் ஒன்பது தாமரை மலர்களை மிதக்கவிட்டால் அவை ஒன்பது வெவ்வேறு இடங்களில் கரை ஒதுங்குமென்றும்; அந்த ஒன்பது இடங்களிலும் சிவாலயங்கள் அமைப்பாயாக என்றும் சிவன் அறிவுறுத்தினாராம். (அதன்படி அமைக்கப்பட்ட திருத்தலங்களே திருநெல் வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட பல இடங்களில் இப்போது நவ கயிலாயங்களாக வழிபடப்படு கின்றன.)

அந்த உரோமசர்தான் சட்டைமுனிக்கு வழிகாட்டியாக இருந்து அவரை மேலான ஆன்மிக வழிகளில் நெறிப்படுத்தினார். அவர் மூலமாகவே எதையும் தங்கமாக்கும் ரசவாத வித்தையை அவர் கற்றுக்கொண்டார். தவிர எண்ணற்ற சித்துகளையும் அவர் அருளால் பெற்றுக்கொண்டார்.

பல மருத்துவ ரகசியங்களை அவருக்கு அறிவுறுத்தினார் உரோமசர். அவரது அறிவுறுத்தல் இன்றியும் இறையருளால் தாமேயும் பற்பல மூலிகைகளின் அற்புதப் பயன்களை சட்டைமுனி கண்டறிந்தார்.

அவற்றையெல்லாம் எளிய இனிய செய்யுள் களாக எழுதினார். அவர் மற்ற சித்தர்களைப் போல் பூடகமாக எழுதவில்லையென்றும், வெளிப்படையாகவே எழுதினாரென்றும் சொல்லப்படுகிறது. அவர் எழுதிய செய்யுளில் உள்ள விஷயங்கள் எந்த உரை விளக்கமும் தேவைப்படாமல் எல்லாருக்கும் இயல்பாகப் புரியும்படி இருந்தது.

அப்படி எழுதினால் தீயவர்கள் அதே விஷயங்களை கெட்ட செயல்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தக்கூடும் என்று நினைத்த சிலர், அந்த அரிய ஓலைச் சுவடிகள் பலவற்றை நெருப்பிலிட்டுக் கொளுத்தி அழித்துவிட்டார்கள் என்றும் கூறுகிறார்கள். ஆனால் தன் கடன் பணிசெய்து கிடப்பதே என்று நம்பிய சட்டைமுனி, தன்மேல் சீற்றம் கொண்டவர்களையும் தாம் சினந்து சீறியதில்லை. சாந்தமே வடிவாக வாழ்ந்துவந்தார் அவர்.

தம் இறுதிக் காலத்தில் திருவரங்கம் வந்தார் சட்டைமுனி. அஷ்டமா சித்துகளில் தேர்ந்த தவமுனிவராதலால், தேவைப்படும்போது லகிமா என்னும் சித்து மூலம் தம் உடலை மிகமிக லேசாக பஞ்சுபோல் மாற்றிக் கொள்ளும் வல்லமை பெற்றவர் அவர். அப்படித் தம் தேகம் பஞ்சுபோல் ஆனபின்னால் அவர் எங்குவேண்டுமானாலும் பறந்தே செல்வார். அடிக்கடி அவ்விதம் கயிலாயத்திற்குப் பறந்து சென்று சிவபெருமானை வழிபட்டுத் திரும்பி வரும் வழக்கம் அவருக்குண்டு.

சிவபக்தர் மட்டுமல்ல அவர். விஷ்ணு பக்தரும்கூட. திருவரங்கத்தில் பள்ளிகொண்ட திருமால் மேல் அவருக்கு அளவற்ற பாசம். கயிலாயம் போனால் உடனே மறக்காமல் திருவரங்கத்திற்கும் வந்து ஆனந்தமாய் பள்ளி கொண்டிருக்கும் திருமாலையும் வழிபடுவது அவர் வழக்கம்.



அப்படித்தான் அந்த முறையும் கயிலாயத்திலிருந்து திரும்பியதும் திருவரங்கம் வந்தார். ஆனால் என்ன செய்ய? அர்த்தஜாம பூஜை முடிந்து நடை சாற்றி விட்டார்கள்.

சட்டைமுனியின் மனம் வருத்தத்தில் ஆழ்ந்தது. ‘அரியும் சிவனும் ஒன்று என்ற கொள்கை உடையவன் அல்லவா நான்? திருமாலே! எல்லாம் தெரிந்த உனக்கு என் இந்தக் கொள்கைபற்றித் தெரியாதா? கயிலாயம் சென்று சிவனை வழிபட்டால் மட்டும் என் வழிபாடு முழுமை பெறாது. உன்னையும் வழிபட்டால்தானே என்னைப் பொறுத்த அளவில் வழிபாடு முழுமையானதாக என் மனம் கருதும்?

தெய்வமே! இன்றென்ன இப்படியொரு சோதனை எனக்கு! உன்னைக் காணவென்று தானே வேர்க்க விறுவிறுக்க வந்தேன்! உண்மையிலேயே லகிமா சித்து மூலம் பறந்தல்லவோ வந்தேன்!

ஆனால் என்ன பயன் சுவாமி? நான் வருவதற்குள் அப்படி உனக்கென்னப்பா உறங்குவதற்கு இத்தனை அவசரம்? கோவிலின் திருக்கதவை மூடிக் கொண்டுவிட்டாயே! நியாயமா இது? உன்னைக் காணாத கண் இருந்தென்ன இல்லாதிருந்தென்ன! என் கண்ணை நான் பிடுங்கிவிடவா?’ சட்டைமுனி இப்படித் தன்னிரக்கத்தோடு பலவிதமாக அரற்றினார். தன்னந்தனியே அவர் அரற்றிய அரற்றல் காற்று வெளியில் எதிரொலித்தது. அது அரங்கன் காதுகளை எட்டத் தவறவில்லை.

பக்தன் கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால் அப்புறம் அந்த தெய்வம் என்ன தெய்வம்? தெய்வம் கல்லாலானாலும் அந்த தெய்வத்தின் உள்மனம் மெழுகால் அல்லவா செய்யப்பட்டிருக்கிறது?

தன் அன்பான பக்தனின் துயரத்தோடுகூடிய புலம்பலைக் கேட்ட திருமால் அகம் நெகிழ்ந்தார். போதாக்குறைக்கு திருமாலின் மனைவியரான ஸ்ரீதேவியும் பூதேவியும், ‘நம் குழந்தை சட்டைமுனியை இப்படித் தவிக்க விடலாமா’ என்று கேட்டார்கள்.

உள்ளம் உருகிய திருமால் ஒரே கணத்தில் பூட்டியிருந்த ஆலயக் கதவைத் தாமே திறக்கச் செய்தார். ஏழை எளியவர்களைக் கண்டு இரங்கும் உண்மையான வள்ளல்களின் நெஞ்சம் நெகிழ்ந்து திறப்பது போல் தானாய்த் திறந்தன திருவரங்க ஆலயக் கதவுகள். அந்த அற்புதத்தைப் பார்த்த சட்டைமுனி உள்ளம் குளிர்ந்தார்.

விறுவிறுவென்று கோவிலுக்குள் சென்றார். கர்ப்பகிரகத்தின் உள்ளே சென்றார். ரசவாதத்தால் தங்கம் செய்யும் சக்தி பெற்றவராயிற்றே அவர்? ஏராளமான தங்க நகைகளைக் கழுத்தில் அணிந்து கொண்டிருந்தாரே?

‘இந்த நகைகளால் என்ன பயன்? இவை முக்தியை அளிக்குமா என்ன? இந்தத் தங்கத்தால் என்ன பயன்? இறைவனின் தாமரைப் பாதங்களை வணங்குவதால் மனதிற்குக் கிட்டும் மட்டற்ற மகிழ்ச்சியை இந்தத் தங்கம் தருமா?

தங்கம், வைரம் முதலிய எல்லாச் செல்வமும் இறைவனின் படைப்புதானே? எனவே என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் அங்காளஈஸ்வரி நமஹ

# சித்தர்கள் அருளிய தெய்வீக யந்த்ர, மந்த்ர, தந்த்ர, சித்தயோக பயிற்சிகள்

*வெற்றி நிச்சயம்!*



## இடம் : கொல்லிமலை

நாள்; JANUARY 24,25/2015 (SATURDAY, SUNDAY)

பயிற்சி காணிக்கை ரூ. 5,500 மட்டுமே

பயிற்சியளிப்பவர் ஆன்மீக ஆசான் **ஸ்வாமி M.G.P**



### பயிற்சியில் அன்பளிப்பாக வழங்கப்படுபவை

| | |
|---|---|
| 1. 96 பக்கம் கொண்ட பயிற்சி புத்தகம் | - ரூ. 3.000 |
| 2. ஸ்ரீ மகா மேரு (அ) 9 " x 9" கோல்டு பிளேட்டிங் ஸ்ரீ சக்கரம் எந்திரம் (தெய்வ சன்னதியில் சக்தியூட்டப்பட்ட சர்வ சக்தி நிறைந்தது) | - ரூ. 2.000 |
| 3. ஸ்படிக மாலை ( தெய்வ சன்னதில் பூஜிக்கப்பட்டது) | - ரூ. 600 |
| 4. இரண்டு நாட்களுக்கு உணவு,டிபன் | - ரூ. 500 |
| 5. இரண்டு நாட்கள் தங்கும் வசதி | - ரூ. 400 |
| 6. சுய ஜாதனம் பிரிண்ட் & பலன் (முன்பதிவு செய்பவர்க்கு மட்டும்) | - ரூ. 2.000 |
| அன்பளிப்பு (உத்தேச மதிப்பு) | 8.500 |

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம் பாதுகாப்பான இடவசதி உண்டு. ஜோதிடர்களுக்கு மேலும் ஒரு வரப்பிரசாதம், ஒருவர் ஜாதகத்தை கையில் வாங்கி பிரார்த்தனை செய்தவுடன் அதில் உள்ள நுட்பங்கள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் அளவிற்கு வாக்குபலிதம் ஏற்படும். கடுமையான நியம நிஷ்டைகள் இல்லை, இரண்டாவது நாள் ஜலபூஜையின்போது இறைசக்தியை நீங்கள் உணரலாம் )

1) ஓங்காரம் 2)கருட சித்து 3) வக்ரதுண்ட கணபதி 4) அஷ்ட விநாயகர் பூஜா முறை 5) நினைத்ததை தந்திடும் யந்த்ர மந்த்ர தந்த்ர பூஜா முறை 6) சஞ்சீவி மந்திரம் 7) மோகன வேலவன் மந்திரம் 8) மோகனம், வசியம், ஆகர்சனம், உஷ்சாடனம், ஸ்தம்பனம் யந்த்ர மந்த்ர பூஜா முறை 9) எதிரிகளை வெல்லும் வராகி மந்த்ரம் 10)பாமேஸ்வரி மந்த்ரம் 11) தேவதா வசிய, வேதாள வசிய மந்த்ர முறை 12) 100% அனைத்திலும் வெற்றி தரும் மஹா மந்திரம் 13) மோகன கணபதி 14)உச்சிஷ்ட கணபதி 15) பஞ்சமுக சக்திகளை ஆகர்சணம் செய்யும் பஞ்சமுக விஸ்வரூப ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் பூஜா முறை 16) கடன் தீர்ந்து செல்வம் தரும் ஸ்ரீ சொர்ண ஆகர்சன பைவர் மந்திரம் 17) காலனை வெல்லக்கூடிய காலபைரவர் மந்திரம் 18) 16 செல்வங்கள் தரும் லங்காஷ்டகம் 19) சித்தர்கள் சாபம் போக்கும் முறை 20)அசாதாரண சக்திகள் தரும் எவராலும் வெல்ல முடியாத அர்க்கள மந்திரம் 21) கோர்ட் வழக்குகளில் வெற்றி தரும் மங்கல சண்டிகா மந்திரம் 22) தட்சிணகாளி மந்திரம் 23) ஸ்ரீ நவதுர்கா மந்திரம் 24) ஸ்ரீ சுதர்சனம், ஸ்ரீ காயத்திரி மந்திரம் மற்றும் ம்(80 விதமான தோசங்கள் நீக்கி யோகம் தரும் ஜல பூஜை நேரிடை பயிற்சி மட்டும்) ஸ்வாமி.M.G.P. அவர்களால் மாணவர்களுக்காகவும் நாட்டு நலனுக்காகவும் கழுத்தளவு நீரில் நின்று ஓடும் நதி நீரில் நின்று இரண்டு மணி நேர ஜல பூஜை செய்யப்படும்.

Web.panditmgp.com Flicker; swamymgp

உங்கள் ஜாதகம் எப்படி இருந்தாலும் அதிலிருந்து மீண்டு வெற்றி பெறக்கூடிய வழிமுறைகளை சொல்லி தரப்படும்.

### *பயிற்சியின் பலன்கள்*

1. நினைத்தது நிறைவேறும் 2) எதிரிகள் தானாகவே விலகிடுவர் 3) மற்றவர்கள் மனதில் உள்ளதை அறியலாம் 4) அரசாங்க, அரசியல் நன்மையும், உயர்பதவியும் அடையலாம். 5) தொழில் வசியம், ஜனவசியம், தேவதா வசியம் ஏற்படும் 6) மன அமைதியுடன் வடிய வாழ்க்கை 7) சகல செல்வங்களும் பெறலாம் 8) வாக்குபலிதம் உண்டாகம் 9) எத்தகைய தீய சக்திகளும் நெருங்காது. 10) தெய்வங்கள், தேவதைகளை நெருங்குவதற்கான கதவைத் திறக்கலாம். 11) அசாதாரணமான சக்திகளைப் பெறலாம், சகல தோசங்களும் விலகும். தேகத்தில் பிணிகள் அண்டாது. உத்தியோக உயர்வு பெறலாம். 12) 21 நாட்களில் உறுதியாக இரத்த அழுத்த நோய், சர்க்கரை நோய் கட்டுப்படும். 100% அனைத்திலும் வெற்றி பெறலாம். நாம் விரும்புபவர் நம்மை தேடி வருவர்.

**தொடர்புக்கு**

**G.முனீஸ்வரன்**
**சர்வ சாஸ்திர வித்யா பீடம்**
34/20A, நாதன் காம்ப்ளக்ஸ், ஸ்கீம்ரோடு,
பஸ்டாண்டு, திண்டுக்கல்-3.

**ரூ. 2000/- செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்**

G.MUNEESWARAN, Dindigul என்ற பெயருக்கு மணியார்டர் அல்லது D.D.(OR) I.C.IC.I Bank, Dindigul A/c No. 605801511328 அனுப்பவும்.

**செல் : 9842140131, 8903551587**

நாகநந்தா, ஏர்அழிஞ்சல், சிவனார் வேம்பு, மிளகுசாரணை, நத்தைச்சூரி, யானை வணங்கி போன்ற மூலிகை ரட்சைகள் கிடைக்கும். உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் ஆபரணங்களாக இருக்கும் இத்தனை தங்க அணிகலன்களும் செல்வத்தின் அதிபதியான லட்சுமிதேவியின் கணவனாகிய அரங்கனுக்கே உரியது. அவனல்லவோ தங்கத்தைப் படைத்த தயாநிதி!'

சட்டைமுனி ஒவ்வொரு தங்க ஆபரணமாக அவிழ்த்து அவற்றை திருமாலின் திருமார்பில் சட்டைபோல் மார்பு மூடும்படியாக அணிவித்து அழகு பார்த்தார். திருவரங்கத் திருமாலின் அழகில் அவர் மனம் சொக்கிக் கிறங்கியது. சுற்றிலும் என்ன நடக்கிறதென்பதை அவர் அறியவே பல கணங்கள் ஆகின.

ஆம்; எங்கோ யார் யாரோ தடதடவென்று ஓடிவரும் சப்தம். பெரும் மக்கள் கூட்டம் ஆலயத்தினுள்ளே கூச்சலோடு பிரவேசித்தது. இவர்கள் எல்லாரும் எதற்கு வந்திருக்கிறார்கள் இங்கே? சட்டைமுனிக்கு எதுவும் புரியவில்லை.

'என்ன அக்கிரமம் இது! பூட்டிய நெடுங் கதவை எப்படித் திறந்தான் இந்தத் திருடன். கதவைத் திறந்தது மட்டுமல்லாமல் கர்ப்பகிரகத்தின் உள்ளேயே வந்து நிற்கிறானே! ஆசாரம் கெட்டவன். இறைவனின் மார்பை அலங்கரிக்கும் தங்க நகைகளைத் திருடவந்த திருடனே இவன். சந்தேகமே இல்லை. அடியுங்கள் இவனை.' மக்கள் கூட்டம் கூச்சலிட்டது.

அட்டையில்:
**திக் பாலகர்**
**நிருதி பகவான்**
**(தென்மேற்கு திசைக்கு அதிபதி)**

அதற்குள் யாரோ அரசனுக்குத் தகவல் அனுப்பினார்கள்- திருவரங்கக் கோவில் இறைவன் நகைகளைத் திருட வந்திருக்கிறான் ஒரு திருடன் என. அரசனும் கோவிலுக்குள் ஓடோடி வந்தான்.

மக்கள் தன்னை அடிக்க நெருங்குவதையும் அரசன் தன்னை சீற்றத்தோடு பார்ப்பதையும் பார்த்தார் சட்டைமுனி. அவருக்கு உண்மையிலேயே ஒன்றும் புரியவில்லை. 'தன்னைத் திருடன் திருடன் என்று எல்லாரும் சொல்கிறார்களே? நான் ஆலயக் கதவைத் திறந்து கொண்டு வந்தேனாமே? கதவு தானாய் அல்லவோ திறந்தது! இதைச் சொன்னால் இந்த ஆட்டுமந்தை மக்கள் கூட்டம் நம்புமா? இல்லை அரசன்தான் அந்த அற்புதத்தை நம்பி விடுவானா?

இறைவன் கழுத்திலிருக்கும் நகை ஏற்கெனவே இருந்த நகையா- இப்போது புதிதாக வந்த நகையா என்பதை சோதித்துப் பார்க்க வேண்டுமென்றுகூட மன்னனுக்குத் தோன்றவில்லையே? அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி. இன்று என்மேல் திருட்டுக் குற்றம் சுமத்தி என்னைப் பிடிப்பதற்கு இத்தனை பேர் வந்திருக்கிறார்களே? நல்ல கௌரவம்தான் எனக்கு.'

தன் நினைவுகளால் சட்டைமுனி கடகடவென்று நகைத்தார். 'திருடன் திருட்டுவிழி விழிப்பது மட்டுமல்லாமல் எந்த அச்சமுமே இல்லாது சிரிக்கிறான் பார்.' இப்படிச் சிலர் கூச்சலிட்டார்கள்.

'தெய்வமே! உண்மை எது பொய் எது என்று ஆராயாமல் நடவடிக்கை மேற்கொள்ளும் இந்த மூட ஜனங்களோடு நான் இனியும் வாழ வேண்டுமா?' என்று எண்ணினார் சட்டைமுனி. பாய்ந்து சென்று பரந்தாமனின் தாமரைப் பூம்பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டார்.


அடுத்த கணம் அந்த அற்புதம் நிகழ்ந்தது. இறைவனின் திருமேனியில் சட்டைமுனியின் உடல் கலந்து மறைந்தது. இறைவன் திருமுகத்தில் அளவற்ற மந்தகாசம் தோன்றியது. இறைவன் திருமேனி முன்னிலும் கூடுதலாய்ப் பொலிவு காட்டியது. 'என் பக்தன் சட்டைமுனி இந்தத் திருவரங்கத்திலேயே ஜீவசமாதி அடைந்துவிட்டான்' என அசரீரி ஒலித்தது.

அரசனும் மக்களும் விக்கித்து நின்றார்கள். அவர்கள் மன்னிப்பு வேண்டி அரங்கனைத் தொழுது அரற்றினார்கள். 'சட்டைமுனி உயர்ந்த ஆத்மா. அவனிடம் விருப்பு வெறுப்புகள் கிடையாது. அவன் உங்கள் யார்மேலும் கோபம் கொள்ள மாட்டான். கவலைப்படாதீர்கள். அவனுக்கு முக்தி வழங்கவே நாம் இந்தத் திருவிளையாடல் நிகழ்த்தினோம்!' என அசரீரி மீண்டும் ஒலித்தது.

யாரும் அடிக்காமலேயே ஆலய மணிகளெல்லாம் கணீர் கணீரென அடித்தன. ஒரு கற்பூர ஜோதி தானாய்த் தோன்றி அரங்கனைச் சுற்றிவந்து விண்ணில் மறைந்தது. 'சட்டைமுனியின் புகழ் வாழ்க' என்ற மக்களின் கோஷம் விண்ணைப் பிளந்தது. சட்டைமுனி இன்றும் அருளுடலோடு வாழ்ந்துவருகிறார். தன்னை நாடிவரும் அன்பர்களின் கோரிக்கையை, என்றும் வாழும் அவரது ஆன்மா நிறைவேற்றி வருகிறது.


(தொடரும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லைப்பிடாரி காளியம்மன்

# தன் எல்லைக்கு வருவோர்க்கு எண்ணியதை அருளும்

# வரகூர் எல்லைப்பிடாரி காளியம்மன்!

ஃ எஸ்.பி. சேகர்

அம்மனின் அருளை எப்படி அளவிட முடியாதோ, அதுபோல அவளது அவதாரங்களையும் கணக்கிட்டுவிட முடியாது. காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், மதுரையிலே மீனாட்சியாகவும் மட்டுமல்ல; ஊர்தோறும் மாரியம்மனாக, காளியம்மனாக, எல்லையம்மனாக, செல்லியம்மனாக, முண்டகக்கன்னியாக, பகவதியாக அவள் அருள்புரிகிறாள்; பக்தர்களின் துயர் துடைக்கிறாள்; ஊரைக் காவல் காக்கிறாள். அப்படிப்பட்ட அம்மன் திருவண்ணாமலைக்குத் தெற்கே வரகூரில் எல்லைப் பிடாரி காளியம்மனாக அருளாட்சி செய்கிறாள்.

அம்மனின் கோப வடிவமே காளிரூபம். ஒருசமயம் ஈசனுக்கும் உமாதேவிக்கும் ஆடற் கலையில் சிறந்தவர் யாரென்ற போட்டி நிகழ்ந்தது. பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் திரண்டிருக்க, சிவபெருமானும் பார்வதியும் நடனமாடினர். இருவருமே சரிநிகராக ஆடிக்கொண்டிருந்தனர். அப்போது சிவபெருமான் ஒரு திருவிளையாடல் புரிந்தார். தமது திருச்செவியிலிருந்த குண்டலத்தைக் கீழே விழச்செய்து, அதைத் தமது கால்விரல்களால் பற்றியெடுத்து, காலை உயரே தூக்கி தன் செவியில் அணிந்து கொண்டார். பார்வதிதேவி அவ்வாறு செய்ய நாணி ஒதுங்கி நின்றாள். சிவபெருமான் வென்றதாக அனைவரும் ஒப்புக்கொள்ள, தேவி சினங்கொண்டாள். அவளது கோபரூபம் காளியாக உருக்கொண்டது. காளியானவள் பல்வேறு அசுரர்களை வதம்செய்தாள். அதற்காக இறைவன் நடத்திய திருவிளையாடலே மேற்கண்ட நடனப்போட்டி.

வரகூர் ஏரிக்கரையில், இயற்கையழகும் அமைதியும் தவழுமிடத்தில் குடிகொண்டுள்ளாள் எல்லைப்பிடாரி காளியம்மன். இவள் சுயம்பு வடிவானவள்.


ஊராட்சி மன்றத் தலைவரும் கோவில் நிர்வாகியுமான தனக்கோட்டி, "கடந்த காலத்துல வறட்சி காரணமா இங்குள்ளவங்க வரகு, கேழ்வரகைப் பயிரிட்டு அறுவடை செஞ்சு சாப்பிட்டாங்களாம். இந்த ஊர்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

### 12. சங்கரத்தேவன்பட்டி




மதுரையிலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவிலுள்ள கல்லுப்பட்டியிலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவிலுள்ள தலம். இங்குள்ள ஸ்ரீநிவாசப்பெருமாள் திருக்கோவில் 500 வருடங்கள் பழமையானது. ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக, கல்யாண கோலத்தில் கிழக்குநோக்கி காட்சிதரும் மூலவரை தரிசித்தால், வாழ்வில் அனைத்து செல்வங்களையும் பெறமுடியும். பல காரணங்களால் தடைப்பட்ட திருமணங்கள் நடைபெறும். பிள்ளை பாக்கியம் விரைவில் கிடைக்கும். இத்திருக்கோவிலில் திருமணம் வேண்டி கோபூஜை நடத்தி வழிபடுகின்றனர். பிரார்த்தனை நிறைவேறியதும் எடைக்கு எடை அரிசி, பயறு, வெல்லம், பருப்பு ஆகியவற்றை நேர்த்திக் கடனாக வழங்குகிறார்கள்.

வரகு விளைச்சல் அமோகமா இருந்த தால வரகூர்னு பேர் வந்ததா சொல்றாங்க. ஏழை எளிய மக்களின் காவல் தெய்வமான பிடாரியம்மன் பக்தர்கள் கேட்கிற வரத்தையெல்லாம் அள்ளி வழங்குறதால வரகூர்னு பேர் வந்ததாகவும் சொல்றாங்க" என ஊரின் பெயர் விளக்கத்தை ஆர்வத்துடன் சொன்னார்.

கோவில் பூசாரியான சுரேஷ், "அம்மனை எந்த நேரமும் வழிபடலாம். ஒவ்வொரு மாசமும் அமாவாசை முன்னிரவில் மிளகாய் யாகமும், பௌர்ணமி பகலில் பழங்களைக்கொண்டு யாகமும் செய்யறோம். ஆயிரக்கணக்கான மக்கள்வந்து கலந்துக்கிட்டு அம்மனோட அருள்பெற்றுப் போறாங்க. இங்க கட்டாய காணிக்கை வசூல் எதுவும் கிடையாது. அம்மனால் அருள்பெற்ற வங்க அவங்களே விரும்பிவந்து நிறைய உதவிகளைச் செய்றாங்க. பொதுவா ஒரு மிளகாய் கருகினாலே நெடி தாள முடியாது. ஆனா இங்க யாகத்துல கிலோ கணக்குல பக்தர்கள் தர்ற மிளகாயைக் கொட்டுவோம். நெடியோ, கண் எரிச்சலோ கொஞ்சமும் வராது. இந்த அம்மன் ஏழை எளிய பக்தர்களின் அம்மன். வந்தவங்களை வாழவைக்கிற அம்மன். இவளோட சக்தியை நீங்க பக்தர்கள் வாயாலே கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்" என பக்தர்களின் பக்கம் நம்மைத் திருப்பிவிட்டு ஒதுங்கிக்கொண்டார்.

முதலில் நாம் அணுகிய பக்தரான தொழு வந்தாங்கல் கோவிந்தன் தன் உறவினர் வாழ்வில் அம்மன் செய்த அற்புதத்தைப் பகிர்ந்துகொண்டார். "என் சொந்தக்காரர் பாண்டுரங்கனோட மகனுக்கு எங்கெங்கோ பெண் தேடினாங்க. ரொம்ப நாளா எதுவும் அமையலை. மகனுக்கு வரன் அமையாத வருத்துத்துல அவர் ஒருநாள் கால்போன போக்குல கிளம்பிட்டார். நடந்து நடந்து காலும் மனமும் களைச்சபோது, வரகூர் அம்மன் கோவில்கிட்ட வந்து சேர்ந்திருந்தார். குளத்துல




வரகூர் காளியம்மன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதன்- நசிமா




தனக்கோடி


சுரேஷ்


கோவிந்தன்


மணிரங்கன்

முகம் கழுவி, தண்ணி குடிச்சுட்டு சந்நிதிக்கு வந்த அம்மனைவணங்கிதன் மனக் குறையைச் சொன்னார். அன்னைக்கு முழுக்க கோவில்லயே தங்கிட்டு மறுநாள் நிம்மதியா ஊருக்குக் கிளம்பினார். அம்மனும் அவரைக் கை விடலை. சீக்கிரமே அவர் பையனுக்கு மணப்பெண் அமைஞ்சுது- திருமணம் நடந்தது. இப்போ குழந்தைகளோட அந்த தம்பதி குறையில்லாம இருக்காங்க. தன்னோட வேண்டுதலை நிறைவேற்றின. அம்மன் கோவிலுக்கு, வருஷந்தோறும் வந்து அன்னதானம் பண்ணிட்டுப் போறார் பண்டுரங்கன். அம்மனிடம் சொன்னாலே போதும்; குறைகளெல்லாம் தீரும்" என்கிறார் நம்பிக்கையுடன்.

நல்லவன்பாளையம் தவமணிக்கு நேர்ந்தது வேறுவிதமான அனுபவம். "பட்ட காலிலே படும்கிறமாதிரி, வியாபாரத்துல நஷ்டத்துக்கு மேல நஷ்டம். கடன், வட்டிச்சுமை. ஊரையே காலி பண்ணிடலாம்னு முடிவெடுத்துட்டேன். அந்தசமயம் பக்கத்து வீட்டம்மா, 'ஒருமுறை வரகூர் எல்லையம்மனை கும்பிட்டுட்டு வா'ன்னு சொன்னாங்க. 'அம்மன் மட்டும் என்ன செஞ்சுடப்போறா'ன்னு கொஞ்சம் நம்பிக்கையில்லாமதான் வந்தேன். ஆனா அம்மன் தரிசனத்துக்கப்புறம் மனசுல ஒரு தெளிவும் தெம்பும் வந்துச்சு. முதல்லயிருந்து தொடங்குவோம்னு ஒரு பால்மாடு வாங்கினேன். இன்னைக்கு பத்து மாடுங்க, ஒரு ஓட்டல் கடைனு குறை சொல்லமுடியாத இடத்துக்கு வந்துட்டேன். அம்மன் கருணையால் நல்ல வியாபாரம். ஒவ்வொரு அமாவாசையிலயும் நடக்கிற மிளகாய் யாகத்துல தவறாம கலந்துக்குவேன். அம்மனோட மகிமை அனுபவிச்சவங்களுக்குதான் தெரியும்" என்கிறார்.

மூங்கில்துறைப்பட்டு பூங்காவனம் அம்மாள், 'கேட்பதை அருள்பவள் இந்த அம்மன்' என்கிறார். அப்படி என்னதான் அம்மனிடம் அவர் கேட்டுப் பெற்றாராம்?

"எனக்கு ரெண்டு பெண்பிள்ளைங்க. நல்லபடியா கல்யாணம் செஞ்சுவைச்சேன். அம்மனும் குறைவைக்காம ரெண்டு பேருக்கும் ஆளுக்கு ரெண்டு பெண் பிள்ளைகளைக் கொடுத்தா. அம்மனே பேத்திகளாக வந்து பிறந்ததா எனக்கு சந்தோஷம். இருந்தாலும் ஒரு ஆண் குழந்தை வேணும்ங்கிற ஏக்கம் இருக்காதா? அம்மனைத் தேடிவந்து வேண்டுதல் வெச்சேன். அம்மனும் ரெண்டு பேருக்கும் ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்துட்டா. பேரன்களுக்கு ஒரு வயசானதும், எல்லா பிள்ளைகளையும் கூட்டிவந்து, அம்மனுக்கு கிடாவெட்டி பூஜை போட்டு, பிள்ளைகளுக்கு மொட்டை போட்டு காதுகுத்தி நேர்த்திக் கடனை நிறைவேத்திட்டேன்" என்கிறார் உற்சாகமாக.

இவர்கள்தான் என்றில்லை. குடும்பமும் உறவும் கைவிட, வாழ்க்கையில் தத்தளித்துக் கொண்டிருந்த மதன்- நசிமா தம்பதிகளுக்கு நம்பிக்கை தந்து, வாழ்வில் வெற்றிபெறவைத்ததும்; ஒரு மிகப்பெரிய தொழில்வாய்ப்பு வந்து, கையில் பணமில்லாது தவித்து நின்ற மணிரங்கன்- ரேகா தம்பதியின் குறை போக்கி, கிடைக்காதென்ற நிலையிலிருந்த வங்கிக் கடனை சாத்தியமாக்கியதும் வரகூர் எல்லைப்பிடாரி காளியம்மனின் அருள்தானென்று உளம்நெகிழ்ந்து கூறுகிறார்கள் சம்பந்தப்பட்டவர்கள்.


பூங்காவனம்


தவமணி


ரேகா

**கள்ளக்குறிச்சி- திருவண்ணாமலை சாலையில், திருவண்ணாமலைக்குத் தெற்கே 15 கிலோமீட்டரிலும், கள்ளக்குறிச்சிக்கு வடக்கே 30 கிலோமீட்டரிலும் அமைந்துள்ளது வரகூர். போதிய வாகன வசதிகள் உண்டு.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ விஷ்ணு பகவான் துணை

# சகல வளமும், நலமும் வழங்கும் அபூர்வ மூலிகைப் பொருட்கள்

## ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல்' மூலிகை சித்தர் ஞானகுரு

அனைத்து மூலிகைகளும் சித்தர் முறைப்படி உயிருடன் எடுத்து உங்களுக்காக 48 நாட்கள் அதற்குண்டான உரு ஏற்றி உயிரோட்டமாக உங்களது ஆயுட் காலம் வரையில் பலன் அளிக்கக்கூடியது.

**ஐஸ்வர்யம் பண வரவு, வளர்ச்சி, சந்தோஷம் பெருக்கும் மூலிகை பவுடர் 10 பாக்கெட் ரூ.2000/-** ஒரு பாக்கெட்டுடன் 100 கிராம் நல்லெண்ணை கலந்து தினமும் ஒரு வேளை தீபம் ஏற்றவும். வீட்டில் ஐஸ்வர்யம், பண வரவு, சுபநிகழ்ச்சி, சந்தோஷம் உண்டாக்கும். வியாபாரத்தில் அதிக வாடிக்கையாளர்கள், அதிக பண வரவு, அதிக இலாபம், அதிக புகழ் ஏற்படும்.

**வசிய பூசு மஞ்சள் ரூ.2000/-** பெண்கள் காலையில் குளிக்கும் போது தடவி குளிக்க முக வசியம், அதிக பாசம், மாமியார், நாத்தனார் வசியம், முக வசியம், எடுத்த காரியம் அனைத்தும் வெற்றி, புத்ரதோஷம் உடல் நல முன்னேற்றம் பல வசீய விஷயத்துக்கும் உகந்தது.

**108 மூலிகை விநாயகர் ரூ.2500/-** வீடு அல்லது வியாபார பூஜையில் வைப்பதால் சுப நிகழ்ச்சிகள், பணவரவு, ஐஸ்வர்யம், மனநிம்மதி, சந்தோஷம், தொழில்மேன்மை ஏற்படும்.

**மூலிகை விளக்கு திரி ரூ.3000/-** தினமும் மாலையில் ஒரு மணி நேரம் தீபம் ஏற்றி வர வாஸ்து தோஷம், கிரகதோஷம், கெட்ட எண்ணங்கள், குடும்பச் சண்டை, அன்னியோன்ய குறைவு, உறவினர் விரோதம், காரியத்தடை, கடன் தொல்லை, வியாபார வசியம், பலவித தொல்லைகள் நீங்கும். தீப விளக்கு இலவசமாக வழங்கப்படும்.

**ஆஞ்சநேயர் தாயத்து ரூ.3000/-** இதனை அணிவதால் ஏவல், பில்லி, சூன்ய கோளாறு, நவகிரக தோஷங்கள், சித்த பிரமை, ஞாபக மறதி, இரவில் அலறுதல், கெட்ட கனவு, சண்டை சச்சரவுகள் யாவும் விலகும்.

**பஞ்ச ஜோதி தாயத்து ரூ.3000/-** இதனை அணிவதால் ஜோதிடக்கலை, மந்திர சாஸ்திரங்களுக்கு அவசியமான மூலிகை வாக்கு சக்தி, குறி சொல்ல, உபதேசிக்க, ஞானம் வளர எடுத்தது ஈடேறும்.

**சரஸ்வதி தாயத்து ரூ.5000/-** இதனை அணிவதால் கல்வியில் ஊக்கம், ஞாபக மறதி, குறைந்த மேற்படிப்புகளில், பரீட்சையில் வெற்றி. பதவி சம்பந்தப்பட்ட பரீட்சைகளில் வெற்றி.

**சந்தான கோபாலன் தாயத்து ரூ. 5000/-** புத்ரபாக்கியம் சம்பந்தமாக ஜாதகப்படி ஸ்திரி சாபம், கோலாபம், மாதுார், பிதுர்சாபம், தெய்வ சாபம், சர்ப்ப சாபம் போன்ற சாபத்தை நீக்கியும், பூர்வ கர்ம பாவத்தை நீக்கி இஷ்டபுத்திர சந்தான கோபாலன் பிராப்திரயை தர வல்லது.

**கணவன்-மனைவி வசிய மை ரூ. 5000/-** கணவன்-மனைவி சண்டை சச்சரவுகள், அன்யோன்ய குறைவு, குடும்பத்தில் பிரிவினை முதலியவைகளுக்கு சர்வ நிவாரணம், இரண்டு மாதத்தில் முன்னேற்றம்.

**ஆண், பெண் வசியத்தன்மை மை ரூ.5000/-** காதலன்-காதலி காதல் வசியம், காதல் தோல்வி, தாம்பத்திய சுகம் இல்லாமை, காதலர்களுக்குள் ஏற்படும் தடங்கள் யாவும் நீங்கும்.

**மகர குபேர மகாலட்சுமி வசிய அஞ்சனம் மை ரூ.5000/-** எப்படிப்பட்ட தரித்திரமும் போகும். லாட்டரி, ரேஸ், ஸ்பெகுலேஷன், பங்கு வியாபாரம் இவைகளில் பெரும் அதிர்ஷ்டமும் யோகமும் பெருகும். லாப சக்தியும் உண்டாக்கும். பூரண லட்சுமி யோகம் உண்டாகும்.

**ஸ்ரீ மகாலட்சுமி ஐஸ்வர்ய மூலிகை ரூ.15,000/-** வீடு அல்லது அலுவலகத்தில் வைத்து காலை, மாலை தூப காட்டி வர உங்களுக்கு மகாலட்சுமியின் பரிபூரண அருள் கிடைத்து பணவரவு, சந்தோஷம், வளர்ச்சி ஏற்படும்.

**பிரணவ மூலிகை ரூ.3000/-** இதனை இடுப்பில் இருக்கமாக கட்டிக்கொள்ளவும். பிரணவம் என்றால் உயிர் என்று அரத்தம். இன்னுமொரு உயிர் உங்களுக்கு வரும்போது சோம்பல் நீங்கி, சுறுசுறுப்பு, தீயவை நீங்கி சகல வசியம், ஐஸ்வர்யம் உண்டாகும். சகலவலி நீங்கி நிவாரணம் அடையலாம். தாம்பத்திய உறவில் பூரண சுகம் பெறலாம்.

**நாகநந்தா மூலிகை தாயத்து ரூ.3000/-** இதனை அணிவதால் இராகு, கேது தோஷ நிவர்த்தி ஆவதுடன் வாழ்நாள் முழுவதும் இல்லறம் சிறப்பாக இருக்கும். மேலும் பாம்பு, விஷ ஜந்து உங்களிடம் நெருங்காது.

**மலை தாங்கி தாயத்து ரூ.5000/-** தாயத்து அணிந்த அன்றே நீங்கள் சாதாரணமாக 20 கிலோ தூக்குபவர் என்றால் எளிதாக 50 கிலோ தூக்குவீர்கள். உடல் வலி நீங்கி எதையும் சமாளிக்கும் ஆற்றல், மன பலம், உடல் நலம் பெருகும். விளையாட்டு வீரர்களுக்கு மிகவும் உகந்தது. மிகவும் சிறப்பான கிடைக்காத அரிய அபூர்வ மூலிகை.

**ர்வ வசிய மாயூரா சிகை தாயத்து ரூ.5000/-** இதனை அணிவதால் கணவன்-மனைவி வசியம், ஆண்-பெண் வசியம், ராஜவசியம், ஜனவசியம், தனவசியம், சகல வசியங்களும் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**ஓர் அழிஞ்சில் மூலிகை குச்சி ரூ.5000/-** விரும்பியவரை நேரில் வரவழைக்கும் அபூர்வ மூலிகைக் குச்சி, இதன் விதை கீழே விழும்போதே மரத்தில் ஒட்டிக்கொள்ளும் வசியத்தன்மை உடையது காலை, இரவு உச்சத்தலை முதல் உள்ளங்கால் வரையில் விரும்பியவரை நினைத்து தடவ வேண்டும்.

**நினைத்ததை நடத்தும் நத்தைச் சூரி தாயத்து ரூ.15,000/-** எதைச் சொன்னாலும் அதனைச் செய்யும் நத்தைச் சூரி சித்தர்கள் வாக்கு உங்கள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**ஆதி அற்புத சர்வலோக வசிய மூலிகை தங்க தாயத்து ரூ.33,000/-** இந்த தாயத்தைத்தான் எல்லா சித்தர்களும் அணிந்து எல்லா சித்தும் செய்தார்கள். இதனை கழுத்தில் அணிந்த அன்று முதல் ஆயுள் வரையில் சந்தோஷம், சகல வசியம், தொழில் வெற்றி, பண வரவு, ஆரோக்கியம் போன்ற சகலமும் உண்டாகும்.

எப்படிப்பட்ட செய்வினை, சூன்யம், ஏவல், தொழில் முன்னேற்றம், கடன் தொல்லை, கணவன் மனைவி பிரச்சனை அனைத்துப் பிரச்சனைக்கும் சித்தர் தெய்வீக பூஜை, பரிகாரங்கள் மூலம் முழுஉத்திரவாதத்துடன் நிவர்த்தி செய்து தரப்படும்.

- நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் மட்டுமே நல்லதே நடக்கும். உங்களது பிரச்சினைக்கு ஏற்ப பொருட்களின் விபரம் பயன், பலன், விலை விபரம், பொருட்களை வாங்கும் விபரம் அனைத்தும் தெள்ளத் தெளிவாக உள்ளது. பொருள் வாங்கும்போது மீதி விபரம் தெள்ளத் தெளிவாக சொல்லப்படும். தேவையில்லாத கேள்விகளுக்கு கண்டிப்பாக பதில் இல்லை.
- ஜோதிடமோ, ஆலோசனையோ சொல்வது கிடையாது.
- நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் போன் செய்துவிட்டு நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது பொருளின் விபரம், உங்களின் தெளிவான முகவரி, செல் நம்பருடன் மணி ஆர்டர் ஞானகுரு என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும். அல்லது R.GNANASEKARAN என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்க டிமாண்ட் டிராப்ட் எடுத்து ஞானகுரு விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். பணம் கிடைத்தவுடன் பொருள் கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.



முன் அனுமதிக்கும் தொடர்புக்கும் : 95002 19209

ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல் சித்தர் ஞானகுரு

பியூட்டி மூன் லாட்ஜ், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, டவ்ட்டன்

புரசைவாக்கம், சென்னை - 600 007. ( டவுட்டன் சிக்னல் அருகில் )

Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⌘ சிவஸ்ரீ தி.ஸா. சண்முக சிவாச்சாரியார்

# நம்பிக்கையுடன் பின்பற்ற வேண்டிய பிரம்மாணங்கள்!

'நம்பிக்கை உடையவர்களிடம் மட்டும் பேசு' என்று சாஸ்திரம் சொல்கிறது. நாம் இந்த மனிதப்பிறவியை எளிதில் அடைந்து விடவில்லை. 'புல்லாகிப் பூண்டாகி புழுவாகி மரமாகி' என்று சொல்வதுபோல பலப்பல பிறவிகளுக்குப் பின் இந்த மனிதப்பிறவியை அடைந்திருக்கிறோம். அப்படி அடைந்தும் இதன் அருமை உணராமல் வாழ்கிறோம். ஆன்மிக நம்பிக்கை என்பதும் சாதாரணமாக வாய்த்துவிடுவதல்ல. அதுவும் முயன்று முயன்று அடையக்கூடியதே. அப்படி ஆன்மிக நம்பிக்கை நம்மிடம் துளிர்விட்ட பின்பு, அந்த நம்பிக்கையற்றவர்களிடம் பேசுவதைத் தவிர்க்கவேண்டும். ஏனெனில் அந்த நம்பிக்கை குறைந்துவிட நேரலாம். காலம் என்பது மிக முக்கியமானது. தவறவிட்ட காலத்தை மீண்டும் அடையமுடியாது. எனவே நமது நேரத்தை இறை நம்பிக்கையற்றவர்களிடம் பேசி வீணே செலவழிக்காமல் ஆன்மிகப் பாதையில் முன்னேற ஒவ்வொரு நொடியையும் செலவிடவேண்டும். இவற்றை யெல்லாம் சாஸ்திரப் பிரம்மாணங்கள் நமக்கு விளக்குகின்றன.



பிரம்மாணம் என்ற சொல்லுக்கு உண்மை, ஆணை, அத்தாட்சி, விதி, ஆதாரம், முதல்வேதம், உண்மையை அறிவதற்கு உதவும் சாதனம் என பல பொருட்கள் உள்ளன. இதிலும் வகைகள் உள்ளன.

பிரத்யட்ச பிரம்மாணம் என்றால் நேரடியாகக் காண்பதன்மூலம் ஒரு விஷயத்தை அறிவது. அனுமானப் பிரம்மாணம் என்றால் யூகத்தின்மூலம் அறிவது. 'யத்ர யத்ர தூபாதத்ர தத்ர வன்னி' என்பார்கள். எங்கெல்லாம் புகை இருக்கிறதோ, அங்கெல்லாம் நெருப்பு இருக்கிறதென்று பொருள். நாம் நெருப்பை நேராகப் பார்க்கவில்லை. ஆனால் புகையைப் பார்த்து, அங்கே நெருப்பு இருக்கிறதாக அறிகிறோம். ஒரு சங்கு ஊதுகிறது. அதைக் கேட்டதும் 'இப்போது எட்டு மணி' என்று உணர்கிறோம். இப்படி அனுமானத்தின் மூலம் அறிவது அனுமானப் பிரம்மாணம். சப்தப் பிரம்மானம் என்றும் உண்டு. வார்த்தைகள் மூலம் அறிந்து கொள்வது. புத்தகங்கள்கூட சப்தப் பிரம்மாணங்கள்தான்.

இது சரியா அல்லது தவறா என



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

**13. செண்பகராமநல்லூர்**




திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி மூலக்கரைப்பட்டி சாலையிலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவிலுள்ள தலம். இத்திருக்கோவிலை செண்பக மார்த்த மன்னர் கட்டியதாகக் கூறப்படு கிறது. அந்த மன்னர் இராமேஸ்வரம் சென்று இங்கு திரும்பியபோது கருமணியாற்றில் வெள்ளம் கரைபுரண்டோடியது. அங்குள்ள அரியக் குளத்தில் தற்காலிகமாகத் தங்கியபோது அவரது கனவில் தோன்றிய பெருமாள் இத்தலத்தில் கோவில் கட்டும்படி கூற, மன்னரும் பெருமாளுக்கு கோவில் எழுப்பினாராம். இறைவனின் திருப்பெயர் ஜெகந்நாதப் பெருமாள். கருவறை வாயிலிலுள்ள துவாரபாலகர் சிலையின் காதில் ஒரு குச்சியை நுழைத்தால், அது வாய் வழியாக வெளியே வருவதைக் காணலாம். இந்தப் பெருமாளை வேண்ட, விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்குமென்பது ஐதீகம். எனவே இவர் 'டிரான்ஸ்பர் பெருமாள்' என அழைக்கப்படுகிறார்.

அறிந்துகொள்ள உதவுபவை பிரம்மாணங்கள். இதுதான் சரியானது என இறுதி முடிவை உணர்த்துபவை. அப்படியானால் சொற்களெல்லாம்- சப்தங்களெல்லாம் பிரம்மாணங்களாகிவிட முடியுமா? 'ஆப்த வாக்கியம் சப்தஹ'- ஆப்தனால் சொல்லப்பட்டது சப்தம். ஆப்தன் என்றால் யார்? 'ஆப்தஸ்து யதார்த்த வர்த்தா'- எது உள்ளதோ அதை அப்படியே சொல்பவர். ஆப்த நண்பன் என்று சொல்லுகிறோம். நாம் செய்யும் நல்ல செயல்களைப் பாராட்டுவது மட்டுமல்ல; நமது தவறுகளையும் சுட்டிக்காட்டுபவனே ஆப்த நண்பன். எதையும் மாற்றிச் சொல்பவனல்ல. அதுபோல எது உண்மையோ அதைச் சொல்பவன் ஆப்தன். அவன் யாரென்றால் அவன்தான் இறைவன். அதனால்தான் வேதங்கள், பிரம்மாணங்கள் எல்லாம் இறைவனால் சொல்லப்பட்டதென்கிறோம்.

எனவே, நமது மதக்கோட்பாடுகளை- பிரம்மாணங்களை நாம் தவறாமல் பின்பற்ற வேண்டும். என்ன சொல்லப்பட்டுள்ளதோ அதை அப்படியே பின்பற்றவேண்டும். இது மிகவும் முக்கியமானது. பொது இடங்களில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்- எத்தகைய ஒழுக்கத்தைப் பின்பற்றவேண்டும்- ஆலயங்களில் எவ்வாறு வழிபடவேண்டுமென்று பலவற்றையும் சாஸ்திரங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

ஒரு யாகம் நடக்கிறதென்றால், அந்த யாகத்தை நடத்தும் சிவாச்சாரியார்கள் அதற்கான வழிமுறைகளை சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். நிராகாரோ- மிதாகாரோ என்று சொல்வார்கள். நிராகாரோ என்றால் உணவே உண்ணாமல் யாக காரியங்களில் ஈடுபடுவது. மிதாகாரோ என்றால் கொஞ்சமாக உண்ணுவது. கடந்த மாதம் நமது காளிகாம்பாள் ஆலயத்தில் பத்து நாட்கள் யாகம் நடந்ததை அறிவீர்கள். அந்த பத்து நாட்களும் நான் என்ன செய்தேனென்றால், யாகம் நடக்குமிடத்தில் யாக அவிஸ் என்று உப்பில்லாத அன்னம் வைத்திருப்



## காளிகாம்பாள் அற்புதங்கள் - 7




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015

# திருக்கணித காலண்டர்

திருக்கணித முறைப்படியும், இந்திய ராஷ்டிரிய பஞ்சாங்கத்தைத் தழுவியும் இந்தியாவிலிருந்து வெளிவரும் ஒரே தமிழ் தினசரி காலண்டர் குமார விகடன் காலண்டர்களே. காஞ்சி மாநகரிலிருந்து 4-ஆவது தலைமுறையாக தொடர்ந்து வெளிவரும் இக்காலண்டரில் சிறப்பம்சமாக திதி, நட்சத்திரம், யோகம் முதலிய அனைத்தும் எளிதில் எல்லாருக்கும் புரியும் வண்ணம், நாழிகை, விநாடிகளை முற்றிலும் தவிர்த்து, பொதுவழக்கத்தில் உள்ள கடிகார நேரப்படி குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், அசுப திதிகளான பிரதமை, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை; அசுப யோகங்களான மரணயோகம், பிரபலாரிஷ்ட யோகங்கள்; கரிநாள் போன்ற தவிர்க்கவேண்டிய நாட்களை எளிதில் புரியும் வண்ணம் ஒவ்வொரு தேதித் தாளிலும் கருப்பு அடைப்புகளில், வெள்ளை நிற எழுத்துக்களில் காட்டியிருப்பது அருமை.




சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, நவமி, ஏகாதசி, திரயோதசி, பௌர்ணமி, அமாவாசை, கிருத்திகை குறிகளுடன் ஆரம்பநேரம் முதல் முடியும் நேரம் வரை குறிப்பிட்டுள்ளனர். இதனால் மேற்படி விரதங்களை முறையாக அனுஷ்டிக்கலாம். அன்றைய தேதி தாளிலேயே கடைசி வரியில் நாளை நடைபெறும் முக்கிய நிகழ்வுகளைக் காட்டியுள்ளனர். மேலும் ஆன்மிகக் குறிப்புகளைப் புகுத்தியிருப்பதும் சிறப்பு. உதாரணமாக நாகசதுர்த்தி, கருட பஞ்சமி தினங்களில் நாகதோஷத்திற்குப் பரிகாரம்; அட்சய திரிதியை ஆரம்பநேரம் முதல் முடியும் நேரம் வரை; புனித நதிகளில் நீராடுவதைத் தவிர்க்க வேண்டிய நதிரஜ்ஜு நாட்கள் போன்றவற்றை சொல்லலாம். திருக்கணித தேதி, வாக்கியத் தேதிகளின் வித்தியாசங்களையும் காண்பித்துள்ளதும் சிறப்பு.

தொடர்புக்கு: த.கு.சி. வேலன்,

குமார விகடன் காலண்டர், காஞ்சிபுரம்.
செல்: 94433 74656, 95004 81499.

பார்கள். தேவையென்றால் மட்டும் சற்று எடுத்துக் கொள்ளலாம். இம்முறை அதையும் தவிர்த்து விட்டேன். வீட்டில்கூட உப்பில்லாமல் கோதுமையில் ஏதாவது செய்துவைக்கச் சொல்லியிருந்தேன். அதை நான் நிச்சயம் சாப்பிடுவேன் என்பதற்காக அல்ல; தேவைப்பட்டால் மட்டும் எடுத்துக்கொள்வதற்காக. இப்படி கடினமான விரதத்தை மேற்கொண்டுதான் பல சிவாச்சாரியார்களும் இந்த யாகங்களைச் செய்தார்கள். ஒரு தாயானவள் தன் குழந்தையின் நலனுக்காக எவ்வாறு பத்தியமிருந்து தன்னை வருத்திக்கொள்கிறாளோ, அதுபோல உலக நன்மைக்காக செய்யும் யாகங்களில் இத்தகைய விரதங்களை சிவாச்சாரியார்கள் மேற்கொள்ளவேண்டுமென சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதைப் பின்பற்றி செய்தால்தான் யாகத்தின் பலன் மக்களுக்குச் சென்றடையும்.

பல மதத்தினரும் ஆலயம் என்றால் வழிபடக் கூடிய இடமென்று நினைக்கிறார்கள். நாம் அதைவிட மேலாக, ஆலயம் என்பது உலக மக்களுக்கு மட்டுமின்றி, உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் தேவையான ஆற்றலை உற்பத்தி செய்து தரும் இடமென்கிறோம். ஒரு சாதாரண சோதனைக் கூடத்திற்கும், அணுமின் நிலைய சோதனைக் கூடத்திற்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா? எனவே ஆலயங்களை நாம் வழிபாட்டுத்தலம் என்னும் அளவில் மட்டும் எண்ணிவிடக்கூடாது. பிரபஞ்சத்திற்கு வேண்டிய சக்தியை- ஆற்றலை உற்பத்தி செய்யுமிடமென்று நாம் பார்த்தோமோனால், ஆலயத்தின்மீதுள்ள ஈடுபாடு நமக்கு அதிகரிக்கும்.

அண்ணாமலையில் பத்து நாட்கள் தீபம் ஏற்றுவதைப் பார்க்கிறோம். அது எதற்காக செய்யப்படுகிறது? நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களில் நடுவிலிருப்பது நெருப்பு. அனைத்தையும் தூய்மை செய்யக் கூடியது நெருப்பு. நெருப்பில் எதைப்போட்டாலும் தூய்மையாகிவிடும். நீரைக்கூட நெருப்பில் கொதிக்கவைத்தால் தூய்மையாகிவிடுகிறது. இந்த பூமி உருண்டை மேற்பரப்பில் குளிர்ந்திருந்தாலும் இதன் மையப்பகுதியில் இருப்பது நெருப்புதான். நமது கண்களின் கருமணிக்குள் கிருஷ்ண தாராக்ரவர்த்தி எனப்படும் நெருப்பு உள்ளது. அந்த நெருப்பால்தான் நாம் எல்லாவற்றையும் காண்கிறோம். அந்த நெருப்பு இல்லையென்றால் நம்மால் எதையும் பார்க்கமுடியாது. பலருக்கு கண்களிலிருந்தும் பார்வை தெரியாமலிருப்பதற்குக் காரணம் இதுதான். நாம் உண்ணும் உணவை பஸ்பமாக்குவதும் ஒருவகையான நெருப்புதான். உடலில் ஒரு குறிப்பிட்ட அளவு வெப்பம் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது குறைந்துபோனால் என்னாகும்? நம் இதயத்தில் ஆடிக்கொண்டிருக்கும் சிவம் வெளியேறிவிட்டால் சவம்தான்.

இப்படி எங்கெங்கும் நிறைந்திருந்து நம்மை வாழவைப்பது நெருப்பு. அண்ணாமலையில் ஏற்றப்படும் மகாதீபம், பூஜை போன்றவற்றை ஏதோ ஒரு தலத்தில் நடைபெறும் வழிபாடாக நாம் கருதக்கூடாது. அது உலகெங்குமுள்ள வெப்பம் சார்ந்தவற்றை வலிமைப்படுத்துகிறது. இவற்றையெல்லாம் உணர்ந்தே நம் முன்னோர்கள் இந்த வழிபாட்டு முறையை அமைத்தனர் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

சிலர் அறியாமல் இந்துமத சடங்குகளை கேலி செய்வார்கள். 'நாமம் போடுதல்' என்பதை 'ஏமாற்றிவிட்டான்' என்ற பொருளில் பேசிக் கொள்வதை நாம் கேட்டிருக்கிறோம். அவ்வாறு சொல்லக்கூடாது. பகவானுடைய திருப்பாதச் சின்னத்தையே வைணவர்கள் நெற்றியில் அணிந்துகொள்கின்றனர். அதை ஏளனமாகப் பேசக்கூடாது.

அதுபோல, பிறந்தநாள் விழாக்களில் நடக்கும் கேக் வெட்டும் கலாச்சாரமும் நம் பண்பாட்டுக்கு முரணானது. கேக்கில் மெழுகு வர்த்திகளை ஏற்றிவைத்து வாயால் ஊதி அணைக்கிறார்கள். தீபத்தை வாயால் ஊதி அணைக்கவே கூடாது. அறிவியல்ரீதியாக சொன்னால்கூட, நாம் ஊதும்போது நம் வாயிலுள்ள கிருமிகள் அந்தக் கேக்கில் படராதா? மேலும் கேக்கில் விழா காண்பவரின் பெயரை எழுதி, அதை கத்தியால் வெட்டுகிறார்கள். இவையெல்லாம் அர்த்தமுடையதா?

அர்த்தமுள்ள செயல்களைச் செய்யவேண்டுமானால், ஆலயங்களைப் பற்றிய அறிவு நமக்கு மிகமிக அவசியம்.

மூளை சுறுசுறுப்பாக இயங்கவேண்டுமென்றால், விதவிதமானவற்றைப் பார்க்கவேண்டும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். நம் ஆலயங்களில் பாருங்கள். விதவிதமான தெய்வங்கள், விதவிதமான நிவேதனங்கள், விதவிதமான மலர்கள்... அதிலும் மலர்கள் இருக்கின்றனவே- அவை நம் வழிபாட்டில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. மலர்களை ஏன் இறைவழிபாட்டுக்குத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்கு சாஸ்திரங்கள் சொல்லும் விளக்கங்களையும், அவற்றை எப்போது- எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் அடுத்த இதழில் காண்போம்.

(தொடரும்)


## படித்துப் பயனடைய வேண்டிய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | மருந்தின்றி ஆரோக்கியமாக வாழும் வழிகள் | ரூ. 180.00 |
| 2. | யோக இரகசியங்கள் | ரூ. 65.00 |
| 3. | மரியாதை இராமன் கதைகள் | ரூ. 70.00 |
| 4. | குண்டலினி தியானம் | ரூ. 85.00 |
| 5. | பலதுறை கருத்துக் களஞ்சியம் | ரூ. 160.00 |
| 6. | அக்குபிரஷர் மசாஜ் | ரூ. 60.00 |
| 7. | மருந்தாகும் உணவுப் பொருட்கள் | ரூ. 45.00 |
| 8. | எல்லா நோய்களுக்கும் எளிய சித்த மருந்துகள் | ரூ. 40.00 |
| 9. | அனைத்து மருத்துவங்களும் போற்றும் அரிய மூலிகைகள் | ரூ. 90.00 |
| 10. | மூளையை உபயோகித்து முன்னேறும் வழிகள் | ரூ. 55.00 |
| 11. | விதியை மாற்றித்தரும் நவக்கிர மந்திரங்கள் | ரூ. 60.00 |
| 12. | ஆவி உடலும் ஆன்மாவும் | ரூ. 70.00 |
| 13. | ஆவிகளைக் கண்ணால் காணும் அதிசய மனிதர் | ரூ. 120.00 |
| 14. | ஜோதிட நுணுக்கங்கள் | ரூ. 100.00 |
| 15. | ஜோதிடத்தில் மருத்துவம் | ரூ. 70.00 |
| 16. | மாயை உலகம் | ரூ. 48.00 |
| 17. | நம்மிடையே உலவும் ஆவிகள் | ரூ. 250.00 |
| 18. | தமிழ்த்திரைப் படங்களில் சமுதாயச் சிந்தனைகள் | ரூ. 70.00 |
| 19. | அருள்தரும் ஸ்ரீ அன்னை - யோகி அரவிந்தர் | ரூ. 120.00 |
| 20. | உலக மாந்தர்களும் மந்திரச் சடங்குகளும் | ரூ. 100.00 |
| 21. | ஆயுளை வளர்க்கும் பிராண சிகிச்சைகள் | ரூ. 65.00 |
| 22. | தமிழரின் சமையலறை மருந்துகள் | ரூ. 85.00 |
| 23. | ஷீரடி சாய்பாபாவின் அற்புதங்கள் | ரூ. 80.00 |
| 24. | மந்திரக் குகை மர்மம் (கதையல்ல நிஜம்) | ரூ. 175.00 |
| 25. | ஆவியுடல் மூலம் வீனஸ் கிரகம் சென்று வந்தேன் | ரூ. 40.00 |
| 26. | முற்பிறவி மறுபிறவி ஆதாரங்கள் | ரூ. 150.00 |
| 27. | காஞ்சி முனிவரின் கருணை மொழிகள் | ரூ. 50.00 |
| 28. | இளைஞருக்கு ஏற்ற இராமாயணம் | ரூ. 35.00 |
| 29. | இளைஞருக்கு ஏற்ற மகாபாரதம் | ரூ. 160.00 |
| 30. | சூரிய புராணம் | ரூ. 75.00 |
| 31. | சித்தர் பாடல்கள் (மூலமும் - உரையும்) | ரூ. 190.00 |
| 32. | திருக்குறள் (எளிய உரை) | ரூ. 60.00 |
| 33. | விநாடி வினாக்கள் | ரூ. 90.00 |
| 34. | அதிசய கம்ப்யூட்டர் தகவல்கள் | ரூ. 36.00 |
| 35. | எல்லாம் கம்ப்யூட்டர் மயம் | ரூ. 130.00 |
| 36. | சிறுவர் சிந்தனைக் கதைகள் | ரூ. 60.00 |

புத்தகங்கள் தேவைப் படுபவர்கள் (044) 42155831 என்ற எண்ணில் பேசி புத்தகங் களுக்கு ஆர்டர் கொடுக்கலாம்

VPP தபாலில் அனுப்புகிறோம். தபால்காரரிடம் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும். (தபால் செலவு தனி)

மேகதூதன் பதிப்பகம் (MEGATHUDAN PATHIPPAGAM)

பழைய எண். 7, சின்னப்பராவுத்தர் தெரு, (ரத்னா கேஃப் ஹோட்டலின் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. போன் : 044-42155831
e-mail : megathudan.books@gmail.com / website : www.megathudanpathippagam.in

ADVT




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்கழி ஆனந்தம் கீத கோவிந்தம்!

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஜயதேவர் ஆற்றில் நீராடிவிட்டுத் திரும்ப வந்து வீட்டின் கதவைத்தட்ட, இடக்கையால் கதவைத் திறந்த மனைவி பத்மாவதியைக் கண்டு திடுக்கிட்டார். "பத்மா, நான் வீடுவந்து பூஜைசெய்து சாப்பிட்டபின்தானே நீ சாப்பிடுவாய்? இன்று என்னாயிற்று" என்று கேட்டார். அவளது வலக்கையில் உணவுண்டுகொண்டிருந்த அடையாளம்.

பத்மாவதியும் திடுக்கிட்டாள். "எனக்கும் புரியவில்லையே. நீராடி வருவதாகப் புறப்பட்டுப் போனவர் உடனே திரும்பி வந்தீர்கள். 'ஒரு ஞாபகம் வந்தது. மறந்துவிடப் போகிறதென்று வந்தேன். எழுதிவிட்டுப் போகிறேன்' என்று எழுதினீர்கள். பின் இங்கேயே அனுஷ்டானங்களை முடித்துவிடுவதாகச் சொல்லி, அவ்வாறே நீராடி, பூஜைசெய்து பின் சாப்பிட்டீர்கள். பூஜையறையில் சென்று படுத்துவிட்டீர்கள். நீங்கள் சாப்பிட்ட இலையில் தான் நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள்..." என்று இழுத்தாள்.

"நான் இப்போது தானே வருகிறேன்" என்று சொல்லி பூஜையறைக்குச் சென்று பார்த்தார். அங்கே யாருமில்லை. சுவடியை எடுத்துப் பார்த்தார். அதில் தனக்குத் தோன்றிய- ஆனால் எழுதாத சொற்களே எழுதப்பட்டிருந்தன. 'நான் அபத்தமென்று எண்ணித் தவிர்த்ததை, அந்தக் கண்ணனே வந்து எழுதிவிட்டானே!' என்று மெய்சிலிர்த்தார்.

'ஸ்மரகரள
கண்டனம் மம சிரசி மண்டனம்
தேஹிபத பல்லபம் உதாரம்
ஜ்வலதி மயிதாருணோ மதன கதனானலோ
ஹரது தததுபாஹித விசாரம்- ப்ரியே சாருசீலே.'

என்பது அந்த பாடல். 19-ஆவது அஷ்டபதி.

(ராதையின் பாதங்களைத் தன் தலைமீது வைக்கச் சொல்கிறான் கண்ணன். இதே குறிப்பை அருணகிரிநாதர், 'பணியா என வள்ளிபதம் பணியும் தணியா அதிமோக தயாபரா', 'குறமின் பத சேகரனே' என்று கந்தரனுபூதியிலும்; 'மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா' என்று திருப்புகழிலும் முருகனைப் பாடுகிறார்.)

ஜயதேவர் பத்மாவதியிடம், "என் உருவில் கண்ணனே வந்தான். நீ அவனை தரிசித்தாய்; உணவளித்தாய். பாக்கியவதி நீ" என்று பாராட்டி, கண்ணன் உண்ட உச்சிஷ்டம் என்று,


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஃ மும்பை ராமகிருஷ்ணன்

பத்மாவதி உண்ட எச்சில் உணவை அவர் உண்டார். எட்டாவது அடியை 'பத்மாவதி ரமண ஜயதேவ' என்றெழுதி உன்னதம் ஈந்தார்.

19-ஆவது அஷ்டபதிக்கு உஜ்ஜீவன அஷ்டபதி- சஞ்சீவி அஷ்டபதி (இறந்தவரை உயிர்ப்பிக்கும் அஷ்டபதி) என்று பெயர். அதன் மகிமையை சற்று காண்போம்.

ஒருசமயம் அந்நாட்டு அரசியிடம் உரையாடிக்கொண்டிருந்தாள் பத்மாவதி. அப்போது அங்குவந்த சேடிப்பெண், ஒரு மனிதர் இறந்துவிட்டார் என்றும், அதன் காரணமாக அவர் மனைவி உடன்கட்டை ஏறப்போகிறாள் என்றும் வருத்தத்துடன் கூறினாள். அதைக்கேட்ட பத்மாவதி, "அவள் தூய கற்புடையவளென்றால், கணவர் இறந்த செய்தியைக் கேட்டதுமே அவள் உயிர் போயிருக்க வேண்டுமே" என்றாள். இந்தப் பேச்சு ராணியை உறுத்தியது. பத்மாவதியின் கற்பை சோதிக்க திட்டமிட்டாள் அவள்.

ஒருசமயம் அரசர் வேட்டையாட காட்டுக்குச் சென்றபோது ஜயதேவரையும் அழைத்துச் சென்றார். அந்த சமயத்தை தன் சூழ்ச்சிக்கு ராணி பயன்படுத்தினாள். வழக்கம்போல பத்மாவதி ராணியுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது, ராணியின் ஏற்பாட்டின்படி சேடி 'ஐயோ' என்ற அலறலுடன் அங்கு ஓடிவந்தாள். "அரசருடன் காட்டுக்குச் சென்ற ஜயதேவரை புலி தாக்கி அவர் இறந்துவிட்டார்" என்று ரத்தம் தோய்ந்த ஆடைகளைக் காட்டினாள். "நாதா! நானும் வந்துவிட்டேன்!" என்று அப்படியே சரிந்தாள் பத்மாவதி. அவள் உயிர் பிரிந்தது.

ராணி கதிகலங்கிப்போனாள். இப்படிப் பட்ட உத்தமியை சோதித்தோமே என்று துக்கித்தாள். மாலையானதும் அரசருடன் ஜயதேவரும் வர, அவரிடம் மன்னிப்பு கேட்டு பாதம் பணிந்தாள் ராணி. ஜயதேவர் மனம் கலங்கவில்லை. கண்ணனே ஜயதேவர் வடிவில் வந்து எழுதிய 19-ஆவது அஷ்டபதியைப் பாடி, "என் ரூபத்தில் கண்ணனை தரிசித்து அவனுக்கு உணவளித்தவளாயிற்றே" என்று சொல்ல, பத்மாவதி தூக்கத்திலிருந்து எழுவதைப் போல எழுந்து ஜயதேவரின் பாதம் பணிந்தாள். இப்போதும் அஷ்டபதி அறிந்த கிருஷ்ண பக்தர்கள், எவராகிலும் மருத்துவமனையில் அபாய கட்டத்திலிருந்தால், அவர் குணமடைய மானசீகமாக இந்த 19-ஆவது அஷ்டபதியைப் பாடுவார்கள். பலன் பெற்றவர்கள் உண்டு. ஆனால் ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் தேவை.

அடுத்து 11-ஆவது அஷ்டபதியின் சிறப்பைக் காண்போம்.

தோழியானவள் ராதையிடம் சென்று, 'ராதே, நீயோ கண்ணன் விரகத்தால் தவிக்கிறாய். கண்ணனோ யமுனைக்கரையில் உன் பெயரை உச்சரித்துக்கொண்டு உன்னை அணைந்திடத் துடிக்கிறான்' என்று சொல்கிறாள். இதுதான் இந்த அஷ்டபதியில் உள்ளது. தவிக்கும் ஜீவாத்மாவை உய்விக்க பரமாத்மாவும் விழைகிறது. கண்ணனின் கருணை அத்தகையது.

பூரி ஜெகந்நாதர் ஆலயக் கருவறையைத் திறந்த பூசாரி பயந்துவிட்டார். காரணம் ஜகந்நாதர் விக்ரகத்திலிருந்த ஆடைகள் ஆங்காங்கே கிழிந்திருந்தன. சில இடங்களில் ரத்தக்கசிவும் காணப்பட்டது. கதிகலங்கிய பூசாரி ஓடிச்சென்று மன்னரிடம் கூறினார். ஜெகந்நாத பக்தரான அவ்வரசன் ஆலயத்துக்கு வந்து, இதற்கான காரணத்தைக் கூறியருள வேண்டுமென வேண்டிக்கொண்டு அன்றிரவு ஆலயத்திலேயே படுத்துக்கொண்டான். அப்போது அவன் கனவில் தோன்றிய பகவான், 'ஒன்றுமில்லை. நேற்றிரவு காய்கறி விற்கும் மாதவி என்ற சிறுமி 11-ஆவது அஷ்டபதியைப் பாடிக்கொண்டே தோட்டத்தில் கத்தரிக்காய் பறித்துக் கொண்டிருந்தாள். அதில் மயங்கிய நான், அவளுக்குத் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்து பாடலை ரசித்தேன். அப்போது செடிகளின் முள் பட்டு ஆடைகள் கிழிந்து விட்டன. கொஞ்சம் ரத்தமும் வந்துவிட்டது' என்று கூறினார்.


வியப்படைந்த மன்னன் மறுநாள் காலை அந்த சிறுமியை அழைத்துவரச் செய்து, ஆலயத்திலேயே அமர்ந்து பாடுமாறு கூறி, அவள் குடும்பத்துக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்தான்.

இந்த 11-ஆம் அஷ்டபதியின் சிறப்புக்கு மற்றொரு சம்பவத்தையும் காண்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

### 14. காரப்பங்காடு



தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை- மன்னார் குடி சாலையில், மதுக்கூரிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள தலம். இந்த திருக்கோவிலில் பெருந்தேவித் தாயார் சமேத அபீஷ்ட வரதராஜப் பெருமாள் எழுந்தருளியுள்ளார். இத்தலத்தை சேவித்தால் வைணவத் தலங்கள் அனைத்தையும் சேவித்த முழுப்பயன் கிடைக்கும் எனப்படுகிறது. காஞ்சிபுரத்திலிருந்து ஏழு பக்தர்கள் தனுஷ்கோடியை தரிசித்த பின்னர் திரும்பி வரும் வழியில், இங்குள்ள காட்டில் ஓரிரவு தங்கினர். அப்போது அவர்கள் கனவில் காஞ்சி வரதர் தோன்றி, வடுவூர் பக்கத்திலுள்ள மூர்த்திமாபுரம் என்னுமிடத்தில் புற்றில் விக்ரகமாக தான் இருப்பதாகக் கூறவே, அவர்களும் அவ்வாறே அந்த விக்ரகத்தை அகழ்ந்தெடுத்து காரப்பங்காட்டில் பிரதிஷ்டை செய்தார்கள். இங்கு ஓராண்டு காலத்தில் பதினெண்முறை திவ்ய பிரபந்தம் ஓதப்பட்டு வருகிறது. மார்கழி மாதம் அத்யயன உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

ஒரு உஞ்சவிருத்தி பிராம்மணர் இந்த அஷ்டபதியைப் பாடியபடி சென்று வீடுகளில் அரிசிபெறுவது வழக்கம். அப்படி ஒருநாள் அவர் வரும்போது ஒரு சிறுமி, "சுவாமி, தாங்கள் வீட்டுக்குள் வரவேண்டும்" என்றாள். "என்ன காரணம்?" என்று அவர் கேட்க, "சுவாமி, நீங்கள் பாடும் அஷ்டபதியைக் கேட்டுக்கேட்டு எனக்கும் மனப்பாடமாகிவிட்டது. ஆகவே நீங்கள் எனது குரு. தங்களுக்கு மரியாதை செய்யவிரும்புகிறேன்" என்றாள். சிறுமி அழைக்கிறாளே என்று அவரும் சென்றார்.

அந்தச் சிறுமி அவர் காலை அலம்பி பூப்போட்டு வணங்கி, பாலும் பழமும் அளித்தாள். அவரும் உண்டார். அவள் ஒரு நெசவாளி. வீட்டின் ஒரு மூலையில் சிக்கலாகி அறுந்த நூல்கள் குவிக்கப்பட்டிருந்தன. அதைக் கண்ட அவர், "ஏனம்மா, குப்பையைச் சேர்த்து வைத்திருக்கிறாயே. தூரப் போட்டு விடலாகாதா?" என்று கேட்டார்.

"ஐயா, அது குப்பையல்ல; கண்ணனின் கைகளும் பாதங்களும் பட்ட புனிதமான நூல்கள்" என்றாள். "நீ சொல்வது புரியவில்லையே" என அவர் கேட்க, "அஷ்டபதியைப் பாடியபடி நான் ராட்டினம் சுற்றுவது வழக்கம். அப்போது திடீரென கண்ணன் தன் பிஞ்சுக் கால்களுடன் வருவான். விளையாட்டாக நூல்களை அறுத்து சிக்கலாக்குவான். அப்படிச் செய்யாதே என்று சொன்னாலும் கேட்கமாட்டான். அவனது புனித கரங்களும் கால்களும் பட்ட நூலை குப்பையென்று எறிய மனமில்லை" என்றாள்.

'இவ்வளவு நாட்களாக நான் அஷ்டபதி பாடுகிறேன். எனக்கு கண்ணன் காட்சி தரவில்லையே' என்றெண்ணிய அவர், "அம்மா, நீ ராட்டினம் சுற்றிக்கொண்டே அஷ்டபதி பாடு. நானும் கண்ணன் தரிசனம் பெறுகிறேன்" என்றார்.

அவளும் அப்படியே செய்து, சிறிது நேரத்தில் கைகொட்டியபடி, "இதோ கண்ணன் வந்துவிட்டான்" என்றாள். "என்னால் பார்க்க முடியவில்லையே" என்று அவர் சொல்ல, "கண்ணா, என் குருநாதருக்கு தரிசனம் தரக் கூடாதா?" என்று வேண்டினாள் அவள். கண்ணனோ, "அவர் வயிற்று ஜீவனத்துக்காகப் பாடுகிறார். உள்ளன்பு, பக்தி பாவம் அதிலில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படித்துப் பயனடைய வேண்டிய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | மந்திர யந்திர மூலிகை இரகசியங்கள் | 90.00 |
| 2. | எப்போதும் இளமையாக வாழலாம் | 55.00 |
| 3. | விடை தெரியாத விந்தை மர்மங்கள் | 80.00 |
| 4. | கனவுகளின் பலன்கள் | 60.00 |
| 5. | தாம்பத்தியம் இன்பமாக அமைய... | 75.00 |
| 6. | ஸ்ரீ சேஷாத்திரி மகான் வரலாறும் பக்தர்களின் நேரடி அனுபவங்களும்... | 240.00 |
| 7. | இஸ்லாம் கூறும் மறு உலக உண்மைகள் | 60.00 |
| 8. | மருந்தில்லா மருத்துவம் ரெய்கி | 65.00 |
| 9. | ஆன்மீக முன்னேற்றத்தின் வழிகாட்டி | 75.00 |
| 10. | தலை முதல் பாதம் வரை (உடலில் ஏற்படும் பாதிப்புகளும் தீர்வுகளும்) | 50.00 |
| 11. | சித்த மருத்துவ சிகிச்சைகளும் மருந்துகளும் | 65.00 |
| 12. | திரைக்கதை வசனம் எழுதுவது எப்படி | 75.00 |
| 13. | எளிய ஜோதிட பாடங்கள் | 80.00 |
| 14. | நாடி ஜோதிடம் உண்மையா? பொய்யா? | 70.00 |
| 15. | முனிவர்களின் சுவடிகளும் முற்பிறவி உண்மைகளும் | 100.00 |
| 16. | சுலப வழியில் ஜோதிடம் கற்றுக் கொள்ளுங்கள் | 50.00 |
| 17. | அதிர்ஷ்டத்தை அள்ளித்தரும் மந்திர எண்கள் | 170.00 |
| 18. | அந்தரங்க ஆலோசனைகள் | 100.00 |
| 19. | எம்.ஜி.ஆர். தமிழரே (அருமையான ஆய்வு நூல்) | 120.00 |
| 20. | சித்தர்களின் ஜீவ சமாதிக்கோயில்கள் | 40.00 |
| 21. | ஆண்டவன் வழிபாடே – ஆவி வழிபாடுதான் | 50.00 |
| 22. | விகடகவி தெனாலிராமன் கதைகள் | 60.00 |
| 23. | தெய்வம் தந்த பூவே (குடும்ப நாவல்) | 90.00 |
| 24. | முத்திரைச் சிறுகதைகள் | 130.00 |
| 25. | ஆவியுலகில் அற்புத அனுபவங்கள் | 35.00 |
| 26. | அமானுஷ்ய ஆற்றல்கள் பெறுவது எப்படி? | 70.00 |
| 27. | ஆர்னிகாவும் 1001 ஆவிகளும் | 85.00 |
| 28. | ஆவிகளே எழுதிய அதிசயமான கட்டுரைகள் | 25.00 |
| 29. | அமானுஷ்யக்கேள்விகளும் அறிவுபூர்வமான பதில்களும் (பாகம்–1) | 50.00 |
| 30. | அமானுஷயக்கேள்விகளும் அறிவுபூர்வமான பதில்களும் (பாகம்–2) | 70.00 |
| 31. | அமானுஷயப்பெண்மணி | 45.00 |
| 32. | அமானுஷயத்துப்பறியும் நிபுணர்கள் | 80.00 |
| 33. | வேறுபட்டபிறவிகள் மாறுபட்ட உறவுகள் | 40.00 |
| 34. | கடவுளைத் தேடும் ஆராய்ச்சிகள் | 25.00 |
| 35. | உலகப் பெரும் அதிசயங்கள் | 40.00 |
| 36. | பில்லி சூனியமும ஆவிகளும் | 40.00 |
| 37. | வர்மக்கலையை கற்றுக்கொள்ளுங்கள் | 40.00 |
| 38. | நீங்களும் ஹிப்னாடிசம் செய்யலாம் | 80.00 |
| 39. | முன்னேற்றத்திற்கு உதவும் தியானங்கள் | 45.00 |
| 40. | வாழ்க்கையில் விரைவில் வெற்றிபெற புதிய வழிமுறைகள் | 40.00 |
| 41. | நல்ல நண்பர்களும் – நலமான வாழ்க்கையும் | 40.00 |
| 42. | வளமாக வாழ வழிமுறைகள் | 35.00 |
| 43. | பத்திரிகை நிருபர் ஆவது எப்படி? | 25.00 |
| 44. | வாதிராஜ சுவாமிகளின் திவ்யசரிதம் | 30.00 |
| 45. | ஸ்ரீ பூண்டிமகான் வாழ்க்கையும் அற்புத நிகழ்வுகளும் | 50.00 |
| 46. | காலப்போக்கில் தமிழ் சினிமா | 100.00 |
| 47. | வெற்றிகரமான விற்பனையாளர் ஆவது எப்படி? | 30.00 |
| 48. | எளிய யோகாசனங்கள் | 35.00 |
| 49. | நீண்ட ஆயுளைத் தரும் பிராணாயாமம் | 30.00 |
| 50. | வாழ்க்கையின் வெற்றிக்கு வாஸ்து சாஸ்திரம் | 40.00 |
| 51. | பிடுங்கித் தின்னும் மனிதர்கள் (ஹைக்கூ கவிதைகள்) | 40.00 |
| 52. | சமையல் கலை (சைவம்) | 40.00 |
| 53. | சமையல் கலை (அசைவம்) | 30.00 |

இந்தப் பட்டியலில் உங்களுக்கு என்னென்ன புத்தகங்கள் தேவையோ, அந்தப் புத்தகங்களின் பெயர்களை ஒரு கடிதத்தில் எழுதுங்கள். பிறகு உங்களின் தெளிவான முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதுங்கள். விலாசத்தைக் கூட்டு எழுத்துக்களில் எழுதாமல், தனித்தனி எழுத்துக்களில் எழுதுங்கள். அதை எங்களுக்கு அனுப்புங்கள். கடிதம் கிடைத்தவுடன் அப்புத்தகங்களை, உங்கள் முகவரிக்குப் பாதுகாப்பாக வி.பி.பி.யில் அனுப்பி வைக்கிறோம். வி.பி.பி பாக்கெட்டைத் தபால்காரர் உங்கள் வீட்டுக்கு வந்து உங்கள் கையில் கொடுப்பார். உரிய தொகையை தபால்காரரிடம் கொடுத்துவிட்டு, பெற்றுக் கொள்ளுங்கள். (தபால் செலவு தனி)

**(044) 42155831 என்ற எண்ணில் பேசி புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுக்கலாம்**

## மேகதூதன் பதிப்பகம் (MEGATHUDAN PATHIPPAGAM)

பழைய எண். 7, சின்னப்பராவுத்தர் தெரு, (ரத்னா கேஃப் ஹோட்டலின் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. போன் : 044–42155831
e-mail : megathudan.books@gmail.com / website : www.megathudanpathippagam.in

ADVT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் என் தரிசனம் இப்போது அவருக்குக் கிட்டாது. உன் தறி நூல்களை ஆடி அறுக்கி றேன். அதை அவர் காணட் டும்" என்று சொன்னார். கண்ணன் சொன்னதை பெரியவரிடம் கூறிய சிறுமி, பாடத்தொடங்கினாள். தறியிலிருந்து நூல்கள் அறுபடுவதைக் கண்ட பெரியவர் பிரம்மித்தார். பணிந்து நெகிழ்ந்தார். எத்தகைய அற்புதமான அனுபவம்.



கீதகோவிந்தம் முழுவதுமே உன்னதமானது. இறைவனாலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு சான்றாக இரு சம்பவங்கள் காண்போம்.

ஜயதேவர் காலத்தில் லட்சுமணசேனன் என்னும் அரசன் இருந்தான். அவனும் ஒரு கலைஞன்; புலவன்; ஜெகந்நாத பக்தன். அவனும் சில கீதங்கள் எழுதியிருந்தான். ஆனால் மக்கள் ஜயதேவரின் கீதகோவிந்தத்தைப் பாடினார்களே தவிர, மன்னனின் பாடல்களைப் பாட வில்லை. மன்னன் காரணம் கேட்டபோது- 'ஜயதேவரின் பாடல்கள் மனதை லயிக்கச் செய்கின்றன' என்றனர். அரசனோ, 'யாருடைய பாடல் உயர்ந்ததென்று அந்த பூரி ஜெகந் நாதரே தீர்மானிக்கட்டும்' என்று சொல்லி, ஆலயம் சென்று ஜெகந்நாதரின் ஒரு கரத்தில் தனது பாடல்கள் அடங்கிய சுவடிகளையும், மறுகரத்தில் கீதகோவிந்த சுவடிகளையும் வைத்துவிட்டு கதவைப் பூட்டிவிட்டான். மறுநாள் காலையில் கருவறையைத் திறந்து பார்த்தபோது, மன்னனின் சுவடிகள் கீழே கிடந்தன. ஜெயதேவரின் சுவடி கையிலேயே இருந்தது. அதைக்கண்டு மன்னன் வருத்தமுற்றான். அப்போது ஒரு அசரீரி வாக்கு, 'மன்னா, உனது பாடல்களைவிட ஜயதேவரின் கீத கோவிந்தம் மிகுந்த பக்திரசம் வாய்ந்தது. உனது பாடல்களும் சரியானதே. எனவே ஜயதேவர் பாடல்கள் சிலவற்றில் உனது பதங்களும் சேரும்' என்று ஒலித்தது. அதன்படி தற்போது நாம் பாடும் பாடல்களில் மன்னனின் பதங்களும் கலந்துள்ளன.

மற்றொரு சம்பவம்.

ஜயதேவரின் கீதகோவிந்தத்தை காசியில் பண்டிதர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்ய விரும்பினான் மன்னன். ஜயதேவருக்கு இதில் விருப்பமில்லை என்றாலும் மறுக்கவும் முடியவில்லை. காசியில்- கங்கைக்கரையில் பெரிய பண்டிதர்கள்- கவிஞர்கள் சபை கூடியது. ஜயதேவர் அவையோருக்கு வணக்கம் சொல்லி அரங்கேற்றத் தைத் தொடங்கும் சமயம் ஒரு புலவர் மேடையை நோக்கிவந்தார்.

"நான் கோகுலத்திலிருந்து வருகிறேன். ஜய தேவனாம்- கவிஞனாம்- கீத கோவிந்தமாம்- அரங்கேற்றமாம்! எல்லாம் அபத்தம்! நான் எழுதியதை அப்படியே எழுதியிருக்கிறான். எனது கிரந்தத்தைப் படிக்கிறேன் கேளுங்கள்" என்று சொல்லி படிக்க ஆரம்பித்தார்.

அரசன், ஜயதேவர், பத்மாவதிக்கு திகைப்பு! ஏனெனில் அந்தப் புலவர் பாடியது கீத கோவிந்தமே. பாடிமுடித்த புலவர் ஜயதேவரின் கையிலிருந்த சுவடியைப் பிடுங்கி கங்கையில் வீசினார். அப்போது கங்கா தேவி தோன்றி, "ஜய தேவா, என்மீது அஷ்டபதி பாடு" என்றாள். ஜயதேவர் கங்காஷ்டபதி பாடி முடிக்க, கங்கா தேவி நதியில் வீசப்பட்ட சுவடிகளை நீட்டி, "இதோ உனது உன்னதமான கீதகோவிந்தம்" என்றாள். கோகுலப் புலவர் மறைந்து கண்ணன் காட்சி தந்தருளினான். கீதகோவிந்தம் ஜயதேவர் மூலமாக கண்ணனாலே எழுதப்பட்டது என்றும், அதற்கு கங்கை சாட்சி என்றும் நிரூபிப் பதற்காகவே இந்த சம்பவத்தை நிகழ்த்தினான் கண்ணன்! எத்தகைய புனிதமானது கீதகோவிந் தம். (ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும், காஷ்ட சந்நியாசியான காஞ்சி மகாபெரியவரும் கீதகோவிந்தத்தை ரசித்துக் கேட்பார்கள்.)

மகாகவி பாரதியுடன் சுதந்திரப் போராட் டத்தில் ஈடுபட்ட சங்கு சுப்பிரமணியன், பண்டரிபுரம் பாண்டுரங்கன் ஆணையால் கீதகோவிந்தத்தை தமிழாக்கினார். அதே ராக தாளத்துடன் பாடமுடியும். கீதகோவிந்தத்திற்கு தமிழுரைகளும் உள்ளன. வெளிநாட்டவர்களும் இதை ரசித்து ஆங்கிலத்தில் உரையெழுதியுள்ள னர். அடியேனும் 'ஸ்ரீ கீதகோவிந்த ரஸாம்ருதம்' என்னும் பெயரில் அஷ்டபதி விரிவுரை எழுதியுள்ளேன். ஜீவ பரம ஐக்கிய பக்தி ரசத்தை கீத கோவிந்தத்தில் உணரலாம். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஓம்

எல்லாம் வல்ல இறைவனடி போற்றி, அன்னை ஆதிபராசக்தி திருவடிகள் போற்றி

ஆதிமுதல் 18 சித்தர்கள் திருவடிகள் போற்றி, குருநாதர் சுப்பிரமணியம் சுவாமிகள் திருவடிகள் போற்றி



# ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையம் வழங்கும்

## மகா மாந்திரீக, மந்திர,எந்திர, தந்திர, தாந்திரீக, ஆன்மீக சூட்சம ரகசிய பிரயோக பயிற்சி

தொட்டதெல்லாம் துலங்கும் ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையம் வழங்கும் இம்மாத பயிற்சியில்

1. சகல செல்வ யோகங்களையும் தந்து தனவரவையும் குபேர அதிர்ஷ்டத்தையும் தரக்கூடிய யோகலெட்சுமி மந்திர சித்திக்கான பூஜை முறைகளும், தனவரவுக்கான மந்திர பிரயோக முறைகளும்.

   குறிப்பு :- (எந்த ஒரு வேளைக்கும் செயலுக்கும் அதிர்ஷ்டமும் லெட்சுமி கடாட்சமும் வேண்டும். இவ்வாறான லெட்சுமி கடாட்சம் இருந்தாலே செய்யும் வேலைகள் சிறப்பாக இருக்கும். இந்த யோகலெட்சுமி பூஜை முறையை இயல்பான மக்கள் யார் வேண்டுமானாலும் பூஜை செய்யலாம். அதிர்ஷ்டம் உள்ளவருக்கே இந்த யோகலெட்சுமி மூல மந்திரம் கிடைக்கும். குரு வழி உபதேசமாக வந்த இந்த ரகசிய மந்திரத்தை அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு கற்றுத்தருவதால் அனைவரும் கற்று பயன் பெற்று யோகலெட்சுமியின் அருள்பெற்று நாளுக்கு நாள் செல்வ செழிப்பும், தொழில் ஆகர்ஷனமும், தன அதிர்ஷ்டமும் உண்டாகி சகல சுபிட்சத்துடன் மங்களகரமாக தாங்களும் தங்களது குடும்பமும் செழிப்போடு வாழலாம்.)
2. குபேர யோகமும், தன ஆகர்ஷனமும், தன அதிர்ஷ்டமும் தரக்கூடிய யோகலெட்சுமி மந்திர பாவை பிரயோக முறை.
3. கடைகளுக்கோ, ஜோதிடம் பார்க்கும் இடத்திற்கோ நம் தொழில் ஸ்தாபனத்திற்கோ, கோவிலுக்கோ, ஜன வரவு அதிகமாகி தனவரவு அதிகமாக யோகலெட்சுமி தூப பிரயோக முறை.
4. அரச யோகத்தை, செல்வத்தை வீட்டிற்கோ, தொழில் ஸ்தாபனத்திற்கோ வரச்செய்யக்கூடிய யோகலெட்சுமி பஞ்சவஸ்து பிரயோக முறை.
5. வீடு, கடை, தொழில் ஸ்தாபனம் இவைகளுக்கு பொறாமை, கண் திருஷ்டி இவைகள் வராமல் விலகி லெட்சுமி கடாட்சம் பெறுக சக்தி வாய்ந்த யோகலெட்சுமி மந்திர பிரயோக முறை.
6. தொழிலில் பணவரவு அதிகமாக, வரவேண்டிய பணம் விரைவில் வர யோகலெட்சுமியின் எளிய மூலிகை பிரயோக முறை.
7. சொர்ண ஆபரணங்கள் சேர யோகலெட்சுமி மந்திர பிரயோக முறை.
8. தொட்டதெல்லாம்துலங்க,வரவேண்டிய பணம் வந்துசேர, தனஆகர்ஷனம் உண்டாக யோகலெட்சுமியின் மந்திரயந்திர மூலிகை பிரயோக முறை.
9. குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் சகல சௌபாக்கியமும் கிடைக்க யோகலெட்சுமியின் சூட்சம கலச பூஜை முறை.
10. ஜாதக ரீதியாக உள்ள கெட்ட நேரங்கள் விலகி சகல சம்பத்து உண்டாக வழிமுறை.
11. முகவசியமும், காரிய சித்தியும் உண்டாக யோகலெட்சுமியின் யந்திர மந்திர பிரயோக முறை.
12. சொந்த வீடு அமைய, இடம் அமைய மிக அதிரகசிய சூட்சம பிரயோக முறை.
13. பணரீதியான போட்டி, பந்தயம், ஏலச்சீட்டு இது போன்ற தனவரவில் தனக்கே முன்னுரிமை கிடைக்க யோகலெட்சுமி சூட்சம மந்திர பிரயோக முறை.
14. ராஜயோகம் உள்ள மருமகள் அமைய அல்லது மருமகள் அமைய யோகலெட்சுமி மந்திர பிரயோக முறை.
15. எதிராளியின் செல்வம், எதிராளியின் தனவசியம், அதிர்ஷ்டம், செல்வ கடாட்சம் நம்மிடம் வர அதிரகசிய யோகலெட்சுமியின் மந்திர பிரயோக முறை.
16. சகலவிதமான துன்பங்களையும் போக்கி, நடைமுறை வாழ்வில் உள்ள பிரச்சனைகளையும் தீர்த்து, தாங்கள் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறி நல்லாசி புரியக்கூடிய நம் அருகில் உள்ள கிராம தேவதைகளான பத்ரகாளி, காத்தாயி, அழகம்மை, அங்காளம்மன் முப்பிடாதி, மாரியம்மன், நாகம்மா, பேச்சியம்மன், செல்லியம்மன் போன்ற இந்த கிராம தேவதைகளின் அதி ரகசியமான இதுவரை மறைக்கப்பட்ட பரிகார முறைகளும், மகா சக்தி வாய்ந்த மாந்திரீக பிரயோக சூட்சம இரகசிய பிரயோக முறைகளும் ஒளிவு மறைவுமின்றி கற்றுத் தரப்படும்.
17. நடைமுறை வாழ்க்கையில் உள்ள பல்வேறுபட்ட பிரச்சனைகளையும் தீர்க்கக் கூடிய மகா சக்தி வாய்ந்த் ரகசிய யந்திர மந்திர மாந்திரீக பிரயோகம்.
18. எப்பேற்பட்ட தோஷ தடைகளையும் நீக்கி, திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஈடேற மகா சக்தி வாய்ந்த யந்திர பிரயோக முறை.
19. நல்ல தொழில் அமைய, நல்ல வேலை கிடைக்க, செல்லும் இடங்களில் காரிய சித்தி உண்டாக மகா சக்தி வாய்ந்த யந்திர பிரயோக தாயத்து முறை.
20. பிள்ளைகளுக்கு கல்வி ரீதியான தடை விலகி,கல்வியில் நாளுக்கு நாள் முன்னேறி, கல்வியில் சிறந்து விளங்கி, மனத்தெளிவு சிந்தனை தெளிவு உண்டாகி, நாளுக்கு நாள் கல்வியில் மேன்மை உண்டாகி, அறிவு தீட்சண்யம் பெற அதிரகசிய சக்தி வாய்ந்த யந்திர மந்திர தாயத்து பிரயோகம்.
21. தொழில் ரீதியான போட்டி பொறாமைகள்,கண் திருஷ்டி இவைகள் விலகி, தீய சக்தி நம்மிடம் அண்டாமல் இருக்க யந்திர மந்திர தாயத்து பிரயோகம்.
22. தொழிலில் நாளுக்கு நாள் நன்றாக வளர்ச்சி பெற, தொழில் ஏற்றம் காண, தொழில் ஆகர்ஷன, செல்வ ஆகர்ஷன யந்திர பிரயோக முறை.
23. ஜோதிடர்களுக்கு மனோசக்தி, வாக்கு சித்தி அதிகரிக்க, வாக்குப் பலிதம் உண்டாக, மகாசக்தி வாய்ந்த ஞானயந்திர மந்திர பிரயோக பூஜை வழிமுறை.
24. செல்லும் இடங்களில் தங்களுக்கே முன்னுரிமை கிடைக்க, தங்களைக் கண்டவுடன் மதிப்பு மரியாதை உருவாக, சக்தி வாய்ந்த சர்வலோக வசிய யந்திர மந்திர தாயத்து பிரயோக முறை.
25. குடும்பத்தில் சண்டைகள் விலக, குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகி குடும்பம் செழிக்க, மகா சக்தி வாய்ந்த அபூர்வ சர்வ மங்கள யந்திர பிரயோக முறை. இதை வைப்பதன் மூலம் குடும்பத்தில் உள்ள அனைத்து விதமான துஷ்ட சக்திகள் விலகி, துரதிஷ்டங்கள் விலகி குடும்பம் செழிப்பாக, சுபிட்சமா இருக்கும்.
26. எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் விலக யந்திர தாயத்து முறை.
27. உடல் ரீதியான உபாதைகள் படிப்படியாக சரியாகி குணமாக மகா சக்தி வாய்ந்த சர்வ துஷ்ட உச்சாடண யந்திர தாயத்து பிரயோக முறை.
28. குழந்தைகளுக்கு உண்டான தோஷம் விலக, கண்ணேர் விலக, திருஷ்டி விலக, உபாதைகள் விலக, நாளுக்கு நாள் செழிப்புடன் நன்றாக வளர மகா சக்தி வாய்ந்த தாயத்து முறை.
29. காத்து, கருப்பு, பேய், பிசாசு, பில்லி, சூனியம் விலக மகா சக்தி வாய்ந்த துஷ்ட சக்தி உச்சாடன யந்திர மந்திர பிரயோக முறை.
30. வீடு, மனை, வாகனம், தொழில் யோகம் அமைய அபூர்வ சக்தி வாய்ந்த தன அதிர்ஷ்ட யந்திர தாயத்து பிரயோக முறை.
31. கடன் பிரச்சனை நாளுக்கு நாள் படிப்படியாக தீரக்கூடிய அபூர்வ குபேர செல்வ ஆகர்ஷன யந்திர மந்திர தாயத்து முறை.

**இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் பொருட்கள் :-**

1. **ரூ. 3000/-** மதிப்புள்ள ஒரு மண்டலம் பூஜையில் வைத்து யாகம் செய்து உருயேற்றப்பட்ட சக்தி வாய்ந்த யோகலெட்சுமி யந்திரம் ஒன்று இலவசம். இந்த யந்திரத்தை வீட்டில் பீரோவிலோ அல்லது தொழில் ஸ்தாபனத்தில் கல்லா பெட்டியிலோ வைக்க லெட்சுமி கடாட்சமும், தன அதிர்ஷ்டமும் உண்டாகும். 2. மதிய உணவு, இருவேளை தேனீர்,பயிற்சி கையேடு முதல் நாள் இரவு தங்கும் இடவசதி உட்பட இவையாவும் இலவசம்.

**பயிற்சி அளிப்பவர் மற்றும் தலைமை பொறுப்பாளர் :** 102 நகார, மகார, மந்திர பீஜாட்சரம் மற்றும் வாலை மனோன்மணி உபாசகர் மாந்திரீக ரத்தின சிந்தாமணி மாந்திரீக ஆசான். **சித்தர் அடியார் சுவாமிகள்.**

பயிற்சி நாள் : **11-01-2015 ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 9-15 மணிமுதல் மாலை 5-30 மணிவரை**

பயிற்சி நடைபெறும் இடம் : **நாகலட்சுமி கல்யாண மகால்**

(ராம் ஆட்டோ பெட்ரோல் பங்க் அருகில் உள்ள சந்து) கண்ணா பால் பண்ணைத் தெரு, பழனி ரோடு, திண்டுக்கல்.

அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் குறைந்த சேவைக் கட்டணத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

# பயிற்சி சேவைக் கட்டணம் ரூ. 1500/- மட்டும்.

நிகழ்ச்சி ஏற்பாடு : **I.C.V. பாஸ்கரன்,** (ஜோதிட, மாந்திரீக, தாந்திரீக நுண்ணியல், நுட்பவியல் வல்லுநர்.)

# முன்பதிவிற்கு : 94898 68978, 99445 51378

Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமன் மகிமை!

அந்த படைத்தலைவன் ராமதாசரை கோபத்தோடு பார்த்ததோடு வக்கரிப்புடன் சிரித்தான். பின் அவரை ஒரு சுற்று சுற்றிவந்தவன், "நீதான் அந்த சிவாஜிக்கு குருவா?" என்று கேட்டான்.

"ஆமாம்… எதற்காகக் கேட்கிறாய்?" என்று தாசர் திரும்பக் கேட்டார்.

"பாவம் உன் சீடன். எங்கள் படையைப் பார்த்தாயா? இது நாளையே உன் சீடனை வீழ்த்தி இந்த மகாராஷ்டிரத்தை எங்கள் டெல்லிப் பட்டணத்தோடு இணைத்துக்கொள்ளப் போகிறது."

"அப்படியா?"

"என்ன அப்படியா என்று துளியும் அச்சப்படாமல் கேட்கிறாய்?"

"நான் ராமபக்தன், அனுமனின் சீடன்… என் போன்றவர்களுக்கெல்லாம் அச்சமென்றால் என்னவென்றே தெரியாதப்பா…"

"ராமபக்தன், அனுமனின் சீடன்… யார், அந்த குரங்கு முகத்தவனா?"

"என் குருவைப் பழிக்காதே… அதிலும் ஓணான்போல் ஒரு முகத்தை வைத்துக் கொண்டு…"

"என்ன தைரியம் உனக்கு… என் முகமா ஓணான் போலிருக்கிறது?"

"இதுகூட தெரியாமல்தான் இத்தனை நாள் நீ உயிர் வாழ்ந்திருக்கிறாயா?"

"அடேய் பக்கிரி… நான் டெல்லி அரசரின் படைத்தளபதி! என்னைக் கண்டால் அழுகின்ற பிள்ளைகூட வாயை மூடிக்கொள்ளும். என்னிடம் நீ இத்தனை எகத்தாளமாகப் பேசுகிறாயா?"

"நான் எங்கே பேசினேன்? நீதான் பேசினாய். நீ ஒரு கல் எறிந்தாய். நான் பதிலுக்கு இரண்டு எறிந்தேன். ஒருவர் நமக்குத் தருவதை இருமடங்காக்கித் திருப்பித் தருவதுதானப்பா என் வழக்கம்."

"பதிலுக்கு பதிலா சொல்கிறாய். இப்போது இங்கே உன்னை என்ன செய்கிறேன் பார். யாரங்கே… இவனைப் பிடித்து மரத்தில் கட்டுங்கள். கசையால் தோல் பிய்ந்து குருதி வரும்வரை அடியுங்கள்."

அந்த தளபதியின் ஆவேசப்பேச்சைக் கேட்டு தாசர் துளியும் பயமின்றி சிரித்தார்.

"உன் சிரிப்பு சில நிமிடங்களில் ரத்தக் கண்ணீராக மாறப்போகிறது பார்." அந்த தளபதி அழுத்தம் கொடுக்கவும், தாசரிடம் சிரிப்பு மேலும் அதிகமாகியது. அது தளபதியைக்கூட யோசிக்க வைத்தது.

"ஏய்… சொல்லச் சொல்ல சிரிக்கிறாயா? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் உன் மனதில்?"

"அதைச் சொன்னால் உனக்கு இன்னமும் கோபம் வரும். பரவாயில்லையா?"

"அதையும் பார்க்கிறேன். அப்படி என்ன சொல்லப் போகிறாய்?"

"நீ வீரன்தானே?"

"அதிலென்ன சந்தேகம்?"

"பிறகு எதற்கு கட்டிப்போட்டு அடிக்கச் சொல்கிறாய்?"

"புரிகிறது… என்னோடு நேருக்கு நேர் மோது என்கிறாயா?"

"அப்படிச்சொல்ல நானொன்றும் வீரனில்லையப்பா. நானொரு அமைதியை போதிக்கும் சந்நியாசி."

"பிறகு நீ என்னதான் சொல்ல வருகிறாய்?"

"என்னை விடு. எனக்கொரு சீடன் உள்ளான். அவனோடு நீ மோது. அவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்.. உன் படையே மோதட்டும். அவனை நீங்கள் வீழ்த்திவிட்டால் நாளை நீங்கள் சிவாஜியோடு யுத்தம் புரியத் தேவையே இல்லை. சிவாஜியே உங்களிடம் சரண் புகுந்து விடுவான். அதற்கு நான் பொறுப்பு."

தாசர் மனதில் அனுமனைத் துதித்த படியே பேசிமுடித்தார். 'குருவே... நீதான் இவ்வேளையில் எனக்கு சீடனாக வந்து துணை நிற்கவேண்டும்' என்று பிரார்த்தித்துக்கொள்ள, அனுமனும் ஒரு சாதாரண மனிதன் வடிவில், "குருவே, அழைத்தீர்களா? வந்துவிட்டேன்'' என்று அவர்முன் நின்றான்.

அந்த நொடியே ராமதாசருக்கு உடம்பு சிலிர்த்தது.


ஆனால் அந்த தளபதிக்கோ இப்போது சிரிப்பு வரத்தொடங்கி விட்டது.

"இவனா... இவனா நீ சொன்ன அந்த சீடன்... இவனையா நாங்கள் வெல்ல வேண்டும் என்றாய்?" என்று கேட்டுக் கேட்டுச் சிரித்தான்.

"சிரிப்பதை நிறுத்து. உன் மோதலைத் தொடங்கு. உன் வீரர்களை முடிந்தால் இவனை அம்பாலடிக்கச் சொல்...'' என்று தாசர் கூறவும், அந்த தளபதியும் தன் வீரர்களைப் பார்த்தான். அவர்களில் ஒருவன் வசம் வில்லும் அம்பும் இருந்தன. அவனைப் பார்த்து சைகை செய்யவும் அவன் வில்லில் அம்பைப் பூட்டி சீடனை குறிபார்த்தான். மார்புக்கு குறிவைத்து அவன்விட்ட பாணத்தை, அது மார்பைத் தொடுமுன் தன் இடக்கையால் பிடித்து அப்படியே நிறுத்தவும், அதைக்கண்ட தளபதி ஆடிப்போனான்.


ஒரு பாணத்தைக் கையால் பிடிப்பதென்பது இயலாத காரியம்.

அடுத்து ஒருவருக்கு இருவர் பாணங்களைப் போட்டனர்.



அதற்கும் அதேகதி. இரண்டு பாணங்களையும் ஒரு ஈர்க்குச்சியை ஒடிப்பதுபோல ஒடித்துப்போட்டான் சீடன். அதன்பின் இரண்டு இருபதாகி, இருபது

⌘ இந்திரா சௌந்தர்ராஜன்



19

இருநூறாகியது. ஆனால் ஒரு பாணம் கூட சீடன் உடம்பைத் தீண்டவில்லை. எல்லாமே நொறுங்கி விழுந்தன.

தளபதிக்கு சலிப்பு ஏற்பட்டது. அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை. இவ்வேளையில் சீடன் தன் வசமிருந்த வில்லையும் பாணத்தையும் எடுத்தான். அதைக்கொண்டு தன் வீரர்களைத்தான் தாக்கப் போகிறானென்று தளபதி நினைக்க, அவனோ அருகிலுள்ள மரத்தை நோக்கி அதைவிட, அது அந்த மரத்தின் அவ்வளவு இலைகளையும் துளைத்துவிட்டு திரும்பிவந்து அவன்முன் மண்ணில் நட்டதுபோல் பதிந்துநின்றது.

அந்த செயல் தளபதியை உலுக்கிவிட்டது.

"என்ன தளபதி.. பாணம் வேண்டாமென்றால் மல்யுத்தம், வாள் சண்டை என்று வேறு எதனாலாவது வீழ்த்த விருப்பமா? அதற்கும் என் சீடன் தயார்'' என்று தாசர் கூற, தளபதியிடம் குழப்பம். அந்த குழப்பத்தோடு சீடனைப் பார்க்கவும், சீடன் ஒரு வினாடி தளபதி கண்களுக்கு அனுமனாகத் தெரிய, தளபதிக்குப் புரிந்துவிட்டது. அதன்பின் தளபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

### 15. நெற்குன்றம்



சென்னை- கோயம்பேடுக்கு அருகிலுள்ள- 400 ஆண்டுகள் பழமையான திருக்கோவில். கருவறையில் ஐந்தரை அடி உயரத்தில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஸ்ரீகரிவரதராஜப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சிதருகிறார். சாதாரணமாக இந்த பெருமாளின் முன்நின்று பார்க்கும்போது பெருமாளின் கண்கள் மூடியிருப்பதுபோல தோன்றுகின்றன. இருளில் நெய்விளக்கு ஆரத்தி காட்டும்போது மட்டும் கண்ணிமைகள் மெல்லத் திறந்து, விழிகள் இரண்டிலும் ஆரத்தியின் ஒளிபட்டு கண்மணிகள் உருள ஆரம்பிக்கின்றன. அந்த கணமே பெருமாளின் முகம் சிரிப்பதுபோல தோன்றுகிறது. வேறெந்த கோவிலிலும் காணமுடியாத அதிசயம். பக்தர்களிடமிருந்து வரும் கடிதங்களில் உள்ள கோரிக்கை களை பெருமாளுக்குப் படித்துச் சொல்லி, அவர் பாதங்களில் வைக்கிறார்கள். இதனால் கோரிக்கைகள் நிறைவேறும் என்கிறார்கள்.

தாசரோடு எதுவும் பேசவில்லை. மௌனமாக தன் படையோடு அங்கிருந்து விலகிச் சென்றது மட்டுமில்லாமல்; சிவாஜியோடும் யுத்தம் புரிய வில்லை.

தளபதியும் அவன் சார்ந்த வீரர்களும் விலகிய நிலையில், தாசர் சீடன் வடிவில் நிற்கும் அனுமனின் கால்களில் விழுந்து கண்ணீரோடு வணங்கினார்.

“ப்ரபோ... தீன ரட்சகனாக வந்து என்னைக் காப்பாற்றினீர்கள். இந்த உலகில் மனிதர்கள் ஏனிப்படி மண்ணாசை பிடித்து அலைகிறார் கள்?” என்று கேட்க, அனுமன் சிரித்தபடியே சொன்னான்:

“தாசா... இது கலியுகம்... துவாபர, திரேதாயுக காலங்களிலேயே மனிதர்கள் மண்ணாசை, பொன்னாசையோடு இருந்ததை நீ அறிவாய். இப்பொழுது கேட்கவா வேண்டும்?”

“இப்படி இருந்தால் நல்லோர் எப்படி வாழ்வர்?”

“ஏன், நீ இப்போது வாழவில்லையா?”

“ப்ரபோ... எனக்கு உங்கள் பக்கத்துணை இருப்பதால் ஏதும் நிகழவில்லை. மற்றவர் களுக்கு அப்படியா?”

“உனக்குத் துணைநிற்கும் நான் மற்றவர் களுக்குத் துணைநிற்காமல் போய்விடுவேனா?”

“மகிழ்ச்சி ப்ரபோ.. இந்த வார்த்தைகள் எனக்கு உற்சாகமளிக்கின்றன.”

“தாசா... கலியுகத்தில் நம்பிக்கைதான் மிகப் பெரிய ஆயுதம். அதன்முன் மற்ற ஆயுதங்கள் ஒன்றுமேயில்லை. அந்த நம்பிக்கையோடு என்னை நினைப்பவர்களுக்கு எந்தக் குறையும் ஏற்படாது...”

“ப்ரபோ... அரிய கருத்தைக் கூறினீர்கள். இந்த நம்பிக்கையை நான் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் பெயராலே இந்த நாடுமுழுக்க உருவாக்குவேன். அதுவே இனி என் பணி...”

“சரியாகச் சொன்னாய்... மாயை காரணமாக இந்த பூவுலகில் பலர் பலவிதமாக இருப்பார்கள். தங்களுக்கென்று பிரத்யேக நியாயங்களையும் கொண்டிருப்பார்கள். அதன்பின்னே அதற் கான காரணங்களும் இருக்கும். அவற்றை மாற்றுவதைவிட, அவற்றைவிட அதிகமாக நற்செயல்களை செய்வதால் அவர்கள் தானாக வலுவிழப்பார்கள். எனவே நீ உன் பக்திப் பணியை இன்னமும் வேகமாகச் செய். மகாமந்திரமான ராமநாமத்தை இடையறாது பரப்பு. அதுமட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
ஓம் ஆதி சத்குரு துணை
நர்பவி

# ஆதிசக்தி வராஹி ஆன்மீக மையம் வழங்கும்



## மக்கள் நலவாழ்வு பயிற்சி

1. சகல செல்வம், சர்வ ஐஸ்வரியும், மிகப்பெரிய குபேரயோகம், எதிலும் முதன்மை, எடுத்த காரிய வெற்றி, சர்வ வசியம், நினைத்த செயலை வெற்றியாக்கும் **வாலை ரசமணி நேரடி செய்முறை பயிற்ச்சி,** சுத்தி முறை, 16 மூலிகை, சத்து சாரனை முறை, எடை அளவு, பயன்படுத்தும் முறை.
2. கணவன் மனைவி, சண்டைகள் விலகி ஒற்றுமை, அன்யோன்யமாய் இருக்கவும், விரும்பியவர் சொல்பேச்சு கேட்கவும் பக்க விளைவு இல்லாத **வசிய ஈடு மருந்து நேரடி செய்முறை பயிற்ச்சி,** நடைமுறையில் கிடைக்கக் கூடிய மூலிகை, பேய்கருப்பு சாற்றில் செய்யும்முறை.
3. எப்பேர்பட்ட வசிய மருந்து வயிற்றில் இருந்தாலும் அதை உடன் முரித்து, வெளியேற்றும் **போகர் மூலிகை வசிய ஈடுமுரிவு மருந்து நேரடி செயல்முறை பயிற்ச்சி** (பல குடும்பத்திற்கு நன்மை பயக்கும்)
4. தரித்திரம், தடை நீக்கி மிகப்பெரிய ஐஸ்வரிய யோகத்தை தரும் **மகாலட்சுமி குபேர தனவசிய மகா அஞ்சனம் நேரடி செய்முறை பயிற்ச்சி,** ஏரல் அலிஞ்சி விதை குழித்தைலம் இறக்கும் செயல் முறை, இத்தைலத்தின் மூலம், ஆகர்ஸன மூலிகையை கரியாக்கி மை செய்யும் நேரடி செயல் முறை பயிற்ச்சி ( இந்த செயல் முறை விதி உள்ளவர்களே அரிய முடியும்) உரு இல்லாமல் உடனே வேலை செய்யும் போகர் அஞ்சன முறை.
5. சர்வ ஜனத்தையும், சர்வ செல்வத்தையும், நினைத்தவரையும் வசியமாக்கக் கூடியதும், நினைத்த காரியத்தையும், செய்கின்ற வேலையையும் சாதக மாக்கும் **வசிய விபூதி நேரடி செய்முறை,** இதன் மூலம் எதிரியை முடக்கும முறையும் விவரமாக சொல்லித்தரப்படும்.
6. வீட்டில் செல்வவிருத்தி, வம்சவிருத்தி, தெய்வ வசியம், ஆரோக்கியம், சுப மங்களம் தரும் **மகா ஜெய மங்கள மூலிகை திரி செய்முறை நேரடி பயிற்ச்சி,** இதனை வீட்டில் பயன்படுத்த சகல தோஷ நிவர்த்தி ஏற்படும், லக்ஷ்மி வாசம் செய்வாள்.
7. நமது வீட்டிலும், அலுவலகம், வியாபாரஸ்தலம், கோயில் போன்றவற்றிலும் நல்ல அதிர்வு, சர்வ ஆகர்சனம், செல்வத்தையும், ஜனத்தையும், ஐஸ்வரியத்தையும் தெய்வத்தையும் வரவைக்ககூடியதும், நித்திய லட்சுமி கடாட்சம், மேன்மையையும் உண்டாக்கவும் **ஜன–தன–மன–வசிய–தேவதா ஆகர்ஸன மோகன லக்ஷ்மி மூலிகை தூபப்பொடி நேரடி செய்முறை பயிற்சி,**
8. எதிரிகளிடமும், துஷ்டசக்திகளிடமும் இருந்து பாதுகாத்து குல தெய்வத்தையும், விரும்பும் தெய்வத்தையும் இழுக்கக் கூடிய **மங்கள கனகதாரா குடுவை நேரடி செய்முறை பயிற்சி,** இதை அனைவரும் பயன்படுத்தி வாழ்வில் மேன்மையடையலாம்.
9. வீட்டில் கணவன் மனைவி மன விகல்ப்பம் இல்லாமல் அன்யோன்யத்தை உண்டாக்கும், தலையனை மோகனா யந்திரம் வரைந்து பயன்படுத்தும் முறை. இரும்பும், காந்தமும் போல இருக்கச் செய்யும் **ரதிபதி மோகன யந்திர முறை** (பல வீட்டில் சந்தோஷம் உண்டாக்கும்)
10. ஜோதிடர்கள், குறிசொல்பவர்கள், ஆன்மீகத்துரையில் இருப்பவர்கள் உடல் தெய்வீகமாக மாறவும், வாக்கு சித்தி ஏற்படவும், அருள் வாக்கு சொல்லவும், பொது மக்களுக்கு தெய்வ பலம், தேக பலம், மனோ பலம், வாக்குபலம் தன பலம், செல்வ பலம், ஞான பலம்,தாரவல்ல. **இருளி மூலிகை கங்கன காப்பு செய்யும் முறை நேரடிபயிற்ச்சி** இதனால் எதிலும் வெற்றி, மேன்மை வசீகரம், ஆரோக்கியம், திரிகால ஞானம் உண்டாக்கும் மற்றும் பல அரிய அனுபவ விசயம் பயிற்ச்சியில் கூறப்படும்.
11. ஆன்மீக வாதிகள், ஜோதிடர்கள், குறிசொல்வோர், மாந்திரீகத்தொழில் செய்பவர்கள், கோயில் பூசாரிகள், மக்கள் நலன் விரும்புவர்கள். துஷ்டசக்தி, சகல தோஷத்தையும் விரட்டும், **மந்திர பிரம்பு செய்யும் முறை** உரு ஏற்றும் முறை.
12. சகல தோசம், தரித்திரம், கிரக பீடை, வியாபார தடை, சகல தடை நிவர்த்தி செய்யும் **வராஹ ஜோதி திரி,** செய்து பயன்படுத்தும் முறை அபூர்வ மானது (மலேசிய மடாதிபதி சாமிஜீயின் அனுபவ முறை)

**பயிற்ச்சியில் பல அரிய அனுபவ விசயங்கள் கூறப்படும்.**

## இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுபவை :

1. பயிற்ச்சியில் செய்த வசிய ஈடு மருந்து 1 உருண்டை இலவசம்.
2. பயிற்ச்சியில் செய்த வசிய ஈடு முறிவு மருந்து 1 உருண்டை இலவசம்.
3. பயிற்ச்சியில் செய்த விலை மதிப்பற்ற மகாலட்சுமி குபேர வசிய மகா அஞ்சன் – 1 இலவசம்.
4. பயிற்ச்சியில் செய்த சுப மங்களா மகா ஜெயமங்கள மூலிகை திரி – 3 இலவசம்.
5. அரிய இருளி மூலிகை அடைத்த செம்பு கங்கனம் 1 இலவசம்.
6. பயிற்ச்சி கையேடு, மதிய உணவு, தேனீர் இலவசம்.

**பயிற்சி கட்டணம் 1600/-**

**பயிற்சி நடைபெறும் இடங்கள்** முதல்நாள் இரவு தங்கும் வசதி உண்டு

**கோபால் திருமண மண்டபம்**
வடக்கு வீதி, வடபழனி முருகன் கோயில்,
சென்னை.
**பயிற்சி நாள் : 4-1-2015 ஞாயிற்றுக்கிழமை**
**பயிற்சி நேரம் : காலை 9.30 முதல் மாலை 4.30 வரை**

**ஸ்ரீ கணபதி சுப்பிரமணியம் கல்யாண மஹால்**
விராட்டிபத்து இரண்டாவது பஸ் ஸ்டாப் தேனி ரோடுமதுரை -12
**பயிற்சி நாள் : 11-1-2015 ஞாயிற்றுக்கிழமை**
**பயிற்சி நேரம் : காலை 9.30 முதல் மாலை 4.30 வரை**

பயிற்சி ஆசிரியர் : வராஹி உபாசகர், மாந்ரீக, தாந்ரீக ரத்தின சிந்தாமணி, ஆன்மீக ஆசான், ரசவாத வைத்தியர்
வாசியோகி, தவத்திரு. **முருகன் அண்ணாச்சி சுவாமி ஜி**
(3 தலைமுறை ஆன்மீகம், மருத்துவம் மாந்ரீகம், தாந்ரீகம், ரசவாதம் அனுபவம்) 7/606 ராஜாஜிதெரு, நாகமலை புதுக்கோட்டை, மதுரை – 16.

**முன்பதிவிற்கு : 8489140765, 9842686840, 9842686940**

Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுமே அனைத்து தீமைகளிலிருந்தும் மனித குலத்தை விடுவிக்கும். நான் வருகிறேன்" என்ற அனுமன், தான் இடையறாது ராமநாமம் சொல்லி தியானித்துவரும் இமயத்திற்கு அந்த நொடியே பயணமானான்.

தாசரின் பக்தவேள்வியும் தொடர்ந்தது.

டெல்லி பாதுஷாவின் படையை தாசர் திருப்பியனுப்பிய செய்தி சிவாஜியை எட்டவும், சிவாஜியிடம் பிரமிப்பு. ஒரு சாது சந்நியாசி ஒரு படையையே திருப்பியனுப்பியிருக்கிறார் என்றால் அது என்ன சாதாரண செயலா?

கேள்விப்பட்டவுடனேயே தாசரைக் காண புறப்பட்டுவந்தான் சிவாஜி.

தாசர் அப்போது சகாபூரில் பக்தி வேள்வி யில் இருந்தார். சிவாஜி வந்து அவர் காலில் விழவும் ஆசீர்வதித்தார். "சுவாமி.. இந்த மண்டலத் தையே பெரிய அளவில் சேதமின்றிக் காப்பாற்றி விட்டீர்கள்..." என்று கண்ணீர்விட்டான். "நானெங்கே காப்பாற்றினேன். உன் மண்ணைக் காத்தவர்கள் அந்தப் பிரபுவும் என் குருவாகிய அனுமனும்தானப்பா..." என்று பணிவோடு கூறினார் தாசர்.

அப்படியே சிவாஜிக்கு அரிய கருத்துக் களையும் போதிக்கத் தொடங்கினார்.

"மன்னா... நீ இந்த மண்ணுக்குத்தான் அரசன். ஸ்ரீராமன் சகல புவனங்களுக்கும் அரசன்.. அவன் பெயரால் நீ எதைச் செய்தாலும் அதில் தவறு வராது. எந்த நிலையிலும் நீ நீதிநெறி தவறிவிடக்கூடாது.

நம்வரையில் இறைவனைவிட குருவே பெரிய வர். எனக்கும் அப்படித்தான்... ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைவிட என் குருவான அனுமனே எனக்கு மிகப் பெரியவர். முதலில் குரு வணக்கத்தை செய்தபிறகே இறைவணக்கம் செய்யவேண்டும். அதேபோல பெற்றோர் மனம்வருந்தும் வண்ணம் ஒருசிறு செயலைக்கூட செய்யக்கூடாது.

நாடெங்கும் வேள்விகள் தடையின்றி நடை பெறவேண்டும். வேள்விப் புகையே மழைக்கு மூலகாரணம். அடுத்து பிராம்மணர்களை எக்காரணம் கொண்டும் துன்புறுத்தாது அவர் கள் கடமையைச் செய்ய துணை நின்றிட வேண்டும். வயதானவர்களையும் நீ நன்கு பரி பாலிக்கவேண்டும். உன் தேசத்தில் பசுக்கள் போஷிக்கப்பட வேண்டும். எவரும் எங்கும் பட்டினியால் வாடக்கூடாது. கள்வர்கள் ஊடுருவிடா வண்ணம் கண்ணாக இருத்தல் வேண்டும். அதிக வரிவிதித்து மக்களை வாட்டக் கூடாது" என்று தாசர் உபதேசித்த அவ்வளவை யும் கேட்ட சிவாஜி,

"குருவே.. நீங்களே ஆட்சி பீடத்தில் அமர்ந்து அரசாண்டால் என்ன?" என்று கேட்டான்.

"நான் சந்நியாசி. என் நோக்கத்தையே மாற்றப் பார்க்கிறாயே..."

"சந்நியாசி நாடாளக் கூடாதா?"

"கூடாது. அது சந்நியாசக் கோட்பாட்டுக்கே எதிரானது. சந்நியாசி அரசனுக்கு வழிகாட்ட லாம். அதைத்தான் நான் செய்கிறேன்" என்று கூற வும், சிவாஜி மறுமொழி பேசாமல், "நீங்கள் கூறிய கருத்துக்களை வைத்து ஒரு அறநூலை எழுதி எடுத்து வருகிறேன்" என்று புறப்பட்டான்.

சிவாஜி விலகவும், தேஷ்பாண்டே என்ற பண்டிதர் அக்காபாய் என்னும் தன் மகளோடு ராமதாசரைக் காணவந்தார். அக்கா பாய்க்கு மிகவும் இளம் வயது. நல்ல அழகுடனும் குணத் துடனும் காணப்பட்டாள். ராமதாசர்முன் மெழுகாய் உருகினாள். அவள் மனது இனி எல் லாம் அவரே என்று எண்ணத் தொடங்கிவிட்டது. அது அவள் பார்க்கும் பார்வையில் புரிந்தது. தாசர் அவள் எண்ணம் மாறவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு, அவளை அருகில் அழைத்து அவள் காதில் ராமநாமத்தை உப தேசித்தார். அவள், "இந்த நாமத்தை நான் அனு தினமும் கூறினால் என் விருப்பம் ஈடேறுமா?" என்று கேட்டாள்.

"இது உன்னை முற்றாய் மாற்றும். போய்வா" என்று கூறி அவளை அனுப்பி வைத்தார். அவளும் அரை மனதாகத்தான் பிரிந்தாள்.

அடுத்து தாசர்முன் ஒரு சித்தம் கலங்கியவன் வந்து நின்றான். அவன் பெயர் அம்பாஜி! அவன் சித்தம் தெளிய மருந்தில்லாமல் கலங்கி நிற்பதாக அவன் பெற்றோர் கண்ணீர் வடித்திட, தாசர் அந்த அம்பாஜியை அருகில் அழைத்து வாஞ்சை யுடன் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு ஸ்ரீ ராமன் பேரால் கவிதை பாடத் தொடங்கினார்.

ஐந்து கவிதைகளைப் பாடி முடித்த நிலையில் பஞ்சபூதங்களாலான அவனுக்குள் இருக்கும் சித்தக் கலக்கம் விலகியது. அவன் "குருநாதா" என்று தாசர் காலடியில் விழுந்தான். அன்று முதல் தாசரின் பிரதான சீடனாகவும் தன்னை வரித்துக்கொண்டான்.

இதற்கடுத்து ஒரு அரிய சம்பவம் தாசரால் நடைபெற்றது. அதுதான் ஆன்மிக உலகம் அவ் வளவுக்கும் எது தெளிவென்பதற்கு பதில்போல் அமைந்தது! அது...?

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

மகிழ்வித்து மகிழ்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )



| | |
|---|---|
| No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ், லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில், 4 ரோடு, சேலம் - 636 009. | No. 3-A, சன்னிதானம், P. 54 விஷாகா அபார்ட்மெண்ட், 6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை-40. |

**Cell : 98427-10545, 93677-10545** Web : mahilvithumahil.com

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா. **S. ராஜகுமார்**

**இதுவரை எங்கு பார்த்திருப்பினும், எவ்வளவு பரிகாரம் செய்தும் பலன் இல்லையா?**
**குருஜி ஐயாவிடம் வாருங்கள் உங்கள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க... உங்கள் வாழ்வில் வசந்தம் மலர்ந்திட...**

## உங்கள் பிரச்சனைக்கு சித்தரின் ஆலோசனை | என்ன வேண்டும் உங்களுக்கு ?

- கணவன் – மனைவி பிரச்சனை
- செய்வினையால் வீட்டில் தரித்திரம், சண்டை, நிம்மதியின்மை
- வட்டிகட்டவே கடன் வாங்கும் அளவுக்கு பணக்கஷ்டம்
- தொழில் சரியில்லாமை / கடன் தொல்லை நீங்க
- வேலை செய்யும் இடத்தில் அதிகாரிகள் தொல்லை இருத்தல்.
- எவ்வளவு பரிகாரம் செய்தும் திருமணம் நடைபெறாமல்
- செய்வினை, ஏவல், பில்லி, சூன்யம் பாதிப்புகள் உங்கள் கண்களுக்கு தெரியாத துர்சக்திகளால் உங்கள் வாழ்வில் பிரச்சனை
- பிரிந்தவர்கள் ஒன்று சேர
- விரும்பியவரை திருமணம் செய்ய இயலாத நிலை
- உங்கள் மனத்திற்கு பிடித்தவர் உங்களை விரும்பிட
- கலைத்துறையில் பிரகாசிக்க
- அரசியலில் பிரகாசிக்க / ரியல் எஸ்டேட் துறையில் வெற்றி பெற
- கல்வியில் மேம்பட்டு அதிக ஞாபக சக்தி பெற / நல்ல மதிப்பெண் பெற
- மாமியார் / மருமகள் இராசி ஆகிட
- இடு மருந்து எடுக்க

**இப்படி எந்த கஷ்டங்கள் இருந்தாலும் சித்தர்களின் அருளினால் முழுமையான தீர்வுபெற சித்தரை சந்தியுங்கள். முன்பதிவு அவசியம்.**

## ஸ்ரீ கர்ணா யட்சினி தேவதை உபாசனை ( வாக்கு கூற )

ஆண்கள், பெண்கள் கற்றிடும் சைவ முறை பூஜை

- பரம்பரை ஜோதிடர்கள்.
- ஆண்கள், பெண்கள்
- பரம்பரை வைத்தியர்கள்.
- ஓய்வு பெற்றவர்கள், VRS பெற்றவர்கள்.
- புதிய ஜோதிடர்கள்.
- மாற்று மருத்துவம் செய்பவர்கள்.
- வாக்கு கூறுபவர்கள்.
- ஜோதிடத்தில் ஆர்வம் உள்ளவர்கள்.
- திரிகாலம் தெரிந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள்.
- குறிப்பாக கன்னி, துலாம், மகரம், கும்ப இராசிகாரர்கள்.
- 1, 2, 4, 7,8, 9 பிறந்தவர்கள்.
- மக்களுக்கு சேவை செய்ய நினைப்பவர்கள்.
- மற்றும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வளர்கள் கற்றுக் கொள்ளலாம்.

## பலன்கள் :

- மாந்ரீகத்தினால் ஏற்படும், ஏவல், பில்லி, சூன்யம், வைப்பு ஆவிக் கோளாறுகள் அறிந்து கொள்ள முடியும்.
- நம்மிடம் வரும் அனைவரின் ஜாதக / மாந்திரீக பிரச்சனைகள், சாபங்கள், தெய்வ குற்றங்கள் முழுமையாக அறிந்து
- கொள்ள முடியும்.
- நம்மால் முடியுமா....? என்று ஏங்கி தவித்த உங்களுக்கு இக்கலை ஒரு வரப்பிரசாதம்....., வாருங்கள்.

தொழில் ரீதியாக வாக்கு கூறலாம், கடன் தொல்லை நீங்கும், வாழ்நாள் முடுவதும் அன்னையின் சக்தி உங்களிடம் இருக்கும், தீட்சையின் போது அன்னை உங்கள் உள் செல்வது பரிபூரணமாக உணர முடியும். வெளிநாடு சென்று வாக்கு கூற முடியும். பலவிதமான சூட்சம இரகசியங்கள், ப்ரயோகங்கள் உங்கள் கையில் ...

**இக்கலையை கற்க பிராப்தம் உள்ளவர்க்கே இது கண்ணில்படும்.**

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள். வாழ்வில் முன்னேற ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளவும்.

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : **24.01.2015 சனிக்கிழமை** |
| இடம் | : **சேலம்.** |
| நேரம் | : **காலை 9.30 மணி முதல்** |
| சேவைக் கட்டணம் | : **ரூ. 7700/-** |

23.01.2015 குள் முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டும் நினைத்ததை நடத்தி கொடுத்திடும் நவசண்டி ஆகர்ஷணி (மதிப்பு 5,700) பிரபஞ்ச சித்தரிடம் தனியாக பெற்றுக் கொள்ளலாம், குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே பயிற்சி உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

தீட்சையின் போது பிரபஞ்ச சித்தர் தங்களுக்கு ஆசியுடன் தருபவை.

| | |
|---|---|
| யட்சினி புத்தகம் கலரில் முழுவதும் கலரில் | : 1,700 |
| யட்சினி அஞ்ஞணம் | : 2,700 |
| யட்சினி வஸ்ய, பஸ்பம் | : 4,700 |
| யட்சினி ஆகர்ஷணி | : 2,600 |
| சக்தியூட்டப்பட்ட சந்தன மாலை | : 500 |
| உணவு மற்றும் தேநீர் | |
| யட்சினி துரியதீட்சை (விலை மதிப்பு இல்லாதது) | |
| மதிப்பு | : 12,200 |

**சென்னையில் பயிற்சி : நாள் : 27.01.2015 செவ்வாய்க்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**

**தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.**

**தனிப்பட்ட முறையில் VIP களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று கற்கலாம்.**

நீண்ட நாள் நீங்கள் தேடிய ஒரு அமானுஷ்ய நல்ல சக்தி இப்பொழுது உங்களிடம்

நல்லதிற்கு மட்டும் வாருங்கள், வாழ்வில் அனைத்தும் நல்லதாக மாறுவதை உணர்வீர்கள்

Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீரங்கம் ஆலயம்

# எங்கிருந்து தொழுதாலும் நற்பலன்கள் அருளும் ஸ்ரீரங்கம்!

பெரும்பாலும் ஆங்கிலப் புதுவருடப் பிறப்பும், வைகுண்ட ஏகாதசியும் வெவ்வேறு நாட்களில் வரும். ஆனால் 2015-ஆம் ஆண்டில் இவ்விரண்டும் ஒரே நாளில் வருகின்றன.

இத்தருணத்தில் பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தைப் பற்றிய வியப்புமிகு செய்திகளை பக்தர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

* மைசூர் மாநிலத்தில், குடகு மலைப் பகுதியில் உற்பத்தியாகும் காவிரி ஆறானது மூன்று இடங்களில் இரண்டாகப் பிரிந்து, பின்னர் ஒன்றாகக் கூடி ஓடிவருகிறது. அப்படிப் பிரிந்து கூடுமிடங்களில் அமைந்த தீவுப்பகுதிகளில் (Island) உள்ள தலங்கள் மூன்று. அவை மைசூர் மாநிலத்திலுள்ள ஸ்ரீரங்கப் பட்டினம், ஸ்ரீஷிவண சமுத்திரம் மற்றும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



⌘ என். சத்தியநாராயணன்

தமிழ்நாட்டிலுள்ள ஸ்ரீரங்கம். ஸ்ரீரங்கத்தில் காவிரியானது காவிரி, கொள்ளிடம் என இரண்டாகப் பிரிந்து ஸ்ரீரங்கத்தைச் சுற்றி ஓடுகிறது. காவிரியில் நீர்மிகும் நேரத்தில், அதிகமுள்ள நீரை தேக்கிக்கொள்வது கொள்ளிடம் ஆறாகும். இந்த இடைப்பட்ட தீவுப்பகுதியில் ஸ்ரீரங்கத்தலம் அமைந்துள்ளது. ஆறுசூழ்ந்த தீவுப்பகுதிக்கு அரங்கம் என்று பெயர். திருமகள் அருளும் கிட்டுவதால் திருவரங்கம் எனப்படுகிறது.

* 108 வைணவத் திருப்பதிகளில் முதன்மையான இடத்தை ஸ்ரீரங்கம் வகிக்கிறது.

*12 ஆழ்வார்களில் மதுரகவி ஆழ்வாரைத் தவிர 11 ஆழ்வார்கள் (ஸ்ரீ ஆண்டாள் உட்பட) 247 திருப்பாசுரங்களால் திருவரங்கத்தை மங்களா சாசனம் செய்துள்ளனர்.

* ஸ்ரீவில்லிபுத்தூரின் ஆண்டாளைப் பிராட்டியாக ஏற்றுக்கொண்ட திருத்தலம்.

* கம்பர் தாம் பாடிய இராமாயண காவியத்தை இத்தலத்தில்தான் அரங்கேற்றினார்.

* ஸ்ரீராமானுஜர் வைகுந்த பதவியை அடைந்ததும் இத்தலத்தில்தான்.

* ஸ்ரீமந் ஆண்டவன் சுவாமிகளின் திருமடம் இங்குள்ளது.

* வெளிநாடு சென்று முன்னேறவேண்டுமென்று துடிப்பவர்கள், வேலை தேடுபவர்கள், சொந்தத் தொழில் செய்ய ஆசைப்படுபவர்கள் அனைவருக்கும் யோகத்தையும் சௌபாக்கியத்தையும் தரக்கூடிய தலம் என்பது மிகப் பெரிய சிறப்பு.

* எட்டு ஸ்வயம்வியக்த தலங்களில் ஒன்று.

* நாதமுனிகளால் வழக்கிற்கு வந்த அரையர் சேவை இன்றைக்கும் நடக்கும் தலம்.

* பெரிய நம்பி, பட்டர், வடக்கு திருவீதிப் பிள்ளை, பின்னை லோகச்சாரியார், ஆகியோரின் அவதாரத் தலம்.

* மணவாள மாமுனிகள் திருவாய்மொழி காலட்சேபம் செய்த தலம்.

* உலகத்தின் எந்த மூலையிலிருந்தும், திருவரங்கம் இருக்கும் திசையை நோக்கி வணங்கினாலே போதும்; நற்பலன்கள் அனைத்தும் சேரும்.

* இங்குள்ள சந்திர புஷ்கரணியில் நீராடி, திருவரங்கனை தரிசித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

* ஸ்ரீரங்கத்தில் பாயும் காவிரி நதி, பரமபதமான ஸ்ரீவைகுண்டத்திற்கு வெளியே ஓடும் விரஜா நதிக்கு ஒப்பானது.

* நவகிரகங்களில் ஒன்றான சுக்கிர தலமாகவும் கருதப்படுகிறது.

* பெயர், கோவில், பெருமாள், தாயார், ஊர், தளிகை, வாத்யம் மற்றும் பலகாரங்கள் அனைத்தும் பெரியது என்று ஏற்றிச் சொல்லப்படும் பெருமை இத்தலத்துக்கு மட்டுமே உண்டு.

* குலசேகரர் மகள் சேரர் குலவல்லி, தில்லி பாதுஷாவின் புதல்வி துலுக்க நாச்சியார், பெரியாழ்வார் மகள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள், நந்தசோழன் திருப்புதல்வி கமலவல்லி ஆகியோர் ஸ்ரீ ரங்கத்து நாதரை மனதாரக் காதலித்து அவருடன் ஐக்கியமாகிய தலம் ஸ்ரீரங்கமாகும்.

* கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டுவரை பல்லவ மன்னர்கள், 10-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள், கி.பி. 1223-25-ல் கலிங்க அரசர்கள், 1225-ல் மாறவர்மன் சுந்தரபாண்டியன், 14-ஆம் நூற்றாண்டில் ஹொய்சாள மன்னர்கள், 17-ஆம் நூற்றாண்டு மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் விஜயநகர மன்னர் மற்றும் மதுரை நாயக்கர், தஞ்சை நாயக்கர்கள் முதலானோர் இந்தக் கோவிலின் சுவர்கள் மற்றும் கோபுரங்களை கட்டியும் பழுதுபார்த்தும் வந்துள்ளனர்.

* திருக்கோவில் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு சுமார் 156 ஏக்கர்.

* திருக்கோவில் 3,072 x 2,520 அடி நீள அகலம் கொண்டு, ஏழு மதில்களையும் ஏழு பிராகாரங்களையும் 21 கோபுரங்களையும் கொண்டது.

* உலகத்திலுள்ள திருக்கோவில் இராஜ கோபுரங்களிலேயே மிகவும் உயரமானது என்று சொல்லப்படும் தெற்கு இராஜ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!



### 16. திருக்கூடல்

மதுரை நகரப் பேருந்து நிலையத்திற்கு அருகேயுள்ள திவ்ய தேசம். ஸ்ரீகூடலழகர் வீற்றிருந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். உலகிலுள்ள அனைத்து பெருமாள் கோவில்களிலும் அதிகாலையில் பாடப்படும் 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என்ற திருப்பல்லாண்டுப் பாடல் இயற்றப்பட்ட தலம். மார்கழி மாதத்தில் இத்தலத்தை தரிசிப்பது சிறப்பு. நவகிரகங்கள் உள்ள வைணவத்தலம். பிராகாரத்தில் 108 திவ்யதேச சித்திரங்கள் முத்தாய்ப்பு. பெருமாள் கோவில்களில் அமைக்கப்படும் 96 வகையான விமானங்களில், இங்குள்ள அஷ்டாங்க விமானம் மிகவும் புண்ணியம் தருவதாகக் கருதப்படுகிறது. 125 அடி உயரங்கொண்ட கோபுரத்தில் பத்து அடி உயரமுள்ள கலசம் உள்ளது. மூன்று நிலைகளுடன் எட்டு பகுதிகளாக உயர்ந்து நிற்கும் இந்த விமானம் 'ஓம் நமோ நாராயணாய' என்ற எட்டெழுத்து மந்திரத்தின் வடிவமாகும். தாயார் மரகதவல்லி. 2,000 ஆண்டுகள் பழமையான கோவில்.

கோபுரமானது, 13 நிலை, 236 அடி உயரம், 12 கலசங்களைக் கொண்டது. இது ஸ்ரீ அஹோபில மடத்தின் 41-ஆவது ஜீயரான ஸ்ரீமந் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகளின் பெருமுயற்சியால் கட்டிமுடிக்கப்பட்டது.

✶ கோவிலின் கருவறை 240 அடி நீளம், 150 அடி அகலம் கெண்டது. மூலவர்- பெரிய பெருமாள், நம்பெருமாள், திருவரங்கநாதர் ஆதிசேடன்மீது புஜங்க சயனத்தில் பெருமிதமாகக் காட்சிதருகிறார். தாயார்- ஸ்ரீ அரங்கநாயகி. தலமரம்- புன்னை; விமானம்- பிரணவக்ருதி (ரங்க விமானம்). தீர்த்தம்- சந்திரபுஷ்கரணி. உற்சவப் பெருமாள் நின்ற கோலத்தில் உள்ளார்.

✶ திருவரங்கத்தில் இருக்கும் 'ரங்க விமானம்' ஆதியில் தானாகவே உருவானது. இதைச் சுற்றி 24 கிலோமீட்டர் தூரத்துக்குள் எங்கிருந்தாலும் முக்தி நிச்சயம். இந்த விமானம் பொன்னால் வேயப்பட்டு 'ஓம்' என்ற பிரணவ வடிவில் அமைந்துள்ளது. இந்த விமானத்திலுள்ள பரவாசுதேவர் கையில் கிண்ணத்துடன் காட்சியளிக்கிறார். அந்தக் கிண்ணம் அவரது வாயை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும், அது வாயருகில் சென்று சேர்ந்தால் உலகம் அழியுமென்றும் ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

✶ பங்குனி மாதம், வளர்பிறை சப்தமி திதி, சனிக்கிழமையன்று, சந்திரன் ரோகிணியிலும், குரு ரேவதியிலும் இருக்கும்போது திருவரங்கன் இங்கு வந்துசேர்ந்தார்.

✶ பிரம்மா, மகாவிஷ்ணுவை நோக்கி பல்லாயிரம் ஆண்டுகள் தவமிருந்து பாற்கடலிலிருந்து பெறப்பட்டது ரங்கவிமானம். நான்கு வேதங்களையும் பிரம்மன் இந்த விமானத்தில் ஓதியிருக்கிறார்.

✶ பொதுவாக ஆலயம், அதைச் சுற்றி ரத வீதிகள் என ஒரு நகரம் அமைந்திருக்கும். ஆனால் வீதிகளே பிராகாரங்களாக, நகரைத் தனக்குள் கொண்டிருக்கும் ஆலயம் இது.

✶ இங்கு ஸ்ரீமன் நாராயணனே தன்வந்திரியாக காட்சியளிக்கிறார். சாதாரணமாக எல்லா சந்நிதிகள் மேலும் விமானம் அமைப்பது மரபு. ஆனால் தன்வந்திரி வைத்தியராக இருப்பதால், நோயாளிகள் அவரிடம் வருவார்களென்பதால் ஆகம விதிகளின்படி அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதிக்குமேல் விமானம் கட்டப்படவில்லை.

✶இங்குள்ள கருட பகவான் கையில் அமிர்த கலசத்துடன் மிகப்பெரிய உருவத்துடன் கூரையை முட்டியவாறு அமர்ந்துள்ளார்.

✶ பாண்டிய மன்னர்களில் சிறந்தவனான சுந்தரபாண்டியன் காணிக்கையாக அளித்த கிரீடம் பாண்டியன் கொண்டை என்று இன்றும் சிறப்பாக நம் பெருமாளுக்கு அணிவிக்கப்படுகிறது.

✶ ஸ்ரீராமானுஜர் தன் உடலோடு சந்நிதி கொண்டது இங்குதான். இங்கு ராமானுஜர் பத்மாசன கோலத்தில் தரிசனம் தருகிறார்.

✶இன்றும் அவரது சிகை மற்றும் நகங்கள் தரிசனம் செய்யக் கிடைக்கின்றன. வருடத்துக்கு இருமுறை பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ போன்றவற்றை விழுதாக அரைத்து பற்றாக அவரது உடலில் பூசுகின்றனர்.

✶ ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார் ஆகியோர் இங்கு மட்டுமே தொண்டுபுரிந்து வாழ்ந்தவர்கள்.

✶ நாதப்பிரம்மம் தியாகராஜ சுவாமிகள் ஸ்ரீரங்கநாதரை தரிசித்து அவர்மேல் கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

✶ இங்கு உத்திரை வீதியில் இரண்டு பிரம்மோற்சவங்கள், சித்திரை வீதியில் இரு பிரம்மோற்சவங்கள் என வருடத்தில் நான்கு பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன.

✶ வைகுண்ட ஏகாதசியன்று மூலவர், தசாவதாரம் சித்தரிக்கப்பட்ட முத்தங்கி அணிந்து காட்சிதருகிறார்.

✶ எல்லா பெருமாள் கோவில்களிலும் மூலவருக்கு ஆனி மாத ஜ்யேஷ்டாபிஷேகத்தன்று மட்டுமே தைலக்காப்பு சாற்றப்படும். ஆனால், ஸ்ரீரங்கத்தில் மட்டும் இத்துடன்கூட ஆவணி பவித்ரோற்சவத்தின் இறுதி நாளிலும் தைலக்காப்பு சாற்றப்படும். எனவே ஸ்ரீரங்கநாதருக்கு மட்டுமே இருமுறை தைலக்காப்பு.

✶ இங்கு வருடத்தில் 114 நாட்கள் விழா கொண்டாடப்படுகிறது!

■


அன்பு மலரட்டும் ! அருட்பெருஞ்ஜோதி ஆனந்தம் பரவட்டும் !

**ஸ்ரீ நிலையம்**

உங்கள் பிரச்சனைகளை நீங்களே தீர்த்திட, உங்களைத் தேடி வருபவர்கள் பிரச்சனைகளை தீர்த்து வைக்க இந்தப் பயிற்சிகள் பயன்படும்.

**1. முதல் நிலைப்பயிற்சி :** முன்ஜென்ம பாவம் தீர, விதியை மாற்ற தடைகளை உடைக்க, 6 முத்திரைகள், 3பணவரவு பயிற்சிகள், ஆட்டோ ரைட்டிங், சித்தர் தரிசனம், தீயோரை மனம் மாற்ற, பாதுகாப்பு பெற இன்னும் சில என 18 பயிற்சிகள் **ரூ. 2000 /-, 2.உனக்கு நீயே குரு :** 15 பயிற்சிகள் **ரூ. 1500 /-, 3. தன ஆகர்ஷன தாந்திரீகப் பயிற்சி (நிலை1) :** 10 பயிற்சிகள் **ரூ.2000 /-, 4. தன ஆகர்ஷன தாந்திரீகப் பயிற்சி (நிலை2) :** 10 பயிற்சிகள் **ரூ.2000 /-, 5. சகல காரியசித்தி :** 15 பயிற்சிகள் **ரூ.2000/-, 6. உங்கள் வாழ்விலும் அற்புதங்கள் நடக்க :** 11 பயிற்சிகள் **ரூ.2000 /-, 7. கஷ்ட நிவாரண, துஷ்ட சம்ஹாரப் பயிற்சி (நிலை1) :** 10+ பயிற்சிகள் **ரூ.3000/-, 8. கஷ்ட நிவாரண, துஷ்ட சம்ஹாரப் பயிற்சி (நிலை2) :** 10 + பயிற்சிகள் **ரூ.3000 /-, 9. ஆங்கில மந்திரப் பிரயோகப் பயிற்சி நிலை 1 : ரூ.3000 /-, 10. ஆங்கில மந்திரப் பிரயோகப் பயிற்சி நிலை 2 : ரூ.3000 /-, 11. டாரட் ஜோதிடப் பயிற்சி** (டாரட் கார்டுகள் தரப்படும்) **: ரூ.3000 /-, 12. கடன் தொல்லையிலிருந்து விடுபட பயிற்சிகள் ரூ.3000/-** பண வரவு, கடன்காரரிடமிருந்து பாதுகாப்பு, கடன்தீர குளியல், சுவாசப் பயிற்சி, மூலிகை பயிற்சி, மந்திரக் காசு பயிற்சி ... 16 பயிற்சிகள் இதில் உண்டு.நேரிலும், தபாலிலும் பயிற்சி பெறலாம்.

தரமான அமித்திஸ்ட், மூன்ஸ்டோன் கற்கள் நியாய விலையில் கிடைக்கும்.

**மனரீதியான பிரச்சனைகளா ?** பயம், பீதி, பிடிவாதம், மரண பயம், காரணமில்லாத பயம், பில்லி சூனியம் பயம், டென்ஷன், மன உளைச்சல், மனக் குழப்பம், உடல் நடுக்கம், குற்ற உணர்வு, கவலை, தானே பேசிக்கொள்வது, ஞாபகமறதி, தேர்வு பயம், தேர்வு நேரத்தில் காய்ச்சல், படிப்பில் ஆர்வமில்லாமை, வீண் விளையாட்டுபுத்தி, தற்கொலை முயற்சி, வாழ விருப்பமில்லாமை, குடும்பத்தில் ஒற்றுமையில்லாமை,மாமியார், மருமகள் சண்டை, கணவன் மீது சந்தேகம், மனைவி மீது சந்தேகம், நல்ல தொழில் இல்லாமை,நல்ல வேலை இல்லாமை,காதல் தோல்வியால் விரக்தி, பழைய காதலை மறக்க இயலாமை .... என 300க்கும் மேற்பட்ட பிரச்சனைகளுக்கு அற்புதமான சிகிச்சை, பயிற்சி, ஆலோசனை இங்கு உண்டு. நிரந்தரமாக குணம் பெறலாம். (பக்கம் விளைவு, பத்தியம் இல்லாத சிகிச்சை, போனில் விபரம் கூறி கூரியரில் மருந்தைப் பெறலாம்.)

**எஸ். ஸ்ரீநிவாஸன்,** DNYS., DHMSc., DSM., DPFR., HHA., DVTSc

77/44, அரிசிப்பாளையம் மெயின்ரோடு, சேலம் - 636 009. **Cell : 98426 38916**

**A/c No : 407811688 Indian Bank Naal Road Br, Salem. IFSC Code : IDIB 000N064**

**எமது நூல்கள் :** 1. அழகுக்கலையில் அக்யுபிரசர் - ரூ. 32/-, 2. மனப் பயணமும், சூக்கும உடல் பயணமும்- ரூ. 45/-, 3.ஆராவின் பயனும், அதனை அறியும் விதமும் - ரூ. 42/-, 4.தியானம் செய்ய நேரமில்லையா ? - ரூ. 37/-, 5. அமித்திஸ்ட் கல்லின் அற்புத சக்திகள் - ரூ. 38/-, 6.தங்கம் செய்யலாம் வாங்க - ரூ. 55/-, 7. எட்டு (8) நடைபோடுங்கள் - ரூ. 15/- 8. கிரீன் டீ -ரூ.15/- 9. ரெஸ்க்யூ ரெமடி - ரூ. 30 /-, 10. Walk-8 Rs. 15/-, 11.நினைத்ததை நிறைவேற்றும் தாந்திரீகச் சின்னங்கள் - ரூ. 60/-, 12. சிலம்பக்கலையின் இரகசியங்கள் -ரூ. 100/-, 13. ஏன் சிரிக்க வேண்டும் ? - ரூ. 30/-, 14. மாயக்கோலின் மஹா சக்தி - ரூ. 40/-, 15.தூக்கம் வரவில்லையா ?-ரூ.40/-



தண்ணீர் மிதந்தபடி தவம் செய்யும்
வல்லமை பெற்ற உளவியல் ஆலோசகர், நூலாசிரியர்
"மனம் வசமானால் பஞ்சபூதமும் வசமாகும்"

Advt




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 ஜனவரி மாத எண்ணியல் பலன்கள்

**1, 10, 19, 28-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

இந்த மாதம் நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வெற்றியாக முடியும். இதுவரை வராமலிருந்த பாக்கிகள் யாவும் வசூலாகும். தொழிலதிபர்கள் புதிதாக தொழில்தொடங்க போட்ட திட்டம் நிறைவேறும். பங்குதாரர்கள் முழு ஒத்துழைப்பு தருவார்கள். வங்கியில் எதிர்பார்த்த கடன் வந்துசேரும். வியாபாரிகள் கொள்முதல் செய்துள்ள பொருட்கள் யாவும் நல்ல விலைக்குச் செல்லும். விவசாயிகள் நல்ல வருவாயைப் பெறுவார்கள். கோழிப்பண்ணை, ஆட்டுப் பண்ணை வைத்திருப்போரும் நல்ல லாபத்தைப் பெறுவார்கள். அரசு ஊழியர்கள் எதிலும் எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும். உடன் பணிபுரியும் பெண் ஊழியர்களால் பிரச்சினைகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நிதானமாகச் செயல்படும் ஒவ்வொரு காரியத்திலும் உங்களுக்கு வெற்றி நிச்சயம் உண்டு. சுயதொழில் புரிவோருக்கு இந்த மாதம் முழுவதும் விருத்தி ஏற்படும். திருமணமாகாத ஆண்- பெண் இருபாலருக்கும் நல்ல வரன்கள் அமையும். குழந்தையே இல்லையென்று ஏங்கும் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். மாணவர்கள் கல்வியில் உயர்வு பெறுவார்கள். அரசியல் பிரமுகர்கள் புதிய பதவிகளை அடைவார்கள்.

அதிர்ஷ்ட தேதி: 1, 10, 19, 28.

தவிர்க்கவேண்டிய தேதி: 3; 4, 22, 31; 8, 17, 26.

வணங்கவேண்டிய தெய்வம்: பெருமாள், விஷ்ணு.

**2, 11, 20, 29-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

இந்த மாதம் உங்கள் செயல்பாடுகளில் மிகுந்த கவனம் தேவை. தடை, தாமதங்கள் ஏற்படலாம். எனினும் முயற்சிக்குத் தகுந்த பலன்களை அடைவீர்கள். கடன் தொல்லை நீங்கும். புதிய வரவுகள் உங்களை மகிழ்ச்சியில் திளைக்கவைக்கும். பொருளாதாரம் மேம்படும். கணவன்- மனைவியிடையே வாக்குவாதம் வந்து நீங்கும். பிரிந்துவாழும் தம்பதியர் திடீரென மனம் மாறி ஒன்றுசேர்வார்கள். தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் தொழில் தொடங்க போட்ட திட்டம் நிறைவேறும். புதிய பங்குதாரர்கள் வந்துசேர்வார்கள். வியாபாரிகளுக்கு- போட்டி வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லை மாறும். உங்கள் விற்பனை கூடும். அரசு ஊழியர் மற்றும் இதர பணியாளர்களின் வேலைப்பளு கூடும். அதிகாரிகள் பாராட்டி கௌரவப்படுத்துவார்கள். விரும்பிய இடத்துக்கு மாறுதல் கிட்டும். ஒருசிலர் பதவி உயர்வையும் அடைவார்கள். உடல்நிலை சீராகும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தவேண்டிய மாதம். கடினமாகப் படிக்கவேண்டும். அரசியல் பிரமுகர்கள் சிலர் பொதுமக்களால் வெறுக்கப்படுவார்கள். எனவே மக்கள் சேவையில் கவனமுடன் செயல்படவேண்டும்.

அதிர்ஷ்ட தேதி: 8; 9, 18, 27.


தவிர்க்கவேண்டிய தேதி: 1; 2, 11, 20; 29; 7, 25.

வணங்கவேண்டிய தெய்வம்: அம்மன் தெய்வங்கள்.

**3, 12, 21, 30-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

இந்த மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. பெண்களால் உயர்வுண்டு. மனைவியின் யோசனையைக் கேட்டு செயல்படுபவர்கள் கூடுதல் பலன்களைப் பெறுவார்கள். இதுவரை தடைப்பட்டுவந்த சுபகாரியப் பேச்சுகள் இனிதே நடக்கும். வெளிநாடு சென்று வேலைசெய்ய எடுத்த முயற்சிகள் கைகூடும். ஒருசிலர் மத்திய அரசில் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். பிரிந்த தம்பதியர் ஒன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேர்வார்கள். கணவன்-மனைவியிடையே இணக்கமான நிலை நீடிக்கும். ஒருசில பெண்களுக்கு தாய்வீட்டு சொத்துகள் வந்துசேரும். தொழிலதிபர்கள் திட்டமிட்டபடி தொழிலில் வளர்ச்சி கூடும். தொழிலாளர்கள் ஒற்றுமையும் உண்டு. வியாபாரிகளுக்கு, வியாபாரம் கூடுவதோடு பழைய பாக்கிகளும் வசூலாகும். வீடுகட்ட போட்ட திட்டம் நிறைவேறும். அரசு ஊழியர்கள் கேட்ட இடத்துக்கு மாறுதல் கிடைக்கும். இதுவ்வரை இருந்துவந்த வேலைப் பளுவும் குறையும். பங்காளிகளுக்குள் நிலவிய சொத்துப் பிரிவினை சம்பந்தமான பிரச்சினைகள் சுமுக தீர்வுக்கு வரும். பூர்வீக சொத்துகள் வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் உயர்வார்கள். இதுவரை இருந்துவந்த மந்தநிலை மாறும். அரசியல் பிரமுகர்கள் அதிக பதட்டத்துடனேயே மாதம் முழுவதும் இருப்பார்கள். எதிலும் நிதானமாகச் செயல்படவேண்டும்.

அதிர்ஷ்ட தேதி: *3, 12, 21, 30; 9, 18, 27.*

தவிர்க்கவேண்டிய தேதி: *4, 13, 22, 31; 6; 17, 26; 29.*

வணங்கவேண்டிய தெய்வம்: அங்காள பரமேஸ்வரி மற்றும் அம்மன் தெய்வங்கள்.

**4, 13, 22, 31-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

மாணவர்கள் கல்வி நிறுவனம் மற்றும் ஆசிரியர்களால் பாராட்டப்படுவார்கள். வேலைதேடும் இளைஞர்கள் தகுதிக்கேற்ப அரசுப் பதவிகளைப் பெறுவார்கள். ஒருசிலர் வெளிநாடு போக போட்ட திட்டம் நிறைவேறும். துணிச்சலாக அதிகநேரம் வேலைசெய்து, கூடுதல் வருமானத்தைப் பெறுவார்கள். உங்களை மிகவும் வாட்டிவதைத்த நோய் நீங்கும். தொல்லை கொடுத்துவந்த உறவினர்களும் விலகிச்செல்வார்கள். பிரிந்த தம்பதியர் ஒன்றுசேர்வார்கள். விவாகரத்து கோரிய தம்பதியர் திடீரென ஒன்றுசேர்ந்து இரு வீட்டாருக்கும் மகிழ்ச்சியைத் தருவார்கள். நீண்டகாலமாக தாய்- தந்தையரைவிட்டு விலகி வாழ்ந்த பிள்ளைகள் வந்துசேர்வார்கள். அரசு ஊழியர்கள் நினைத்த இடத்துக்கு மாறுதலை அடைவார்கள். எதிர்பார்த்த பதவி உயர்வும் வந்துசேரும். தொழிலதிபர்களுக்கு, தொழிலாளர்கள் ஒற்றுமையால் உற்பத்தி கூடும். ஆனால் நிர்வாகத்தில் உள்ளவர்களால் மறைமுகத் தொல்லை வந்துபோகும். வியாபாரிகள் கொள்முதல் செய்துள்ள சரக்குகள் அனைத்தும் விற்பனையாகி நல்ல லாபத்தைப் பெறுவார்கள். குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். பெற்றோர் உடல்நலனில் கவனம் தேவை. மகான்களின் தரிசனம் கிட்டும். அரசியல் பிரமுகர்களின் சேவையை பொதுமக்கள் பாராட்டுவார்கள்.

அதிர்ஷ்ட தேதி: *1, 10, 19, 28.*

தவிர்க்கவேண்டிய தேதி: *8, 17, 26.*

வணங்கவேண்டிய தெய்வம்: சுப்பிரமணியர், துர்க்கையம்மன்.

**5, 14, 23-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

இம்மாதம் உங்களுக்கு பொற்காலம். மாதம் முழுவதும் நல்ல பலன்களாகவே நடக்கும். நாள்தோறும் நல்ல செய்திகளையும், காரிய வெற்றிகளையும் சந்திப்பீர்கள். ஆலய தரிசனங்கள் நினைத்தபடி நடக்கும். கணவன்-மனைவி ஒற்றுமை கூடும். பிரிந்த தம்பதியர் ஒன்றுசேர்வார்கள். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். தொழிலதிபர்கள் தங்கள் தொழிலை விரிவுபடுத்திட போட்ட திட்டம் நிறைவேறும். புதிய பங்குதாரர்கள் வரவால் மூலதனம் உயரும். வியாபாரிகள் புதிய கிளைகளைத் தொடங்கி அதிகமான வாடிக்கையாளர்களைப் பெறுவார்கள். இளம் விஞ்ஞானிகள் சிலர் வெளியுலகத்துக்கு வருவார்கள். அரசு ஊழியர்களுக்கு பதவி உயர்வு தடையில்லாமல் கிட்டும். விரும்பிய இடத்துக்கு மாறுதலும் வந்துசேரும். இதுவரை உங்களுக்கு தொல்லை கொடுத்த உடல்நலக்குறைவுகள் முற்றிலுமாகத் தீரும். பெற்றோர் வழியில் இருந்துவந்த மருத்துவச்செலவும் குறையும். வெளிநாடு சென்று நீண்டகாலமாக வராத பிள்ளைகள் வந்துசேர்வார்கள். மாணவர்கள் மிகவும் கவனமாகப் படிக்கவேண்டும். அரசியல் பிரமுகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் தலைமையால் பாராட்டப்பட்டு, புதிய பதவிகளையும் பெறுவார்கள்.

அதிர்ஷ்ட தேதி: 5, 14, 23; 9.

தவிர்க்கவேண்டிய தேதி: 3, 12, 21.

வணங்கவேண்டிய தெய்வம்: துர்க்கை, மகாலட்சுமி, விஷ்ணு.

**6, 15, 24-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

இதுவரை உங்களுக்கு கிடைக்காமலிருந்த பூர்வீகச் சொத்துகள் கிட்டும். அரசு ஊழியர்களில் ஒருசிலர் தற்காலிகப் பணிநீக்க தண்டனை மாறி, மீண்டும் பணியில் சேர்வார்கள். அதிகாரிகளின் ஆதரவும் கிட்டும். பிள்ளைகளுக்குத் திருமணம் நடக்கவில்லையே என்று ஏங்கும் பெற்றோர்களின் கவலை தீரும்; நல்ல வரன்கள் வந்துசேரும். வீட்டுக்கு அடங்காமல் ஊர் சுற்றிவந்த பிள்ளைகள் தங்களுக்கென ஒரு வேலையைத் தேடிக்கொள்வார்கள். கணவன்- மனைவியிடையே சண்டை வராது. குழந்தை பாக்கியமில்லாத தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். தொழிலதிபர்கள் உற்பத்திப் பொருள் அனைத்தையும் விற்பனை செய்து, நல்ல லாபத்தைப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு புதிய வாடிக்கையாளர்கள் வரவால் வியாபாரம் கூடும். பழைய பாக்கிகள் அனைத்து வசூலாகும். இளைஞர்கள் தகுதிக்கேற்ப வேலை கிடைக்கப்பெறுவார்கள். மகான்களின் தரிசனம் கிட்டும். கடிதத் தொடர்புகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும். மாணவர்கள் அதிக நாட்டத்தோடும் உற்சாகத்தோடும் படிப்பார்கள். அரசியல் பிரமுகர்கள் ஆதாய வரவுகளைப் பெறுவார்கள்.

அதிர்ஷ்ட தேதி: 6, 15, 24; 9, 18.

தவிர்க்கவேண்டிய தேதி: 3, 12, 21, 30.


வணங்கவேண்டிய தெய்வம்: மகாலட்சுமி, வெங்கடாசலபதி.

**7, 16, 25-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

மாத ஆரம்பம் முதல் முடிவுவரை சுறுசுறுப்பிற்குப் பஞ்சமில்லை. பம்பரமாகச் சுழன்று வேலைசெய்வீர்கள். நல்ல வருவாயையும் பெறுவீர்கள். செலவுகள் கூடுதலாகும். அதனை சமாளிக்க மனைவியின் சேமிப்பு கைகொடுக்கும். இதுவரை உங்களுக்கு தொல்லை கொடுத்துவந்த உறவுகள் விலகிச்செல்லும். பிள்ளைகள் கல்வியில் உயர்வார்கள்;

## மார்கழியில் தரிசிக்க மாலவனின் திருக்கோவில்கள்!

### 17. களக்காடு



திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில் அமைந்துள்ள ஸ்ரீவரதராஜப் பெருமாள் திருக்கோவிலை வீரமார்த்தாண்ட மன்னன் கட்டியதாகக் கூறப்படுகிறது. சயன மண்டபத்திலுள்ள கருவறையில் சயனக் கோலத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் அருளுகிறார். பெருமாள் சந்நிதிக்குத் தென்புறம் ஸ்ரீ ஏழுமலையான் தனிச்சந்நிதியில் எழுந்தருளியுள்ளது குறிப்பிடத்தக்கது. சுவாமியை சுற்றிவந்து தரிசிக்க வசதியாக பிராகாரமும் அமைக்கப்பட்டுள்ளது. பிராகாரத்தில் விநாயகப்பெருமாள் எழுந்தருளியுள்ளார். இத்தலப் பெருமாளை தினமும் தரிசனம் செய்துவந்தால் பிணிகள் அகன்று பேரின்பம் பெறலாமென்பது ஐதீகம். மேலும் குழந்தை இல்லாதவர்களும், திருமணமாகாதவர்களும் இவரை வழிபட்டால், குறைகள் தீரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அடுத்த விநாடியில் தீர்வு அளிக்கும் அபூர்வ ஆராமேக்ஸ்

நீங்கள் சந்திக்கும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மூல காரணம் ஒன்றே ஒன்று மட்டுமே. அது உங்களின் ஆரா (புறக் கண்களுக்குத் தெரியாத உங்களின் உடலைச் சூழ்ந்துள்ள உயிர் சக்தி) பூமி தோஷம் (Geopathy), வாஸ்த்து தோஷம், கண் திருஷ்டி, ஆவிகள், செய்வினை (Black Magic) போன்ற அமானுஷ்ய தீய சக்திகளின் தாக்குதல்களால் பலமிழந்து போவதே ஆகும். ஆராவை எதிர்மறை சக்திகள் தாக்காமல் ஒரு வேலி அமைத்துவிட்டால் அனைத்துப் பிரச்சனைகளிலிருந்தும் உடனடி தீர்வு ஆரம்பம்.


**17.11.2014 அன்று சென்னை புரசைவாக்கத்தில் அமைந்துள்ள டாக்டர் சிக்கந்தர் ஜெயின் கிளினிக்கில் மனிதனின் ஆரா மற்றும் 7 சக்தி மையம் என்று அழைக்கப்படும் 7 சக்ராஸ் நிலையை அளக்கும் உலக சுகாதார மையத்தால் (WHO) அங்கீகரிக்கப்பட்ட கிர்லியன் கேமராவினால் எடுக்கப்பட்ட ஒருவரின் ஆரா மற்றும் 7 சக்ராஸ் படத்தைக் கீழே காணவும்.**






11149 (60%)

**படம் 1, லாக்கெட் எதுவும் போடாமல் எடுத்த 7 சக்ராஸ் மற்றும் 'ஆரா' படம்.**
இதில் 2, 3, 4, 5, 6 சக்ராஸ்கள் சரியாக நடுக்கோட்டில் சமநிலையில் அமையாமலும் ஆராவின் பலம் 11149 (60%) அளவே இருக்கின்றது. இதனால் மிக சாதாரணமான எதிர்மறை சக்திகளும் எளிதாக உங்களைத் தாக்க முடிகின்றது. இதன் காரணமாகவே,

1. குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி, ஒவ்வாமைகள், தலை வலி, உடல் வலி, மூட்டு வலி, இடுப்பு வலி, தாம்பத்யக் குறைபாடு, சர்க்கரை நோய், இதய நோய், ஜீரணக் கோளாறு, புற்றுநோய், போன்ற ஏராளமான உடல் ஆரோக்கியப் பிரச்சனைகள்,
2. மனரீதியிலான குழப்பங்கள், மறதி, பயம், சந்தேகம், எரிச்சல், தற்கொலை எண்ணம் மேலோங்கி இருத்தல் என ஏராளமான பிரச்சனைகள்,
3. எடுத்த முயற்சிகளில் தோல்வி, வியாபாரத்தில் தோல்வி, தொடர் தடைகள், பணப் பிரச்சனைகள் என ஏராளமான பிரச்சனைகள்,
4. மற்றவர்களிடம் எப்பொழுதும் எரிச்சல்படுவது, சுமூகமான உறவுகளை ஏற்படுத்த முடியாதது என நூற்றுக்கும் மேற்பட்ட பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது.





16529 (92%)

**aura max**
Aura Shield Locket



**படம் 2, ஆராமேக்ஸ் லாக்கெட் போட்ட அடுத்த 5 நிமிடத்தில் எடுத்தது.**
இதில் இவரின் 7 சக்ராஸ்களும் நடு நேர்க்கோட்டில் 92% சமநிலையில் இருப்பதையும், ஆராவின் பலம் 16529 (92%) என்கிற அளவில் மிக மிக அற்புதமாக உயர்ந்திருப்பதையும் காண முடிகின்றது. இதன் காரணமாக எந்தவிதமான எதிர்மறை சக்திகளும் இவரைத் தாக்கவும் முடியாது. மேலே குறிப்பிட்ட எந்தவிதமான பிரச்சனைகளையும் ஏற்படுத்தவும் முடியாது.

**உலகின் பல்வேறு இடங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட 56க்கும் மேற்பட்ட அரிய நானோ மினரல்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆராமேக்ஸ் முழுமையான விஞ்ஞானம் சார்ந்தது!**
**ஆனாலும் அனைத்து ஆன்மீகப் பிரச்சனைகளுக்கும் உடனடித் தீர்வு தரக் கூடியது!!**

**இதில் இல்லை என்றால் மாந்த்ரீகம், ஜோதிடம், பரிகார பூஜை, வாஸ்து, அதிர்ஷ்டக் கற்கள், கயிறு, தாயத்து, தகடு போன்ற வேறு எதிலும் தீர்வு நிச்சயம் இல்லை!**


"Aura Healer"
**P.N. Parthiban**

**Auramax 21 Days Challenge**
**Result within 24 hrs to 21 days or 100% Money Back***
*conditions apply

**Wanted Area Franchisees!**
A great business opportunity for Vastu Consultants, Practitioners of Reiki, Alternative Medicine & Pranic Healing, Psychiatrists, Insurance Agents etc.
**For business enquiry only contact: +91 99417 74433**

YOU•ME
**Worldwide Marketed By,**
B Kay Building, 2nd Floor,
No. 154/105, Swamy Naicken Street,
Chintadripet, Chennai - 600 002.
**Ph: 044 2854 5689 | +91 99620 78906, +91 72999 33669**
**www.auramax.in**

Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களை மகிழ்ச்சியில் திளைக்க வைப்பார்கள். மத்திய அரசு வேலைக்குத் தேர்வெழுதி பதவி நியமன ஆணைக்காகக் காத்திருப்போரின் எண்ணம் நிறைவேறும். அரசு ஊழியர்கள் நிலுவை பாக்கிகள் வரப்பெறுவார்கள். ஒருசிலருக்கு பதவி உயர்வும், விரும்பிய இடத்துக்கு மாறுதலும் கிட்டும். தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் தங்கள் வியாபாரத்தைப் பெருக்குவார்கள். புதியதொழில் தொடங்க போட்ட திட்டம் நிறை வேறும். பிரிந்த தம்பதியர் ஒன்றுசேர்வார்கள். பூர்வீக சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் நீங்கும். வியாபாரிகளுக்கு விற்பனையில் இருந்துவந்த மந்தநிலை மாறும். அனைத்து தரப்பு மக்களும் நல்ல பலன்களைப் பெறக் கூடிய மாதம். மாணவர்கள் கல்வியில் உயர்வார்கள். அரசியல் பிரமுகர்களில் ஒருசிலர் புதிய பதவிகளைப் பெறுவார்கள்.

அதிர்ஷ்ட தேதி: 1, 10, 19; 2, 11, 20.

தவிர்க்கவேண்டிய தேதி: 7, 16.

வணங்கவேண்டிய தெய்வம்: கணபதி, சுப்பிரமணியர்.

## 8, 17, 26-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:

இந்த மாதம் உங்களது முயற்சிகள் அனைத்திலும் வெற்றியையும் அதனால் நல்ல பலன்களையும் அடைவீர்கள். பொருளாதார நிலையில் இருந்துவந்த தட்டுப்பாடுகள் நீங்கும். கடன் படிப்படியாகக் குறையும். பிள்ளைகள் வகையில் தடைப்பட்டுவந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் இனிதே நடக்கும். நல்ல வரன்களாக அமையும். மக்களால் நன்மையடையும் காலம். தொழிலதிபர்கள் வெளிநாட்டில் தொழில்தொடங்க போட்ட திட்டம் நிறைவேறும். அதற்கான நிதி உதவிகளும் கிடைக்கும். பங்குதாரர்கள் பக்கத்துணையாக இருப்பார்கள். வியாபாரிகள் வர்த்தகத்தில் நல்ல லாபத்தைப் பெறுவார்கள். பழைய பாக்கிகள் அனைத்தும் வசூலாகும். வேலைதேடும் இளைஞர்கள் தகுதிக்கேற்ப அரசுப்பணியில் சேர்வார்கள். கணவன்- மனைவி ஒற்றுமை கூடும். பிரிந்தவாழ்ந்த தம்பதியர் ஒன்றுசேர்வார்கள். குழந்தை பாக்கியம் கிட்டும். காணாமல்போன பொருட்கள் கிடைக்கும். அரசுப்பணியில் உள்ளவர்கள் விரும்பிய இடத்துக்கு மாறுதலைப் பெறுவார்கள். தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவர்கள் மீண்டும் உத்தரவு பெற்று நல்ல இடத்தில் பணியில் சேர்வார்கள். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தவேண்டும். அரசியல் பிரமுகர்கள் ஒருசிலர் தலைமையின் போக்கு பிடிக்காமல் கட்சியிலிருந்து விலகுவார்கள். நிதானம் தேவை.

அதிர்ஷ்ட தேதி: 1, 10, 19; 9, 18, 27.

தவிர்க்கவேண்டிய தேதி: 4, 13, 22, 31.

வணங்கவேண்டிய தெய்வம்: வெங்கடாசலபதி, திருச்செந்தூர் முருகன்.

## 9, 18, 27-ஆம் தேதிகளில் பிறந்தவர்களுக்கு:

இந்த மாதம் உங்கள் காரியங்களில் முயற்சிக்குத் தக்க மேன்மையை அடைவீர்கள். பொருளாதார வரவு தடையின்றி அமையும். ஒருசிலர் புதிய வீடு, வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும். பூர்வீகச் சொத்துகளில் இருந்துவந்த வில்லங்கம் நீங்கும். வழக்குகள் சாதகமாகும். கணவன்- மனைவி ஒற்றுமையில் குறைவிருக்காது. பிள்ளைகள் கல்வியில் உயர்வார்கள். போட்டிகளிலும் வெற்றி பெறுவார்கள். இளைஞர்கள் வேலைதேடி வெளிநாடு செல்ல போட்ட திட்டம் நிறை வேறும். ஒருசிலர் அவர்கள் வேலைபார்க்கும் கம்பெனிமூலம் வெளிநாடு சென்றுவருவார்கள். பிள்ளைகளின் திருமணம் நல்லபடியாக முடியும். தொழிலதிபர்கள் தங்கள் தொழிலை விரிவாக்க போட்ட திட்டம் நிறைவேறும். தொழிலாளர்கள் ஒற்றுமை கூடும். மகான்களின் தரிசனம் கிட்டும். வியாபாரிகளுக்கு விற்பனை படுஜோராக இருக்கும். அரசு ஊழியர்களின் வேலைப்பளு கூடும். அதனை சிறப்பாகச் செய்து மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத் தலைவர்கள் பொருளாதார உயர்வால் மகிழ்ச்சிகொள்வார்கள். பிரிந்துசென்ற உறவுகள் மற்றும் பிள்ளைகள் வந்துசேர்வார்கள். அரசியல்வாதிகள் சிலரது பதவி தலைமையால் மாறும் அல்லது இல்லாமல் போகும். எனவே பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

அதிர்ஷ்ட தேதி: 5, 14, 23; 9, 18, 27.

தவிர்க்கவேண்டிய தேதி: 2, 11, 20, 29.

வணங்கவேண்டிய தெய்வம்: திருச்செந்தூர் முருகன்.

செல்: 94871 68174


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஸ்ரீ திரிபுரஈஸ்வரி பகவதி துணை

# ஸ்ரீ திரிபுரஈஸ்வரி மந்திராலயம்

7/29, அழகிரி நகர் முதல் குறுக்கு தெரு, வடபழனி,
(வடபழனி முருகன் கோயில் பின்புறம்), சென்னை - 600 026



## சித்தர்கள் வழி தெய்வீக மாந்தீரீக மூலிகை, மை வித்தை மந்திர சூட்சும பயிற்சி

ஜோதிஷ, மாந்திரிக பூசாரிகள், ஆன்மீக அன்பர்கள் இக்கலையை ஆண் / பெண் இருபாலரும் முன் அனுபவம் இல்லாதவர்களும் கற்று எளிய முறை பயிற்சி பெற்று பலன் பெறலாம்

1. சகல ஐஸ்வர்யம், தனவரவை விருப்பங்களை நிறைவேற்றி தரும் "வாஞ்சை கணபதி" சித்தி செய்யும் முறை.
2. கடன் பிரச்சனை, வறுமை அகல ஸ்ரீ உச்சிஷ்ட கணபதியும், "ஸ்ரீ நரசிம்மர்" பரிகார முறை.
3. நமக்கு தேவையான அனைத்து வளமும் தந்து, நம் குலம், சந்ததியை காக்கும் "ஸ்ரீ ராஜராஜேஸ்வரி" சித்தி பெறும் முறை, பிரயோக முறையும்.
4. சித்தர்கள் கையாண்ட ஓலைச்சுவடி ரகசிய ஏட்டு பிரதி முறையான ஸ்ரீ வீரஹனுமரை வசியபடுத்தும் யந்திர, மந்திர, சித்தி பெறும் பூஜைமுறை.
5. ஸ்ரீ வீர ஹனுமரை வசியபடுத்தி நம்மை பாதுகாக்கும் முறை.
6. ஸ்ரீ வீர ஹனுமர் மூலிகை பார்வை அஞ்சனம் வசிய அஞ்சனம் செய்முறை.
7. ஸ்ரீ வீர ஹனுமரால் பார்வை அஞ்சன மையால் செய்வினை, ஏவல், பில்லி, சூனியம், புதையல் கண்டுபிடிக்கும் முறை.
8. ஸ்ரீ வீர ஹனுமர் வசியமாக்கி அருள் வாக்கு கூறும் முறை.
9. ஸ்ரீ வீர ஹனுமரால் சகல வசியம் செய்யும் மை யந்திர மந்திர பிரயோக முறை.
10. ஸ்ரீ ஹனுமரால் பிரிந்த வரை, சேர்க்கும், அடிமையாக்கும் மோகன யந்திர, மந்திர பிரயோக முறை.
11. ஸ்ரீ ஹனுமரால் சகல ஜன/தன வரவழைக்கும், பிரிந்து சென்ற வரை வரவழைக்கும் ஆகர்ஷண யந்திர, மந்திர பிரயோக முறை.
12. ஸ்ரீ ஹனுமரால் எதிரிகள் ஏவிவிடும் ஏவலை, நோயை, துர்சக்திகளை தடுக்கும் மாந்திரிக பிரயோகத்தை தடுக்கும் தம்பன யந்திர, மந்திர பிரயோக முறை.
13. ஸ்ரீ வீரஹனுமரால் வறுமையை விலக்க, தீராத நோய், சத்ரு சந்திராதியை விரட்டும் துர்சக்திகளை விரட்டும் உச்சாடன யந்திர, மந்திர பூஜைமுறை.
14. ஸ்ரீ வீர ஹனுமரால் எதிரி வைக்கும் செய்வினை, வைப்பு, தீராநோய் சத்ரு மாந்திரிக பிரயோகத்தை முறிக்கும் மாரண பிரயோகம் முறை.
15. ஸ்ரீ வீர ஹனுமரால் நவக்கிரக தோஷம் விலக்கும் முறை. திருமண, தொழில் தடை விலக்கும் முறை மற்றும் ஸ்ரீ வீர ஹனுமரின் ஏவல் விடும் பிரயோக முறை.

பயிற்சிக்கு வருபவர்கள் கண்டிப்பாக பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன் வரவும்

இப்பயிற்சியில் இன்னும் பல சூட்சும இரகசியங்களை ஒளிவு மறைவின்றி கற்பிக்கப்படும்

இப்பயிற்சிகலந்து கொள்பவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படுபவை:

1. சர்வ தன/ ஜன வசியம் தரும் ஜன ஆகர்ஷண மூலிகை மை இலவசம்.
2. மாந்தீரீகத்திற்கும், மருத்துவ பயன்பாட்டிற்கான 400 மூலிகை படம், மூலிகை பெயருடன் கூடிய C.D. இலவசம் (1)
3. இருவேளை தேநீர், மதிய உணவு, பயிற்சி கையேடு வழங்கப்படும்.

பயிற்சிக் கட்டணம் ₹ 1500/- மட்டும்

ஸ்ரீ மலையாள பகவதி உபாசகர் குருஜீ சிவ முருக சுவாமிகள் வடபழனி, சென்னை.

**முன் பதிவிற்கு: 9884435996, 7358357696**

பயிற்சி நடைபெறும் இடங்கள்

**கோபால் திருமண மண்டபம்**
வடபழனி முருகன் கோயில் பின்புறம், சென்னை - 26.
பயிற்சி நாள்: 11.01.2015, ஞாயிற்றுக்கிழமை
பயிற்சி நேரம்: காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரை

**ஹோட்டல் பேரல்ஸ் மீட்டிங் ஹால்**
முதல் தளம். எண்.95, மேற்கு பெருமாள் மேஸ்திரி தெரு
(டவுன் ஹால் ரோடு), பெரியார் பஸ், இரயில் நிலையம் அருகில், மதுரை - 1
பயிற்சி நாள்: 25.01.2015, ஞாயிற்றுக்கிழமை
பயிற்சி நேரம்: காலை 9.00 மணி முதல் 4.30 மணி வரை

Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூ**ற்றியெட்டு வைணவத் திருத்தலங்களில் முதன்மையானது ஸ்ரீரங்கம். இங்கு பள்ளிகொண்டிருக்கும் மூலவர் ஸ்ரீரங்கநாதர் கருவறைமுன் இரண்டு தூண்கள் உள்ளன. இவை வைகுண்டவாசலுக்கு முன்னுள்ளதை நினைவுகூரும். எனவே, இவரை தரிசித்தாலே வைகுண்டத்திலுள்ள பெருமாளை தரிசித்த பலன்கிட்டும் என்பர்.

மார்கழி மாத வளர்பிறை ஏகாதசித் திருநாளை 'வைகுண்ட ஏகாதசி' என்று போற்றுவர். அன்று வைணவத் திருத்தலங்களில் 'பரமபதவாசல்' (சொர்க்க வாசல்) திறப்பு வைபவம் சிறப்பாக நடைபெறும். சில திருத்தலங்களில் இந்த வைபவம் வித்தியாசமான முறையில் கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் வைகுண்ட ஏகாதசி விழா 'பகல் பத்து இராப்பத்து' என்று வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பரமபதவாசல் திறப்பு இந்த வருடம் 1-1-2015-ல் நடக்கிறது. அன்று அதிகாலை 3.30 மணிக்கு நம்பெருமாள் ரத்தின அங்கி, பாண்டியன் கொண்டை, கிளிமாலை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திருவாபரணங்கள் அணிந்து மூலஸ்தானத்திலிருந்து சிம்மகதியில் புறப்பட்டு வெளியில் வருவார். தொடர்ந்து இரண்டாம் வலம்வந்து நாழிக் கோட்டான் வாசல் வழியாக மூன்றாம் பிராகாரத்திற்கு வரும் நம்பெருமாள், துரைப்பிரதட்சிணம் வழியாக பரமபதவாசல் பகுதிக்கு வருவார். முன்னதாக விரஜாநதி மண்டபத்தில் அவர் வேதவிண்ணப்பம் கேட்டருள்வார்.

அதைத் தொடர்ந்து காலை 4.30 மணிக்கு பரமபதவாசல் திறக்கப்படும். அப்போது நம்பெருமாள் பக்தர்கள் புடைசூழ பரமபதவாசலைக் கடந்து மணல்வெளி, நடைப் பந்தல், தவுட்டாவாசல் வழியாக ஆயிரம் கால் மண்டபத்தின் எதிரிலுள்ள திருக்கொட்டகைக்கு வருவார். அங்கு ஒரு மணி நேரம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்களுக்கு சேவைசாதிப்பார். அதன்பின்னர் ஆயிரம் கால் மண்டபத்திலுள்ள திருமாமணி மண்டபத்தில் ஆஸ்தானமிருந்து நள்ளிரவு வரை பக்தர்களுக்கு சேவை சாதிப்பார். பின்னர் இரவு 12.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 1.30 மணிக்கு மூலஸ்தானம் சேருவார்.

இதற்கு முதல் நாள் வைகுண்ட ஏகாதசியின் சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றான மோகினி அலங்கார தரிசனம் நடைபெறும். இதை முன்னிட்டு உற்சவர் நம்பெருமாள், நாச்சியார் திருக்கோலம் எனப்படும் மோகினி அலங்காரத்தில் அர்ச்சுன மண்டபத்தில் ஆஸ்தான மிருப்பார். மாலையில் நான்காம் பிராகாரத்துக்கு வந்து பக்தர்களுக்கு சேவை சாதிப்பார். இரவு 8.00 மணிக்கு கருடமண்டபத்தில் ஆழ்வார்களுக்கு அருள்பாடு சாதித்த பின்னர், 9.00 மணிக்கு மூலஸ்தானம் சேருவார். இந்த வைபவங்கள் ஸ்ரீரங்கம் கோவிலில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசி விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாகும். இந்த விழாவை முன்னிட்டு அரையர்கள் அபிநயத்துடன் பாசுரங்கள் பாடி நடித்துக் காட்டும் 'அரையர் சேவை' நிகழ்ச்சி பக்தி பரவசத்தை யூட்டும்.

புதுக்கோட்டையிலிருந்து சுமார் 17 கிலோமீட்டர் தொலைவிலுள்ள தலம் திருமயம். (திருமெய்யம்). இங்கு அருள்புரியும் பெருமாள், ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதரைவிட பெரிய திருவுருவில் பள்ளிகொண்டிருக்கிறார்.

சந்நிதி வாயிலிலிருந்து பெருமாளின் முழு உருவையும் தரிசிக்கமுடியாது. எனவே, அவரை தரிசிக்க வசதியாக இரண்டு சாளரங்கள் உள்ளன. ஒரு சாளரம் வழியே இவரின் திருமுகத்தையும், மற்றொன்றின் வழியே திருவடியையும் காணலாம். பெருமாளின் திருப்பாத தரிசனம் மிகுந்த புண்ணியம் தருவது.

பொதுவாக ஏகாதசி திதியைக் கணக்கில் கொண்டு சொர்க்கவாசல் திறக்கப்படுவது வழக்கம். ஆனால் திருமயத்தில் ஏகாதசி திதியையொட்டி வரும் பரணி நட்சத்திரத் திருநாளன்று சொர்க்கவாசல் திறக்கப்படுகிறது. சில நேரம் ஏகாதசி திதியுடன் பரணி நட்சத்திரம் வந்தால் அன்றே பரமபதவாசல் திறக்கப்படும். இவ்வாண்டு பரணி நட்சத்திரம் 31-12-2014 அன்று முன்கூட்டியே வருவதால், ஒருநாள் முன்னதாக பரமபதவாசல் வைபவம் நடைபெறும்.

திருப்பதி- திருமலையில் இந்த பரமபதவாசல் நிகழ்ச்சியெல்லாம் இல்லை. அதற்கு பதிலாக 'முக்கோடி பிரதட்சிணம்' என்ற வைபவம் நடைபெறும்.

திருப்பதி திருக்கோவிலில் சம்பங்கி பிராகாரம் (முதல் பிராகாரம்) மற்றும் விமான பிரதட்சிணம் (இரண்டாம் பிராகாரம்) ஆகியவை தவிர, 'முக்கோடி பிரதட்சிணம்' என்றொரு பிராகாரமும் உண்டு.

இந்தப் பிராகாரம் வருடத்தில் மூன்று நாட்கள்- அதாவது மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசிக்கு முதல் நாளான தசமி திதி முதல் துவாதசி வரை திறந்துவிடப்படும். திருப்பதியில் இந்த முக்கோடி பிரதட்சிணம், சொர்க்கவாசலுக்கு சமமாகப் போற்றப் படுகிறது.

கேரள மாநிலத்தில் வைகுண்ட ஏகாதசியை 'விருச்சிக ஏகாதசி' என்கிறார்கள். குருவாயூர்

# பேரின்பம் தரும் சொர்க்க வாசல்!




வைகுண்ட ஏகாதசி 1-1-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலில் இந்த விழாவை பதினெட்டு நாட்கள் கொண்டாடுகிறார்கள். இதையொட்டி தீப ஸ்தம்பங்களில் விளக்குகள் ஏற்றப்பட்டு, ஆலயம் சொர்க்கலோகம்போல் காட்சியளிக்கும். ஏகாதசி அன்று அதிகாலை 3.00 மணிமுதல் மறுநாள் துவாதசிவரை கோவில் திறந்தே இருக்கும். விருச்சிக ஏகாதசியையொட்டி அதிகாலை வேளையில் குருவாயூரப்பனை தரிசிப்பது சொர்க்கவாசல் வைபவத்துக்கு சமமாகக் கருதப்படுகிறது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள 'ஆதிரங்கம்' என்று போற்றப்படும் ஸ்ரீரங்கப்பட்டினத்தில், தை மாத மகர சங்கராந்தி நாளன்று (பொங்கல் திருநாளில்) மாலையில் ஸ்ரீரங்கநாதர் சொர்க்க வாசலைக் கடக்கிறார். வருடத்தில் அன்று ஒருநாள் மட்டும் மூலவர் பெருமாள் வெண்ணெய்க் காப்பில் காட்சிதருகிறார்.



புகழ்பெற்ற குடந்தை ஸ்ரீசாரங்கபாணி கோவிலில் வைகுண்ட ஏகாதசி விழா கொண்டாடுவர். ஆனால், அங்கு பரமபதவாசல் கிடையாது. இத்தலத்தில் அருள்புரியும் பெருமாள் நேரே வைகுண்டத்திலிருந்து வந்தார் என்பது ஐதீகம். இவரை வழிபட்டாலே பரமபதம் கிடைத்துவிடும் என்பதால், சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி கிடையாது. மேலும், இங்கு பெருமாளை தரிசிக்க தட்சிணாயன வாசல், உத்தராயன வாசல் என்று இரண்டு வாயில்கள் உள்ளன. தை முதல் ஆனி வரை உத்தராயன வாயில் திறந்திருக்கும். ஆடி முதல் மார்கழி வரை தட்சிணாயன வாயில் திறந்திருக்கும். தட்சிணாயன வாயிலைக் கடந்து சென்றாலே பரமபதம் கிடைக்கும். வைகுண்ட ஏகாதசி அன்று மட்டும் இக்கோவில் காலை 4.30 மணிக்கே திறந்திருக்கும்.

இந்த இரண்டு வாயில்களும் பதினெட்டுப் படிகள் கொண்டவை. இதில் ஏறிச்சென்று பெருமாளை தரிசிப்பது, வைகுண்டத்தில் பெருமாளை தரிசனம் செய்ததற்கு சமம் எனப்படுகிறது.

இதேபோல, திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் அருகேயுள்ள திருவெள்ளறை திருத்தலத்தில் ஸ்ரீபுண்டரீகாட்சப் பெருமாள் கோவில் கொண்டுள்ளார். நின்ற கோலத்தில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் அருள்புரியும் இவரை தரிசிக்க தட்சிணாயன வாயில், உத்தராயன வாயில் என இரண்டு வாயில்கள் உள்ளன.

பெருமாளை தரிசிக்க 18 படிகளைக் கடக்கவேண்டும். இவை கீதையின் பதினெட்டு அத்தியாயங்களைக் குறிக்கின்றன. அடுத்த கோபுர வாயிலில் நான்கு படிகள் உள்ளன. இவை நான்கு வேதங்களாகக் கருதப்படுகின்றன. அதன்பின் பலிபீடத்தை சேவித்து ஐந்து படிகளைக் கடக்கவேண்டும். இவை பஞ்சபூதங்களாகக் கொள்ளப்படுகின்றன. அதன்பின் நாழிக்கோட்டான் வாயிலை அடையவேண்டும். அதன்பின்தான் கருவறையை அடையமுடியும். வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு காலை நான்கு மணிக்கே கோவில் திறந்துவிடுவர். அப்போது தட்சிணாயன வாயில் வழியாகச் சென்று பெருமாளை தரிசிப்பது பரமபத வாசல் திறப்புக்கு சமமாகக் கருதப்படுகிறது.

வைணவத் திருத்தலங்களில் வைகுண்ட ஏகாதசி விழா நடைபெறுவதுபோல் தமிழகத்தில் சில சிவாலயங்களிலும் இவ்விழா நடைபெறுவதைக் காணலாம்.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலில், அம்மன் சந்நிதிக்குச் செல்லும் வழியில் ஸ்ரீகோபாலகிருஷ்ணன் சந்நிதி உள்ளது. இங்கு வைணவக் கோவில்களில் நடைபெறும் அனைத்து விழாக்களும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. ஸ்ரீகோபாலகிருஷ்ணன் சந்நிதிக்கு அருகில் சொர்க்கவாசல் உள்ளது. வைகுண்ட ஏகாதசியன்று கோவில் குருக்கள் ஒரு விளக்கில் பெருமாளை ஆவாகனம் செய்து விடியற்காலை 4.30 மணிக்கு சந்நிதிக்குள் நுழைவார். அப்போது பக்தர்களும் சென்று பெருமாளை தரிசிப்பார்கள்.

இதேபோல முருகப் பெருமானின் முதல் படைவீடான திருப்பரங்குன்றத்தில்,


Digitized by Noolaham Foundation.

முருகப்பெருமான் கருவறைக்கு அருகில் பெருமாளுக்கும் தனிச்சந்நிதி உள்ளது. இதனால் இங்கு வைகுண்ட ஏகாதசி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சிறப்பு தரிசனத்திற்குச் செல்லும் வழியிலுள்ள கதவு, ஆண்டுக்கு ஒருமுறை வைகுண்ட ஏகாதசியன்று மாலையில் இரண்டு மணி நேரம் சாற்றப்படுகிறது. அந்தக் கதவில் சந்தனத்தால் திருநாமம் போடப்பட்டு, மலர் அலங்காரம் செய்வார்கள். உற்சவர் சந்நிதியில் பெருமாளுக்கு சர்வ அபிஷேகங்கள் நடைபெற்றதும் சிறப்பு அலங்காரம் நடைபெறும். இதைத் தொடர்ந்து பெருமாள் பெரிய கதவு வழியாக வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். இதுவே, அங்கு பரமபதவாசல் நிகழ்வாகும்.

சிவத்திருத்தலமான சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோவிலில் கோவிந்தராஜனாக திருமால் பள்ளிகொண்டிருக்கிறார். இவர் பள்ளி கொண்ட இடத்தை 'சித்ரகூடம்' என்று போற்றுவர். இத்தலத்திலும் வைகுண்ட ஏகாதசி விழா சிறப்பாக நடைபெறுகிறது.

## சொர்க்கவாசல் திறக்கப்படுவது ஏன்?

மது- கைடபர் என்ற அரக்கர் இருவரும் மகாவிஷ்ணுவினால் வதம் செய்யப்பட்டதால், பரமபத பாக்கியம் பெற்றார்கள். இந்த அசுரர்கள் தாங்கள் பெற்ற வைகுண்டப்பேறு உலகிலுள்ள அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்று விரும்பினார்கள். எனவே, 'வைகுண்ட ஏகாதசியன்று ஸ்ரீரங்கம் வடக்குவாசல் வழியாக தாங்கள் அர்ச்சாவதாரத்தில் வெளிவரும் போது, தங்களை தரிசித்து பின்தொடரும் பக்தர்களின் அனைத்துப் பாவங்களையும் நீக்கி முக்தியளிக்க வேண்டும்' என்று பெருமாளிடம் பிரார்த்தித்தார்கள். அவர்களது வேண்டுகோளை மகாவிஷ்ணு ஏற்றார். இதன் பொருட்டே வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்க வாசல் திறக்கப்பட்டு, அதன்வழியே பெருமாள் எழுந்தருளச் செய்யப்படுகிறார்.

வைகுண்ட ஏகாதசியன்று விரதம் கடைப்பிடித்து சொர்க்கவாசல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டால் பெருமாளின் அருளாசி கிட்டுவதுடன்- உடல்நலம் பெறுவதுடன்- வைகுண்டத்தில் ஓரிடம் கிட்டுமென்று சாஸ்திரம் கூறுகிறது. ■




# ஸ்ரீ காமாட்சி அம்மன் அனுக்ரக ஜோதிஷா



சித்தர்கள் வழிபட்ட அபூர்வ பலன் தரும் பரிகார மூலிகை ரட்சைகள்

சனிப்பெயர்ச்சி, சனிப்ரீதி, சனி தசை, சனி புத்தி, மகா தசை, அஷ்டமச்சனி உள்ளவர்கள் சனீஸ்வர மூலிகையான நீலபானு மூலிகை ரட்சை அணிந்து கொண்டால்

சகலவிதமான பிரச்சினைகளில் இருந்து தீர்வு காணலாம். ரூ.2000/-

**ஏர் அழிஞ்சல்**
இந்த மூலிகைகுச்சியை கையில், வைத்து தினந்தோறும், யாரை மனதில்நினைத்து பூஜை செய்தாலும், ஒரு சில நாட்களில் நேரில் தோன்றுவார். பதவி உயர்வு கிடைக்கும். பகைவர்கள் நண்பர்களாக ஆவார்கள்.

**நாககன்னி**
சகலவிதமான தோஷங்கள் மற்றும் திருமணத் தடைகள்அனைத்தும் விலகும்!

**மிளகு சாரணை**
தொழில் வசியம், செல்வம் பெருக, கணவன், மனைவி ஒற்றுமைக்கு லட்சுமி கடாட்சம் உண்டாக ரட்சையாக அணியலாம்!

**மரகொத்தான் வேர்**
தொழில், அரசியல், கலைதுறை, அலுவலகங்கள் போன்ற எல்லா விதமான தொழில்களுக்கும் ரட்சை மூலம் வசியம் செய்து கொண்டால் லாபம் பெறலாம்.

**தொழுகன்னி அழுகன்னி**
கல்வி, செல்வம் உயர் பதவி அடைய பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேர, குடும்பத்தில் பிரச்சினைகளைத் தவிர்க்க, எதிரிகளின் தொல்லை விலகும்.

**செம்பூதம்**
பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஞாபகசக்தி அதிகரிக்கும், நல்ல மதிப்பெண்கள் பெறலாம்.

**கிடிநடிங்கி**
குழந்தைகள் கல்வி தேர்வில் நல்ல மதிப்பெண் பெற, ஞாபகசக்தி பெற, தொழில் முன்னேற்றம் பெற, வெள்ளி தாயத்தில் அணியலாம்.

**யானை வணங்கி**
பிரிந்தவர் ஒன்று சேருதல், கணவன் மனைவி ஒற்றுமை, தொழில் வளம், செல்வம் பெருக, எதிரிகளின் தொல்லைகள் விலகும்.

**ஏறுசிங், இறங்கு சிங்**
கடன் பிரச்சினைகள் நாள்பட்ட துன்பங்கள் விலகும். செல்வம் பெருகும். எதிரிகளை விரட்டும். புதிய நட்பினை உண்டாக்கும்!

**கிடா மிரட்டி வேர்**
தொழில் வசியம், காரிய சித்தி, ரியல் எஸ்டேட், தொழிற்சாலைகள் அலுவலகங்கள் கலைத்துறையில் உள்ளவர்கள் வெள்ளியில் ரட்சை செய்து அணிந்தால் லாபம் கிட்டும்.

**பேய் மிரட்டி வேர்**
பேய், பிசாசு, செய்வினை, கண் திருஷ்டி விலகவீட்டின் முன்கட்டினால் தீய சக்திகள், தீய கனவுகள் விலகும்!

**நத்தைச்சூரி**
நினைத்த காரியம் ஜெயமாகும். கல்விச் செல்வம் பெருகும். அரசியல் செல்வாக்கு உயரும்.

**கருநீலி வேர்**
செய்வினை கோளாறுகள், உடம்பில்பிணி தீரும், கணவன்-மனைவி ஒற்றுமை, தாகத உறவுகளில் இருந்து விடுபடுதல், ஜனவசியம் செய்து தாயத்தில் அணியலாம்.

**சிகப்பு கத்தாழை வசிய அஞ்சனம்**
வீடு, மனை, வாங்க/ விற்க, வாஸ்து தோஷங்கள்நீங்க, நின்றுபோன கட்டிடங்கள் கட்ட, பலன் தரக்கூடியவை.




[இவை அனைத்து மூலிகைகளும் காரியசித்தி உண்டாக்கும் என்பது சித்தர்களின் வாக்கு]

திருமதி ராஜேஸ்வரி

57, தெற்கு தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை—17. [தி.நகர் பஸ் நிலையம் அருகில்]

போன்: 044-24353245 செல்: 9566252355


Email: mmkamachi2012@yahoo.com




Advt




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரபஞ்ச அன்பும் பேரானந்தமும்!

நமது ஐந்தாவது சக்கரமான விஷுத்தி சக்கரம் குறித்த அடிப்படைத் தகவல்களை கடந்த இதழில் கண்டோம். அடுத்து விஷுத்தி சக்கரத்தோடு தொடர்புடைய உணர்வு நிலைகள் குறித்தும், குண்டலினி சக்தி எழும்பி, விஷுத்தி சக்கரம் தூண்டப்படும்போது ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் காணலாம்.

**மனத்தூய்மையும் மன அமைதியும்**

தத்துவங்களில் மிக உயர்ந்த தத்துவமாகக் கருதப்படுவது ஆகாயத் தத்துவம். விஷுத்தி சக்கரத்தை ஆளும் தத்துவமும் ஆகாயமே.

குண்டலினி சக்தி விஷுத்தி சக்கரத்தினுள் நுழைந்து அதைத் தூண்டும்போது ஆகாயத் தத்துவம் வலிமைபெறும். நிர்மலமான வானம் போன்று மனம் தூய்மையடையும்.

தீய சிந்தனைகள் அனைத்தும் மறைந்துபோகும். எதிர்மறை எண்ணங்கள் அனைத்தும் அழிந்துபோகும். எல்லையற்ற அமைதியும், உயர் சிந்தனைகளும் எண்ணங்களும் மனதில் நிறையும்.

மனம் இதுவரையில் அறிந்திராத ஒரு அமைதி நிலையை அடையும். பற்றுகள் அறுந்து போகும்.

பந்த பாசங்களும், உலக இச்சைகளும், ஆசைகளும் மாயையினால் உருவானவை. உலக வாழ்க்கையோடு நம்மை இறுகக் கட்டிப்போடும் சங்கிலிகளாக இவை உள்ளன.

குண்டலினி சக்தி விஷுத்தி சக்கரத்தினுள் நுழையும்போது, இந்த சங்கிலிகள் ஒவ்வொன்றாக அறுபடும். பந்தபாசங்கள் விலகும். உலக ஆசைகள் அழியும். இச்சைகள் மறையும். மாயை அகலும்.

இது நிகழும்போதுதான் உண்மையான ஆன்மிகப் பயணம் துவங்கும். மாயை அறுந்த நிலையிலேயே ஞானம் உருவாகும்.

**சூன்ய நிலை**

மாயையின் கட்டுகள் அறுந்த நிலையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் ஜாண் பி. நாயகம் M.B.B.S., M.D., Ph.D., D.Sc., F.C

## தந்திர யோகம் ● பாகம் – 3

சூன்ய நிலை எனப்படும். இந்த நிலையை அடைந்த ஞானிகளின் மனம் வானம் போன்று அனைத்திற்கும் சாட்சியாக இருக்குமே தவிர, எதிலும் பங்குபெறாது; எதிலும் ஒட்டாது.

### பஞ்சபூதங்களின்மீது ஆளுமை

பஞ்சபூதங்களில் உயர்ந்த பூதமாகக் கருதப்படுவது ஆகாயமே. ஆகாயம் எனும் பூதத்திலிருந்தே பிற பூதங்கள் உருவாயின.

விஷுத்தி சக்கரத்தினுள் குண்டலினி சக்தி நிறையும்போது, பிற நான்கு பூதங்களும் ஆகாயம் எனும் தத்துவத்தினுள் அடங்கிவிடும். பஞ்ச பூதங்களின்மேல் ஆளுமை உருவாகும்.

பஞ்சபூதங்களோடு தொடர்புடைய சித்திகளும், ரித்திகளும் (அதிசயங்கள் புரியும் ஆற்றல்) சாதகருக்குக் கிடைக்கும். ஆனால், ஏற்கெனவே பற்றில்லாத மனநிலை உருவாகிவிட்டதால் இந்த சித்திகள்மேலும், ரித்திகள்மேலும் மனம் ஆசைகொள்ளாது.

இந்த நிலையை அடைந்த ஞானிகள் தங்களிடமுள்ள சக்திகளை (சித்திகள், ரித்திகள்) வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்கள்.

### பயங்கள் அகலும்

ஒன்றின்மீது மனம் பற்றுக் கொள்ளும்போதுதான் அது தன்னிடமிருந்து போய்விடுமோ என்ற பயம் உருவாகும்.

பற்றுகளே பயத்தின் தாய்!

உதாரணமாக, உயிரின் மேலுள்ள பற்றே அது பிரிந்துவிடுமோ என்ற பயத்தை உருவாக்கும்.

ஆசைகளும் பற்றுகளும் அறுந்த நிலையில் பயங்களும் மறைந்து போகும். எது குறித்தும் அச்சம் இராது. பூரணமாக பயங்கள் விலகிய நிலையை 'அபய நிலை'

அன்னை பகவதி துணை

ஸ்ரீல ஸ்ரீ வராஹி ஆன்மீகம் மற்றும் மூலிகை ஆராய்ச்சி மையம்

இங்கு அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும்.

ஸ்ரீ வராஹி அன்னையின் மூலம் அனைத்துவிதமான கோளாறுகளும் சரி செய்யப்படும். நவக்கிரகக் கோளாறுகள் நீங்க, சத்ரு வசியம், சத்ரு நாசம், திருமணத்தடைகள் நீங்க, தகாத உறவுகளைப் பிரிக்க, காதலில் வெற்றி பெற, கடன் தொல்லைகள் தீர, வராத கடன்கள் வசூலாக, கணவன் மனைவி ஒன்று சேர, குழந்தை பாக்கியம் கிடைக்க, தீராத நோய்கள் தீர, தொழிலில் வெற்றி பெற, குழந்தைகள் நன்றாகப் படிக்க, வாஸ்து தோஷம் நீங்க, தோட்டம் வெள்ளாமை சிறக்க, கணவன் மனைவி வசியம், அஞ்சனம் மற்றும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடனடி தீர்வு சர்வ வசிய அஞ்சனம் ராஜ வசிய மை கிடைக்கும். மூல வியாதி ஒரே முறை மருந்தின் மூலம் குணப்படுத்தப்படும்.

அனைத்துவிதமான மூலிகை செடிகளும் கிடைக்கும்.

சர்க்கரை நோய், ஆண்மைக் குறைவு, தொப்பை குறைக்க மூலிகை மருந்து கிடைக்கும்

ஜோதிடர்களுக்கு முக்காலம் குறிசொல்லும் கர்ணாயட்சனி மற்றும் வாக்குபலித அஞ்சனம் கிடைக்கும்.

உயிர் காக்கும் மூலிகையான கருநொச்சி இலை கிடைக்கும்!

G.K. ஸ்ரீநிவாஸன், SMP, RMP.,

33, கருப்பணன் தெரு, நாயக்கன்காடு, கோபி-638 476, ஈரோடு மாவட்டம்.

முன்பதிவிற்கு 99940 55510, 96983 39955



ஒரே நாளில் எளிமையான முறையில் மாந்திரீகம் நேரிலும், தபால் மூலமும் கற்றுத்தரப்படும்.


Advt



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

### 18. திருவதிகை



கடலூர் மாவட்டம், பண்ருட்டி- கடலூர் பாதையில் இரண்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள தலம். கருவறையில் மூலவர் சர நாராயணப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் நின்றகோலத்தில் உள்ளார். கருடாழ்வார் கைகளைக் கட்டிக்கொண்டு வித்தியாசமாக சேவக பாகத்தில் உள்ளார். பிரம்மாண்ட புராணத்தின் நான்காவது சர்க்கத்தில் 'திருவதிகை' எனக் குறிப்பிடப்பட்ட தலம். திரிபுரத்தை எரிக்க சிவனுக்கு வில் கொடுத்தமையால் இவருக்கு சர நாராயணர் எனப் பெயர். தாயார், மார்க்கண்டேயருடன் பெருமாள் கல்யாண கோலத்தில் உள்ளார்.

அசுரனை அழித்து ஓய்வெடுத்ததால் சயனக்கோலத்தில் (பால உருவில்) நரசிம்மர் உள்ளார். திருப்பாவையில் 'மாரி மலை முழஞ்சி' எனத் தொடங்கும் பாசுரத்தில், 'உறங்கும் சீரிய சிங்கம்' எனக் குறிப்பிடப்படுபவர் இப்பெருமாளே.

என்கிறோம். (பயம் என்ற சொல்லின் எதிர்ச் சொல் அபயம்).

விஷுத்தி சக்கரம் தூண்டப்பட்டவர்களுக்கே அபய நிலையை அடைவது சாத்தியமாகும்.

### எல்லையற்ற அன்பு

நான்காவது சக்கரமான அனாஹதம் குண்டலினியால் தூண்டப்படும்போதே மனதில் எல்லையற்ற அன்பு பொங்கிவழியுமென்பதை ஏற்கெனவே கண்டோம்.

அனாஹத அன்பு நிலையில், அந்த அன்பின் விளைவாக சில பற்றுகள் உருவாகும் என்பதையும் கண்டோம்.

குண்டலினி சக்தி அனாஹதச் சக்கரத்தைத் தாண்டி விஷுத்தி சக்கரத்தினுள் நுழையும்போது, அனாஹதத் தூண்டுததால் உருவான 'பிரபஞ்ச அன்பு' பலமடங்கு அதிகமாகும்.

ஆனால் அந்த அன்பினால் உருவான பற்றுகள் முழுவதுமாக அழிந்து போகும். அன்பு அதிகமாகும்; ஆனால் பற்று இராது.

### ஞான நிலை

மனம் அமைதியடைந்து, பற்றுகள் விலகி, பஞ்சபூதங்களின்மீதும் ஆளுமை உருவான நிலையில்தான் உண்மையான ஞானம் உருவாகும்.

கல்வியாலும் அனுபவத்தாலும் உருவாவது அறிவு. எந்த முயற்சியுமின்றித் தானாகவே உருவாவது ஞானம்.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அனாஹதம் ஆகிய நான்கு சக்கரங்களிலும் குண்டலினி நுழையும்போதே அந்தந்த சக்கரங்களோடு தொடர்புடைய ஞானங்கள் உருவாகத் துவங்கிவிடும்.

ஆனால் பற்றுகளும், மாயையின் கட்டுகளும் மீதமிருப்பதால் அந்த ஞானங்கள் சற்றே குறைபட்ட ஞானங்களாகவே இருக்கும்.

விஷுத்தி சக்கரத்தினுள் குண்டலினி நுழையும்போதுதான் பற்றுகள் முழுமையாக அகலும். மாயையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஓம் சாய் ராம்

## ஸகல கார்ய ஸித்தி தெய்வீக பரிகார ஸித்தர் பீடம்

### எண்கணிதம், வாஸ்து, இரத்தினபரீட்ஷை மந்திரமூலிகை வல்லுனர்கள்

பத்மம் : எண் AP: 820, G- பிளாக், 1வது தெரு, 11வது மெயின்ரோடு, அண்ணாநகர்,
சென்னை–600 040. [சந்தோஷ் சூப்பர் மார்க்கெட் பின்புறம்]

அலைபேசி : 8754598499

## இந்த விளம்பரத்தை படிப்பவர்கள் சிறந்த பாக்யசாலிகள் !

எங்கள் பரிகார பீடத்தில் உங்களை நேரில் பார்த்த உடன் உங்கள் வாழ்க்கையில் நடந்த கடந்த கால நிகழ்வுகள், நடக்க விருக்கும் நிகழ்கால நிகழ்வுகளை துல்லியமாக கூறி நீங்கள் இதுவரை சந்தித்த துன்பங்களில் இருந்து பரிகாரம் செய்த 9 நாளிலிருந்து 90 நாட்களுக்குள் விடுபட ஸித்தர்வழி பரிகாரம் செய்து உங்களை செழிப்பாக அமைதியோடு வாழ வைக்க வழிகாட்டுவதுடன் எளிய பரிகாரங்களை நீங்களே செய்து கீழ்கண்ட பிரச்சனைகளில் இருந்து தெய்வ அருளால் விடுபடுவது உறுதி.

1. கிரகதோஷம் மற்றும் எதிரிகளின் செய்வினைகளால் குடுமபத்தில் ஆண், பெண் பிள்ளைகளின் திருமணம் தடையாகுதல்.
2. திருமண வாழ்வில் கருந்து வேறுபாடு, தீராத சச்சரவு, வழக்கு, விவாகாரத்து, பிரிவினைகள்.
3. ஜாதக கோளாறுகள் மற்றும் எதிரிகள் செய்வினைகளால் சந்தானபாக்யம் இல்லாத நிலை.
4. பொருளாதார நிலை சீர்குலைந்து, கடன் வழக்கு, மன உளைச்சல், வாழ்க்கையை வெறுக்கும் நிலை.
5. வேலை மற்றும் தொழில் பிரச்சினை தொழில் நிறுவனங்களை மூடும் நிலை.
6. மருந்து, மந்திரம், பில்லி சூன்யம், ஏவல், வைப்பு செல்வினை பாதிப்புகளால் அனைவரிடத்திலும் பகை, வழக்கு, சண்டை சச்ரவுகள் வாழ்வில் தொடர்வது.
7. நாகதோஷம், வாஸ்து தோஷம், செவ்வாய் தோஷம், பிதூர்தோஷம், குடும்பதோஷம், பில்லிசூன்ய தோஷம், தாரதோஷம் உட்பட 32 தோஷப் பிரச்சினைகள்.
8. காதல் தோல்வி, அதனால் ஏற்படும் சண்டை, வழக்கு, குடும்ப அமைதி பாதிப்பு, பகை பிரிவினைகள்.
9. ஆரோக்ய குறைவு, மனநல பாதிப்பு.
10. சொத்துபிரச்சினை, அதனால் தீராத வழக்கு, பகை ஏற்படுதல்.
11. பாலுணர்வு பிரச்சினைகள், அதனால் விரக்தி, தூக்கமின்மை.
12. அஷ்டமச்சனி, 7½ சனி பாதிப்புகள்.
13. வெற்றி, பதவி உயர்வு தடைபடுதல், எதிரியின் சூழ்ச்சியால் பதவிநீக்கம் செய்யும் நிலை ஏற்படுதல்.
14. கூட்டுத் தொழில் பிரச்சினைகள்.
15. செல்வம் சேர, நோய்கள் தீர, வீடு, நிலம் பெற, தீர்க்க ஆயுள் பெற, கல்வியில் சிறந்து விளங்க, மாங்கல்யம் நிலைக்க, தொழில் சிறந்து விளங்க, லாபம் பெற, புதிய தொழில் தொடங்க, திருஷ்டி விலக, பரிகாரம் செய்ய இயலாமைக்கு பரிகாரம் செய்ய.

**பிறந்த தேதி, பெயர் நட்சத்திரம் ஆகியவற்றை தொலைபேசியின் மூலம் தெரிவித்து முன் பதிவு செய்துக் கொண்டு நேரில் சந்திக்கவும்.**

## ஆலோசனை கட்டணம் ரூ. 1500/- ஒரு நபருக்கு

Advt



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியிலிருந்து மனம் முழுமையாக விடுபடும். இந்த நிலையில்தான் ஞானம் பூரணமடையும். (பூரண ஞானம்).

### பேச்சுத் திறமை

விஷுத்தி சக்கரமே 'பேச்சு' எனும் செயலை ஆளும் சக்கரம். விஷுத்தியின் சக்தியே நமது குரல்நாண்களை இயக்கி பேச்சை உருவாக்குகிறது.

விஷுத்தி சக்கரம் செயல் குறைந்த நிலையில் உள்ளவர்களுக்கு பேச்சு சரளமாக வராது. மனதில் தோன்றும் எண்ணங்களை பிறருக்குப் புரியும்படியாக விளக்கிச் சொல்லமுடியாமல் தவிப்பார்கள்.

சிலருக்கு மேடையில் ஏறினாலே பயம் தொண்டையை அடைத்துக் கொள்ளும்! பேச்சு சரளமாக வராது.

வேறு சிலருக்கு தொண்டைச் சக்கரம் வலுவாக இருக்கும். ஆனால் அது சுற்ற வேண்டிய திசைக்கு எதிர்திசையில் சுற்றிக் கொண்டிருக்கும்.

இவ்வாறு சக்கரம் எதிர்திசையில் வலுவாக இயங்கும் நபர்கள் மிகச் சிறந்த பேச்சாளர்களாக இருப்பார்கள். எதுகை- மோனை இவர்களது பேச்சில் நிறைந்திருக்கும். மிக அலங்காரமான பேச்சாக இருக்கும்.

இவர்களது பேச்சு நடை கேட்பவரை ஈர்க்கும்- கட்டிப் போடும். ஆனால் பேச்சு முடிந்த பின்னர் இவர் பேசிய கருத்து என்னவென்று அலசிப் பார்த்தால், ஆழமான கருத்துகள் எதுவும் இராது. இதை 'வெற்றுப் பேச்சு' என்பார்கள். பெரும்பாலான அரசியல்வாதிகளின் மேடைப் பேச்சும் இந்த ரகத்தைச் சார்ந்ததுதான்.

விஷுத்தி சக்கரம் எதிர்திசையில் சுழலும்போது பேச்சு வலிமையாக இருக்கும். ஆனால் அந்தப் பேச்சில் ஞானம் இராது. கள்ளம், கபடம் நிறைந்திருக்கும். வாய்கூசாமல் பொய் பேசுவார்கள். பொய்யான வாக்குறுதிகளை அள்ளிவிடுவார்கள். உண்மைகளை மறைப்பார்கள்.

அரசியல்வாதிகள் மட்டுமின்றி, பல திறமையான வழக்கறிஞர்கள், வியாபாரிகள் ஆகியோரிடமும் இந்த நிலை காணப்படும்.

விஷுத்தி சக்கரத்தினுள் குண்டலினி நுழைந்து, அது தூண்டப்பட்ட நிலையில் உருவாகும் பேச்சுத் திறன் ஞானம் நிறைந்ததாகவும் தூய்மையானதாகவும் இருக்கும். இந்தப் பேச்சில் பொய்கள் இராது. ஆணவம் இராது. தன்னலம் இராது.

இத்தகைய ஞானம் நிறைந்த பேச்சு கேட்பவர் மனதையும் பண்படுத்தும். அவர்களையும் ஞானப் பாதையில் அழைத்துச்செல்லும்!

### உடலில் புத்துணர்வு

விஷுத்தி சக்கரம் விஷங்களை முறிக்கும் சக்தியுள்ள சக்கரம். குண்டலினியால் விஷுத்தி தூண்டப்படும்போது உடலிலுள்ள நச்சுப் பொருட்கள் அனைத்தும் அழிந்து போகும். உடலிலுள்ள நோய்கள் அனைத்தும் மறைந்துவிடும்.

உடலின் ஒவ்வொரு செல்லிலும் புத்துருவாக்கம் நடைபெறும். முதுமையடைதல் தள்ளிப்போகும். உடல் இனிமையாகும்; வலுவாகும்.

இதுவே காயகல்பம்! இதுவே என்றும் பதினாறு என்ற மார்க் கண்டேய நிலை!

### பேரானந்த நிலை

மனம் அமைதியடைந்து, பஞ்ச பூதங்களும் கட்டுக்குள் வந்து, நோய்கள் அகன்று, ஞானம் உருவான நிலையில் எல்லையற்ற ஆனந்தம் மனதில் உருவாகும்.

குண்டலினி சக்தியால் விஷுத்தி சக்கரம் தூண்டப்பட்ட நிலையில் மனதில் பந்த பாசங்களோ, பற்றுகளோ இராது. அபய நிலை உருவாகும். இந்த நிலையில் உருவாகும் ஆனந்தமே பேரானந்தம் எனப்படும்.

இந்த பேரானந்த நிலையில் மனம் திளைத்திருக்கும். (தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மாவின் அதிர்ஷ்டம் அழைக்கிறது

**அம்மா நீ இருக்கும் இடத்தில் நல்லதே நடக்கும்**

என்னோடு இருந்து என்னையும் என் மூலம் உங்களையும் வாழ செய்து கொண்டிருக்கும் **அம்மா ஸ்ரீபகவதியின்** பரிபூரண ஆசியாலும், அருளாலும் உங்கள்அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்து நலமோடும் வளமோடும் வாழ முடியும்.

* இடிக்க முடியாத, மாற்றி அமைக்க முடியாத, வாஸ்து குறைகளால் சிரமப்படுகிறீர்களா?. 100 சதவீதம் வாஸ்து முறைப்படி அமைத்த வீடுகளிலும் சிரமப்படுகிறீர்களா?
* மோசமான ஜாதகங்களினாலும், மோசமான கோச்சார காலங்களினாலும் சிரமப்படுகிறீர்களா?. யோகமான ஜாதகம், யோகமான திசைகள் இருந்தும் சிரமப்படுகிறீர்களா?
* இவை அனைத்திற்கும் என்ன காரணம்? ஏன் சிரமப்படுகிறோம்?
* நமது தந்தை, தாத்தா, பாட்டன் என முன்னோர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுகளினால் ஏற்பட்டிருக்கக்கூடிய பாவ, சாப, பூர்வீக தோஷங்களும்.
* நாம் முற்பிறவிகளில் செய்த பாவ, சாப தோஷங்களும் தான் நமது அனைத்து பிரச்சினைகளுக்கு மூல முதற்காரணமாகும்.

2, 4, 5 , 7, 8 பிறந்த தேதிகளில், பிறந்த மாத எண்களில், பிறந்த வருட எண்களில் அல்லது கூட்டு எண்களில் பிறந்தவர்களுக்கு கண்டிப்பாக பித்ரு தோஷம், பெண் சாப தோஷம் போன்ற பல தோஷங்கள் இருந்து கஷ்டங்கள் அதிகரிக்கும் பெரிய யோகங்கள் தடைப்படும்.

* தோஷங்கள் மறையவும், வாஸ்து குறைகள் விலகவும்.
* கண் திருஷ்டி எதிரிகள் தொல்லை விலகவும் .
* குடும்பத்தில் தொழிலில் வசியம் ஏற்படவும்.
* குலதெய்வம் வீட்டில் நடமாடவும். இந்த யந்திரத்தை வீட்டில் வைத்து வழிபடும் போது சந்தோஷமான வாழ்க்கை அமையும்.
* தொழில் செய்யும் இடங்களில் வைத்து வணங்கும் போது அற்புதமான அபாரமான வளர்ச்சி ஏற்படும் பணவரவு பல மடங்கு பெருகி கடன் இல்லாத குபேரசம்பத்து(லட்சுமிகடாட்கம்) கிடைக்கும்.

## அம்மா ஸ்ரீபகவதி வாஸ்து பரிகார தோஷநிவர்த்தி மகாமந்திர யந்திரம்

அறிமுக சலுகையாக **ரூ.7200** மட்டும் இத்துடன் **ரூ.6000** மதிப்புள்ள **மந்திர எண் நியுமராலஜி**படி உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு பெயர் சீரமைப்பது முற்றிலும் இலவசம்.

## அம்மா ஸ்ரீபகவதி மகாசக்தி யந்திரம்

16 செல்வங்களும் பெற 16 வகையான யந்திரங்கள்

1. அம்மா ஸ்ரீபகவதி யந்திரம்,
2. சக்தி விநாயகர் யந்திரம்,
3. பிரம்ம காயத்ரி யந்திரம்
4. துர்கா யந்திரம்
5. பால திரிபுரா யந்திரம்
6. பைரவி யந்திரம்
7. பகளமுகி யந்திரம்
8. காரியசக்தி யந்திரம்
9. ஸ்ரீ சௌபாக்ய பீஜா யந்திரம்
10. வியாபார விருத்தி யந்திரம்
11. ஸ்ரீ பீஜா யந்திரம்
12. நவகிரக யந்திரம்
13. ஸ்ரீ சூர்ய யந்திரம்
14. ஸ்ரீ மிருத்யுஞ்ச யந்திரம்
15. லட்சுமி நாராயண யந்திரம்
16. வாஸ்து யந்திரம்.

இணைந்த மேற்படி யந்திரத்தை வீட்டில், தொழில் நிறுவனங்களில் வைத்து பூஜித்து வந்தால் அற்புதமான, அபாரமான வளர்ச்சி ஏற்படும் பணவரவு பல மடங்கு பெருகி, கடன் இல்லாத குபேரசம்பத்து (லட்சுமிகடாட்சம்) கிடைக்கும்.

சிறப்பு சலுகை

**அம்மா ஸ்ரீபகவதி மகாசக்தி யந்திரம் ரூ.12,000**

( இத்துடன் குடும்பத்திற்கு அல்லது தொழில் நிறுவனத்திற்கு ரூ. 6000 மதிப்புள்ள மந்திர எண் நியுமராலஜி படி பெயர் மாற்றம் இலவசம் )

30.03.1986ல் பிறந்த R.SOUNDARRHAJAN 45/9 மந்திர எண் 6/42 தந்தை பெரிய தொழில் அதிபர் இருந்தாலும் மகன் வெளியே வேலைக்குச் செல்கிறான். அதன் பிறகு R.SOUNDAHARRAJAN 45ல் பெயர் ஆனால் மந்திர எண் 9 ஆக அமைத்து தந்தையின் தொழிலிலேயே ஈடுபடுகிறார்.

* 3,12, 21, 30 தேதிகளில் அல்லது மார்ச், டிசம்பர் மாதங்களில் அல்லது கூட்டு எண் 3ல் பிறந்தவர்களா ?
* காலம் முழுவதற்கும் மற்றவர்களுக்கே உழைத்து, தன் குடும்பத்தை வளமாக வைத்துக்கொள்ள முடியாத உங்களுக்கு, நலமும் வளமும் ஏற்பட.

## குரு பரிகார யந்திரம் ரூ.1500

(வாழ்நாள் முழுமைக்கும் பயன்பெறும் இத்துடன் ஒரு நபருக்கான ரூ. 1500 மதிப்புள்ள மந்திர எண் நியுமராலஜி படி பெயர் மாற்றம் இலவசம்)

ஒரு முறை வாங்கி பூஜித்து வாருங்கள் உங்களுக்கே உங்களுக்கு என்று உழைத்து குடும்பத்தினர் மகிழ்ச்சி பெற எல்லா வளங்களும் நலன்களும் குரு பகவானால் கிடைக்க பெறுவீர்கள்.

## குருஜியின் மந்திர எண் நியுமராலஜி மகிமை

பிறந்த தேதியில் மற்றும் பெயரின் நியுமராலஜியில் மறைமுகமாக உள்ள மந்திர எண் தான் உங்கள் வாழ்க்கையை உயர்த்துகிறது அல்லது சிரமத்தைத் தருகிறது.

யோகமான எண்களில் பெயர் அமைந்திருந்தாலும், அதன் மந்திர எண் எதிர்ப்பாக இருக்கும். யோகம் தடைப்படும். உதாரணம் : R.K.ARUNA - 19/1 ல் மந்திர எண் 7ல் மிக மோசம்

மோசமான எண்களில் பெயர் அமைந்திருக்கும் அதன் மந்திர எண் மிக சிறப்பாக யோகமாக அமைந்து மிக அதிர்ஷ்டம், செல்வாக்கு உண்டாகும். உதாரணம் : THE HINDU - 35/8 ல் மந்திர எண் 1/19 ல் மிக யோகம்

எனவே உங்கள் பெயர், உங்கள் குழந்தைகளின் பெயர், தொழில் நிறுவனங்களின் பெயர், பொருள்களின் பெயர் இவற்றில் எதிர்மறையான மந்திர எண்கள் இருந்தால் குருஜியை நாடி மந்திர எண்ணை யோகமாக அமைத்து எல்லா வளங்களும்,நலன்களும் பெறுங்கள்.

மந்திர எண் நியுமராலஜிபடி மந்திர எண் சிறப்புற அமைத்து பெயர் சீரமைக்க ஒரு நபருக்கு ரூ.1500. தொழில் நிறுவனங்களுக்கு பெயர் அமைக்க ரூ.5000 மட்டும்.

அனுப்ப வேண்டிய தொகையை D/D ஆக GURUJIEMASTARHARRAN என்கிற பெயரில் கூரியர் மூலம் மட்டுமே அனுப்புங்கள்.

அனுப்ப அல்லது தொடர்பு கொள்ள :



அம்மா ஸ்ரீபகவதி **குருஜி மாஸ்டர்ஹரன்** B.sc.,

1/473, ஸ்ரீபகவதி நிவாஸ். 4வது வீதி ஜான் ஜோதி கார்டன்,
லிட்டில் ஃபிளவர் ஸ்கூல் பின்புறம், மாங்கலம் ரோடு.
ஆண்டிபளையம் (P.O), திருப்பூர் – 641 687.

தொடர்புக்கு
98430 90528
81444 76512



Website : www.ammaashrigurujie.com, Email : info@ammaashrigurujie.com, gmharran@gmail.com

Advt


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு புனித அம்சங்கள் கொண்ட சபரிமலை!

சுயமாக உண்டானது அல்லது இறைவனுடைய ஜோதிர்லிங்கம் விளங்கும் சுயம்புலிங்க பூமி; மகாயாகம் நடந்த யாக பூமி; பக்தி மார்க்க தர்ம யுத்தம் நடந்த பலி பூமி; ரிஷிகள் தவமிருந்த யோக பூமி; யோகியர்கள் வாழ்ந்த தபோ பூமி; தேவர்களால் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட தவ பூமி; புனித நதிகள் சங்கமிக்கும் பூமி.

இந்த ஏழில் ஒன்றிருந்தாலும் அது புனித பூமியாகும். இத்தகைய திருத்தலத்திற்கு யாத்திரை செல்வதாலும், தரிசனம் செய்வதாலும், அங்குள்ள புனிதத் தீர்த்தத்தில் நீராடுவதாலும் ஒரு ஜீவனின் அனைத்துப் பாவங்களும் நீங்கி, கோடி புண்ணியம் கிட்டுமென்று சாஸ்திரம் கூறுகிறது.



மகிஷியை வதம் செய்த ஐயப்பன்

ஸ்ரீஐயப்பன் எழுந்தருளியுள்ள சபரிமலை இந்த ஏழு அம்சங்களும் கொண்டு திகழ்கிறது.

பதினெட்டு மலைகள் சூழ்ந்த நிலையில் சபரிமலை சுயம்புவாக எழுந்து அனைத்து மலைகளையும்விட உயர்ந்து காணப்படுகிறது. மேலும், இங்கு ஒவ்வொரு வருடமும் மகரசங்கராந்தி புனித நாளில் ஜோதி உருவாய் பொன்னம்பல மேட்டில் ஸ்ரீஐயப்பன் காட்சி கொடுத்தருளுகிறார். எனவே இது ஜோதிர்லிங்க சுயம்புவாகப் போற்றப்படுகிறது.

இங்கு ஓடும் பம்பை நதிக்கரையில் முனிவர்கள் குடில்கள் அமைத்து தினமும் யாகம் செய்திருப்பதாகப் புராண வரலாறு கூறுகிறது. அதனால் இது மகாயாகம் நடந்த யாக பூமியாகும். இன்றும் ஐயப்ப பக்தர்கள் இங்கு யாக பூஜை செய்வதைக் காணலாம். ரம்பாசுரனின் மகனாகப் பிறந்த மகிஷன் தவம் மேற்கொண்டு, நான்முகனான பிரம்மனிடம் அரிய பல வரங்களைப் பெற்று, அதனால் விளைந்த ஆணவத்தால் தேவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தான். தேவர்கள் பராசக்தியை வேண்ட, பராசக்தியானவள் மகிஷனிடம் போர்புரிந்து அவனை வதைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

### 19. சாலமலை

தேனி அருகிலுள்ள சின்னமனூரிலிருந்து 11 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது சாலமலை. இந்த மலையுச்சியில் குடிகொண்டிருக்கிறார் லட்சுமி நாச்சியார் சமேத சஞ்சீவி பெருமாள். வாரந்தோறும் சனிக்கிழமை மட்டுமே இந்த ஆலயம் தரிசனத்திற்காக திறந்திருக்கும். அப்போது மட்டுமே பக்தர்கள் இறைவனை தரிசிக்க முடியும். பஞ்ச பாண்டவர்கள் தங்களது வனவாசக் காலத்தில் இந்த மலைக்கு வந்து தங்கியிருந்ததாகக் கூறப் படுகிறது. குழந்தையில்லாதவர்கள் இங்குவந்து விளக்கேற்றி பெருமாளை வழிபட்டால், குழந்தைப்பேறு கிடைக்குமென்பது நம்பிக்கை.



அதனால் பக்திமார்க்க தர்மயுத்தம் நடந்த பலிபூமியானது.

இது ரிஷிகள் தவமிருந்த யோக பூமியாகவும், யோகிகள் வாழ்ந்த தபோ பூமியாகவும், புனித நதிகள் சங்கமிக்கும் பூமியாகவும் திகழ்வதற்கான காரணத்தை ராமாயணகால நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கை வேந்தன் இராவணனால் சீதாபிராட்டி கவர்ந்து செல்லப்பட்ட நிலையில், ராமபிரானும் லட்சுமணனும் தேவியைத் தேடி கானகத்தில் அலைந்தனர். அப்போது மதங்க மாமுனிவர் ஆசிரமம் தென்படவே, அங்கு சென்றார்கள். அந்த சமயம் முனிவர் தீர்த்த யாத்திரைக்குச் சென்றிருந்தார். அவரது குடிலில் 'நீலி' என்ற பெண் இருந்தாள். அவள் ராம-லட்சுமணர்களை வரவேற்று, முனிவர் யாத்திரை சென்ற விவரத்தைக் கூறினாள். தான் அங்கு முனிவருக்குப் பணிவிடை செய்வதாகவும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவள் என்றும் சொன்னாள். அவளது தாழ்வு மனப்பான்மையைப் புரிந்துகொண்ட ராமபிரான், "மனிதர்கள் எல்லாரும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். இதில் உயர்ந்த இனம்- தாழ்ந்த இனம் என்ற பாகுபாடில்லை. நீ கவலைப்படாதே. நீ அளிக்கும் உணவை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். இந்தக் காலகட்டத்தில் உன்னைத் தாழ்ந்தவள் என்று கூறும் மக்கள் உன்னைப் போற்றிப் புகழும் நிலையை உனக்கு அளிக்கிறேன்" என்று சொல்லி, அவளின் பூரணசம்மதத்துடன் அந்தப் பெண்ணை அழகான அருவியாக மாற்றி புனிதம்பெற அருள்புரிந்தார். அதன்படி அருவியாய் மாறிய அந்தப் பெண்தான் பம்பா நதியாகப் பாய்ந்து தட்சிண கங்கை என்று சிறப்புப் பெயர் பெற்றாள்.

அந்தப் பெண் பம்பா நதியாக மாறியதும், அவளது மனம்குளிர அந்த நதியில் ராம-லட்சுமணர்கள் நீராடினார்கள். அத்துடன் தன் தந்தைக்கு நீர்க்கடன் ஆற்றினார்கள்.


ஸ்ரீலலிதா திரிபுரசுந்தரியை பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் தவமிருந்து வழிபட்டனர். அவர்கள்முன் தேவி தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டாள். "தங்களின் விஸ்வரூப தரிசனத்தைக் காணவேண்டும்" என்று கேட்க, உடனே தேவி விஸ்வரூப தரிசனம் தந்தாள். தேவி தன்னுடைய இதயத்தில், ஒரு லட்சம் இதழ்கள் கொண்ட தாமரைப் பூவில் ஒரு சக்தியை வைத்துக்கொண்டிருந்தாள். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ராஜமங்கலம்

## வலம் வரும் ஐயப்பன்!



சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவருகிறது 'அகில உலக தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்பா மிஷன்.' இதை சுமார் 40 ஆண்டுகளுக்குமுன் தொடங்கி நிர்வகித்து வருகிறார் சுவாமி ராஜமங்கலம். தற்போது 70 வயதாகும் இவர், தனது 60 ஆண்டுகால சபரிமலை யாத்திரையில் 700 முறை ஐயப்ப தரிசனம் செய்திருக்கிறார்.

தமிழ் கலைத்துறை குருசாமியாகத் திகழ்ந்த நடிகர் எம்.என். நம்பியார், சிவாஜிகணேசன், பி.எஸ். வீரப்பா, நாகேஷ், வீ.கே. ராமசாமி, சுருளிராஜன் உட்பட பலரும்; கன்னட நடிகர் ராஜ்குமார், இந்தி நடிகர் அமிதாப் பச்சன் உள்ளிட்ட பலரும் இவருடன் இணைந்து சபரிமலை யாத்திரை மேற்கொண்டுள்ளனர்.

சபரிமலை ஐயப்பன்போலவே, அதைவிட சற்று சிறியதாக ஐம்பொன் சிலை வடித்து, அதை உலகெங்குமுள்ள ஐயப்ப பக்தர்களின் பூஜைக்கு எடுத்துச்செல்கிறார். கன்னட நடிகை ஜெயமாலா தான் சபரிமலை சென்றிருந்தபோது, பக்தர்கள் தள்ளியதால் தவறிவிழுந்த தாகவும், அப்போது ஐயப்பன் திருவுருவை தொட்டு வணங்கியதாகவும் சொல்லி சலசலப்பை ஏற்படுத்தினார். 'அவர் தொட்டு வணங்கியது மூலவர் ஐயப்பன் சிலையை அல்ல; நான் பூஜைக்கு அங்கு வைத்திருந்த எனது ஐம்பொன் ஐயப்பனைத்தான்' என்கிறார் ராஜமங்கலம்.

மேலும், சபரியில் ஐயப்பனின் அவதாரத்துக்குக் காரணமான சிவன், மகாவிஷ்ணுவுக்கு கோவில்கள் இல்லை. அவர்களுக்கும், முருகப்பெருமானுக்கும், சபரிபீடம் என்னுமிடத்தில் அன்னை சபரிக்கும் ஆலயம் அமைக்கவேண்டுமென்று கேரள ஆளுனரிடம் கோரிக்கை வைத்துள்ளார் ராஜமங்கலம். இவரது ஆன்மிக சேவை பாராட்டத்தக்கது.

சக்திதான் மகாசாஸ்தா. இதனைக் கண்ட சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஏக காலத்தில் இந்த மகாசக்தி தங்களுக்கு குழந்தையாகப் பிறக்க வேண்டுமென்று ஆசைவந்தது. மனதிற்குள் அவர்கள் நினைத்த தைப் புரிந்துகொண்ட தேவி, அவர்கள் விருப்பம் நிறைவேற ஆசிபுரிந்தாள். தேவி அருளிய வரத்தின்படி சிவனுக்கும், மோகினி அவதாரம் எடுத்துவந்த விஷ்ணுவுக்கும் ஹரிஹர அம்சமாக அவதரித்தார் சாஸ்தா. சாஸ்தாவின் அவதாரமென்பது பராசக்தியின் சங்கல்பம் என்கிறது புராணம்.

நதிக்கரையில் அவதரித்த அந்தக் குழந் தையை பந்தள மன்னன் கண்டெடுத்து வளர்த் தான். அந்த ஹரிஹரபுத்திரனால்தான் மகிஷ னின் சகோதரியான மகிஷி வதம் செய்யப் பட்டாள். இதனால் தேவர்களுக்கு நிம்மதி ஏற் பட்டது. அதனால் தேவர்களால் முக்கியத் துவம் கொடுக்கப்பட்ட தவபூமியானது.

இந்த பம்பை நதிக்கரையில் மகரவிளக்குப் பூஜைக்கு முன்னர் விளக்கு உற்சவம் நடைபெறும். இதற்கு பம்பா உற்சவம் என்று பெயர். பெரிய இலைகளினால் தோணிபோல் செய்து, அதில் நெய்விளக்குகளேற்றி நதியில் மிதக்கவிடுவார்கள். மேலும் இந்த பம்பை நதிக்கரையில் விதவிதமான உணவு சமைத்து, மானசீகமாக ஐயப்பனுக்குப் படைத்து பிரசாதமாக உண்பார்கள். இந்த விருந்தில் ஸ்ரீஐயப்பன் பங்கேற்கிறார் என்பது ஐதீகம்.

ராமாயண காலத்தில், சபரி என்ற பெண் வெகுகாலம் தவம் மேற்கொண்டு, அதன் பலனாக ராமபிரானை சந்திக்கும் பாக்கியம் பெற்றாள். அவள், ராமபிரானுக்கு சுவையுள்ள பழங்களைக் கொடுத்து உபசரித்தாள். அவள் இப்பகுதியில்தான் வசித்தாள் என்பர். மேலும் பல ரிஷிகள் பம்பை நதிக்கரையோரம் தவமிருந்ததால் இத்தலம் யோக பூமியாகவும், யோகிகள் வாழ்ந்த தபோ பூமியாகவும் போற்றப்படுகிறது.

மேன்மேலும் இந்த பம்பை நதி புனிதம் பெற தெய்வ நதிகளான கல்லாறு, கக்கட்டாறு ஆகிய நதிகளும் இதில் சங்கமமாகின்றன. எனவே இது திரிவேணி சங்கமத்திற்கு இணை யாகிறது.

இவ்வாறு ஏழு அம்சங்களிலும் சிறந்துவிளங் கும் சபரிமலையையும், அங்கு கோவில்கொண் டுள்ள ஐயப்ப சுவாமியையும் ஒழுக்கமாக விரத மிருந்து தரிசிப்பவர்கள் வாழ்வில் எல்லா நலங்களும் பெறுவர் என்பதில் ஐயமில்லை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்

No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ்,
லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில்,
4 ரோடு, சேலம் - 636 009.

No. 3-A, சன்னிதானம்,
P. 54 விஷாகா அபார்ட்மெண்ட்,
6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை-40.

Cell : 98427-10545, 93677-10545 Web : mahilvithumahil.com



சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**

இதுவரை எதை கற்று இருந்தாலும் அதற்கும் மேல் இச்சக்தியை பெற... என்ன வேண்டும் உங்களுக்கு...?
இதோ... பிரபஞ்ச சித்தரின் அற்புதமான பயிற்சி... அனைத்தும் கிடைக்கும் உங்களுக்கு...

## இதுவரை யாரும் அறிந்திடாத... சூட்சும உயர் மாந்திரீகம்

ஒரு குறிப்பிட்ட வம்சாவளியில் இரகசியமாக கையாண்டு வந்த, மாந்திரீக உலகின் அதி சூட்சும இரகசியங்கள் தற்பொழுது பயிற்சி வடிவில்...

### அதிசயம் ஆனால் உண்மை...

- மந்திர உச்சாடனங்கள் இல்லை
- கடுமையான விரதங்கள் இல்லை
- குறிப்பிட்ட தெய்வ சித்தி தேவையில்லை
- வயது வரம்பு இல்லை
- எந்திர பூஜைகள் இல்லை
- நாட்கணக்கில் உரு பூஜைகள் இல்லை
- மூலிகைகள் / அஞ்சனங்கள் தேவையில்லை
- ஆண் / பெண் யாவரும் கற்கலாம்

### பயிற்சியின் பொழுது...

- பயிற்சி பெறும் பொழுதே, தெய்வீக, அமானுஷ்ய, சூட்சும சக்திகள் உங்கள் உடலில் இறங்கும் அற்புதத்தை பெறுவீர்கள்.
- நீங்கள் ஸ்பரிஷ தீட்சை பெற்ற பிறகு உங்களை சுற்றி தெய்வீக சக்தி வளையம் ஏற்படும்.
- நீங்கள் நிற்கும் இடத்தில் தீய சக்திகள் நிற்காது. உங்கள் செல்வ வளர்ச்சி யோகத்தை யாராலும் தடுக்க முடியாது.
- உங்கள் பரம்பரை சாபங்கள் குல தெய்வ குற்றங்கள் உடனடியாக நீங்கும்.
- ஜோதிடம் தெரியாதவர்களும் கற்கலாம், மற்றவர்களுக்கும் செய்து கொடுக்கலாம்.
- ஜோதிடம் தெரிந்தவர்கள் இதன் மூலம் மாந்ரீக பரிகாரங்கள் செய்து கொடுக்கலாம்.

இன்னும் என்ன யோசனை ?

### பயிற்சிக்கு பிறகு...

- உங்களை கண்டு எதிரிகளும் பணிவார்கள்.
- பயிற்சி முடிந்த உடனேயே பயன்படுத்த முடியும்.
- வெளிநாடு செல்ல / வேலை வாய்ப்பு ஏற்பட.
- மன அமைதி பெற, வாழ்வில் வசந்தம் வீசிட.
- நாள்பட்ட வியாதிகளுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கும்.
- கைராசி / முகராசி ஏற்படும், தொழில் முன்னேற்றம் ஏற்படும்.
- விபத்து, கண்டம் இவற்றிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்.
- சண்டை, சச்சரவுகளுக்கு உடனடி தீர்வு.
- நீங்கள் நினைத்த காரியம் நிறைவேறும்.
- பணம், ஐஸ்வர்யம், அதிர்ஷ்டம் ஏற்படும். கடன் தீரும்.
- நமக்கோ / பிறருக்கோ இக்கலையை பயன்படுத்தி தீர்வு காணலாம்.
- படிப்பில் அதிக கவனம் பெற, தேர்வில் வெற்றி பெற
- மாந்ரீகத்தினால் ஏற்படும், ஏவல், பில்லி, சூன்யம், வைப்பு ஆவிக் கோளாறுகள் அறிந்து கொள்ள முடியும்.
- நம்மிடம் வரும் அனைவரின் ஜாதக / மாந்திரீக பிரச்சனைகள், சாபங்கள், தெய்வ குற்றங்கள் முழுமையாக அறிந்து கொள்ள முடியும்.
- நம்மால் முடியுமா....? என்று ஏங்கி தவித்த உங்களுக்கு இக்கலை ஒரு வரப்பிரசாதம்...., வாருங்கள்.
- வசியம்,மோஹனம்,ஸ்தம்பனம்,பேதனம்,ஆஹர்ஷனம்,வித்வேஷணம்,உச்சாடனம் முதலிய அஷ்ட கர்மங்கள் இயக்கலாம்.
- உங்கள் தன்னம்பிக்கைக்கு யானை பலம் தரும் ஒரு அதிதீத சக்தியை உணருங்கள்,நம்பிக்கையுடன் வாருங்கள்.. நன்மை பெறுவீர்கள்.

**பிரபஞ்ச சித்தருடன் ஒரு உன்னதமான பந்தம்**

**இக்கலையை கற்க பிராப்தம் உள்ளவர்க்கே இது கண்ணில்படும்.**

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள். வாழ்வில் முன்னேற ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளவும்.

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : 25.01.2015 ஞாயிறு |
| இடம் | : சேலம். |
| நேரம் | : காலை 9.30 மணி முதல் |
| சேவைக் கட்டணம் | : ரூ. 5700/- |

23.01.2015 குள் முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டும் சக்தியூட்டப்பட்ட தன ஆகர் ஷண கல் (மதிப்பு ரூ.2700/-) பிரபஞ்ச சித்தரிடம் தனியாக பெற்றுக் கொள்ளவும்.

தீட்சையின் போது பிரபஞ்ச சித்தர் தங்களுக்கு ஆசியுடன் தருபவை.

| | |
|---|---|
| பயிற்சி புத்தகம் முழுவதும் கலரில் | : 2,700 |
| பயிற்சி வஸ்ய பெட்டகம் | : 3,700 |
| இராஜ குபேர வஸ்ய வஸ்து | : 3,400 |
| உணவு மற்றும் தேநீர் | |
| மதிப்பு | : 9,800 |

**சென்னையில் பயிற்சி : நாள் : 28.01.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**

தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.

தனிப்பட்ட முறையில் VIP களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று கற்கலாம்.

வாருங்கள்... வித்தியாசமான சக்தியை உணர்ந்து பாருங்கள்... நீங்களே பிரமிப்பீர்கள்...

நல்லதிற்கு மட்டும் வாருங்கள், வாழ்வில் அனைத்தும் நல்லதாக மாறுவதை உணர்வீர்கள்

Advt



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமெல்லாம் காத்தருளும் ஸ்ரீகாலகாலேஸ்வரர்!

காலபைரவர்



நஞ்சுண்டேஸ்வரர்



மார்க்கண்டேயனுக்கு 'என்றும் பதினாறு' என்று அருள்புரிந்த திருக்கடையூருக்கு தொடர்புடைய தலம்- எமன் சிவபூஜை செய்த தலம்- கொங்கு மண்டலத் திருக்கடையூர் என்று போற்றுதற்குரிய தலம்தான் கோவில் பாளையம்.

'வாழ்க்கை வாழ்வதற்கே!', 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்பார்கள். ஒருவருடைய ஆயுட்காலத்தை நிர்ணயம் செய்வது காலதேவன் கையில்தான் உள்ளது. சரீரம், மனது என இரண்டாகப் பிரிக்கப்பட்ட மனித வாழ்க்கையில், ஆத்யாமிகம், ஆதி பௌதீகம், ஆதி தெய்வீகம் என மூன்று காரணங்களால் கர்மங்களைச் செய்தோர், கர்மவாசனை அடிப்படையில் இவ்வுலகில் பிறந்து வாழ்ந்து மோட்சமடைகின்றனர். பிறப்பும் இறப்பும் இறைவன் பொறுப்பில் உள்ளன. வாழ்வில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள், இன்ப- துன்பங்கள் சுகபோகங்கள், புகழ், நோய், நொடி போன்றவை பூர்வஜென்ம கர்மாக்களாலும், தற்போதைய வாழ்க்கைச் சூழலாலும் ஏற்படுபவையாகும். உடலுக்கு உபாதை என்றால் மருத்துவரை நாடுவதுபோல், மனதுக்கு உபாதை ஏற்பட்டால் ஆன்றோர்களையும் சான்றோர்களையும்- அதற்கும் மேலாக இறைவனை நாடுவதென்பதும் நம் மனதில் இயல்பாக ஏற்படும் சிந்தனையாகும். இவற்றில் உடலென்பது பிரத்யட்சமாக உள்ளதால் அது பகுத்தறிவுக்கு உட்பட்டது. மனமென்பது உருவமில்லாத இறைவனின் உன்னதப் படைப்பு. இதற்கு ஏதேனும் உபாதைகள் ஏற்பட்டால் மருந்து உண்பதால் பயனில்லை; இதற்கு அனுபவ- அனுமான வழியே சிறந்தது.

மூன்று விமானங்களுடன் ஆலயம்



யாகசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என் பையன் பரீட்சையில் மதிப்பெண் குறைந்ததால், ஜோதிடரின் ஆலோசனைப்படி சரியான தருணத்தில் வித்யார்த்தி ஹோமம் செய்தேன். அடுத்த பரீட்சையில் நல்ல மதிப்பெண் பெற்றான். ஹோமத்திற்கு இவ்வளவு சக்தி உள்ளதை என் அனுபவத்தில் கண்டேன்' என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம்.

இதேபோல் உடற்குறை, மனக்குறை மட்டுமின்றி எப்படிப்பட்ட குறைகளுக்கும் சிறப்பு ஹோமங்கள் செய்தால் அனைத்து பிரச்சினைகளையும் நீக்கும் தலம்தான் கோவில்பாளையத்திலுள்ள ஸ்ரீகாலகாலேஸ்வரர் ஆலயம்.

*இறைவன்: ஸ்ரீகாலகாலேஸ்வரர்.*

*இறைவி: கருணாகரவல்லி அம்பாள்.*

*விநாயகர்: காலவிநாயகர்.*

*முருகன்: காலசுப்பிரமணியர்.*

*பைரவர்: காலபைரவர்.*


*தீர்த்தம்: காலபொய்கைத் தீர்த்தம் (எம தீர்த்தம்).*

*தலவிருட்சம்: வில்வமரம்.*

**தலவரலாறு**

சிவபக்தனும் சிறுவனுமான மார்க்கண்டேயனுக்கு 16 வயதிலேயே ஆயுள் முடியவேண்டுமென்று விதி இருந்ததால் மார்க்கண்டேயனுக்கு 16-ஆவது வயது தொடங்கியதும் அவன் உயிரைக் கவர்ந்துசெல்ல எமதர்மன் வந்தான். மார்க்கண்டேயன் ஓடிச் சென்று திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரரை அணைத்துக்கொண்டான். இருப்பினும் எமதர்மன் பாசக் கயிற்றை வீசவே, அந்தக் கயிறு சிவலிங்கத்தின்மேல் பட்டது. சினம் கொண்ட சிவன் "என்னைச் சரணடைந்தவர் ஆயுள்நீட்டிப்பு பெறுவர்" எனக் கூறி, எமனை எட்டி உதைத்தார். மார்க்கண்டேயனுக்கு என்றும் பதினாறு என்ற வரத்தினைத் தந்தார். இதுவரை நடந்த சம்பவம் அனைவரும் அறிந்ததே! அதன்பின் நடந்ததென்ன?

சிவனிடம் உதை பட்ட எமன் சாதாரண மனிதனுக்கு ஒப்பானான். எமபதவி பறிபோயிற்று. மீண்டும் எமபதவி வேண்டி கௌசிகபுரி என்னும் தலத்திற்குச் சென்று (தற்போதைய கோவில்பாளையம்) அங்குள்ள கௌசிக நதியில் நீராடி சிவபூஜை செய்ய எண்ணினான். சிவனாக எண்ணி வழிபட கல், விபூதி, வில்வம், ருத்ராட்சம் எதுவும் கிடைக்கவில்லையே என்று வருந்திய நிலையில், அங்கே கீழே கிடந்த குச்சியை எடுத்து தரையில் ஓரிடத்தில் குத்தினான். உள்ளிருந்து நுரை பொங்கிவந்தது. மணலுடன் நுரையையும் சேர்த்து லிங்கம் வடித்தான். மிகுந்த சிரத்தையோடு சிவ வழிபாடு செய்தான்.



கால விநாயகர்

கௌசிக நதியில் கௌசிக முனிவரான விஸ்வாமித்திரர் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் எமனை அழைத்து, "காலனே! நீ செய்த சிவபூஜையால் உனது சாபம் நீங்கியது. நீ எமலோகம் செல்லலாம்" என்று கூறினார். காலனும் எமலோகம் சென்றுவிட்டான். காலன் விட்டுசென்ற சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பிற்காலத்தில் கோவில் எழுப்பப்பட்டது.

காலன் லிங்கப் பிரதிஷ்டை செய்து சிவபூஜை மேற்கொண்டதாலும், காலனுக்கு மீண்டும் எமபதவியைத் தந்ததாலும் இங்குள்ள ஈசனுக்கு காலகாலேஸ்வரர் என்ற திருநாமம் ஏற்பட்டது.



ஆயுளைக் கூட்டுவதற்கு பல உபாயங்கள் கூறப்பட்ட போதிலும், ஆயுளுக்கான சாந்திப் பரிகாரங்கள் இவை:

*50 வயதில் செய்யவேண்டியது- வைஷ்ணவி சாந்தி.*

*55 வயதில் செய்யவேண்டியது- வாருணி சாந்தி.*

*60 வயதில்*


ஃ கோவை ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

## 20. திருவள்ளூர்



சென்னையிலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவிலுள்ள இத்தலத்தில், விஜயகோடி விமானத்தின்கீழ் புஜங்க சயனராக கிழக்கே திருமுகம்கொண்டு காட்சியளிக்கிறார் வீரராகவப் பெருமாள். நாபிக்கமலத்திலுள்ள நான்முகனுக்கு இவரது இடக்கரம் பிரணவத்தை உணர்த்தியவாறு உள்ளது. வலக்கரம் சாலிஹோத்திர முனிவரின் தலைமீது பதிந்து அபயப் பிரதானம் அருள்கிறது. அந்த முனிவர் இத்தலத்தில் தவமியற்றியபோது, ஒரு வயோதிகர் அவரது விருந்தினராக வந்தார். உணவுண்டபின் ஓய்வுகொள்ள இடம் கோரி 'எவ்வுள்?' என வினவ, முனிவர் காட்டிய பர்ணசாலையில் சயனித்த அந்த வயோதிகர், தன் சுயஉருவைக் காட்டினார். ஆம்; திருமாலே அவ்வாறு வயோதிகராக வந்து முனிவரை ஆட்கொண்டார். சயனக்கோலத்தில் வீரராகவராக பள்ளிகொண்டார். திருமால், 'தாம் பள்ளிகொள்ள எவ்வுள்?' என வினவியதால் இத்தலம் 'திருஎவ்வுள்' எனப்பட்டு, பின்னர் திருவள்ளூராக மருவியது.

செய்யவேண்டியது- உக்ரரத சாந்தி.

61 வயது ஆரம்பத்தில் செய்யவேண்டியது- சஷ்டியப்த பூர்த்தி சாந்தி.

65 வயதில் செய்யவேண்டியது- மிருத்யுஞ்ஜய சாந்தி.

70 வயதில் செய்யவேண்டியது- பீமரத சாந்தி அல்லது பைமாரத சாந்தி.

75 வயதில் செய்யவேண்டியது- ஐந்ரி சாந்தி.

80 அல்லது 811/2 வயதில் செய்யவேண்டியது- சஹஸ்ர சந்திர தரிசன சாந்தி அல்லது சதாபிஷேக சாந்தி.

85 வயதில் செய்யவேண்டியது- ரௌத்ரி சாந்தி.

90 வயதில் செய்யவேண்டியது- காலசொரூப சாந்தி.

95 வயதில் செய்யவேண்டியது- த்ரயம்பக மகாரதி சாந்தி.

100 வயதில் செய்யவேண்டியது- சதாப்தி மகா மிருத்யுஞ்ஜய சாந்தி.

மேற்கண்ட ஆயுள்சாந்தி கர்மாக்களை உகந்த வயதில் நாம் செய்ய வேண்டும். 'இந்த சாந்திப் பரிகாரங்கள் அனைத்துமே எந்த நோய் நொடியுமின்றி வாழவும், தொடர்ந்து வாழ்ந்து மேலும் பல சாதனைகளைச் செய்யும் சக்தியைப் பெறவேண்டியும் இறைவனை பிரார்த்திக்கும் வைபோகங்கள்' என்று சௌனக ரிஷி மேற்கண்ட பரிகாரங்களை நமக்குக் கூறியுள்ளார்.

ரிக்வேதத்தில் ஹோமங்களின் தாத்பர்யம் அதிகம் சொல்லப்பட்டுள்ளது. யஜுர்வேதத்தில் எந்த மந்திரத்தை எந்த ஹோமத்தில் சொல்ல வேண்டுமென்றும், கடுமையான பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நோய்க்கான நிவாரணங் களும் சொல்லப்பட்டுள்ளன. சாம வேதம் ஹோமங்களுக்கான செய்முறை வழிமுறை களை பிரயோகமாகச் சொல்கிறது. எல்லா வற்றையும்விட அதர்வண வேதம் மிக அதிகமான மூலிகைகளின் பெயர், லட்சணம், பயன்படுத்தும் முறை, கிடைக்கும் காலம், பதப்படுத்தும் விதம் என பல செய்திகளைத் தருகின்றது. ஆயுர்வேதமே அதர்வணவேதத்தின் உபஅங்கம் என்று சொல்லப்படுகிறது.

ஆயுர்வேதம் எந்த மூலிகைகள் எந்த நோய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாதக ப்ராண பிரயோகம்
## (வேண்டுவன எல்லாம் தரும்)

ஜாதகத்தை (or) பெயர் ராசியை பயன்படுத்தி நாம் விரும்பும் காரியங்களில் வெற்றி பெறவும், தோஷ நிவர்த்தி செய்து முன்னேற்றம் பெறவும் ஜாதகப்ராண பிரயோகம் என்ற அதி சூட்சும மாந்திரீக முறையை பலவருட ஆய்வுகளுக்கு பிறகு தற்போது வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறோம். ஜாதகம் இல்லாதவர்களுக்கும் கூட பெயர் வசிய முறைப்படி ப்ராண பிரயோகம் செய்கிறோம். உங்கள் ஜாதகப்படி செய்யப்பட்ட ஜாதகப் ப்ராண பிரயோக மாந்த்ரீகப் பொருளை நீங்கள் வைத்திருந்தாலே போதும் நீங்கள் விரும்பியதற்கு மேலான நற்பலன்கள் இனிதே நடக்கும்.

### இதனால் சாதிக்க கூடிய சில காரியங்கள்:-

எந்த ஒரு பரிகாரமும் பலிக்காதவர்களுக்கும் சகலகிரக தோஷ நிவர்த்தி செய்யலாம். ஏழரைச் சனி காலங்களில் துன்பங்களின்றி வாழ செவ்வாய் தோஷ நிவர்த்தி, பிரிந்த கணவன்/ மனைவி ஒன்று கூட, இடுமருந்தை முறிக்க, கள்ளக்காதலை முறியடிக்க, பில்லி சூன்ய, ஏவல், பேய், பிசாசு போன்ற தீய சக்தி களில் இருந்து விடுதலை பெற, வாஸ்து தோஷம் போக்க கர்ம வினையால் உண்டான அத்தனை துன்பங்களும், நோய்களும் தீர பிள்ளைகளின் கல்வி மற்றும் நல் ஒழுக்கத்திற்கு, தொழிலில் அதிகமான வாடிக்கையாளர் வர நின்று போன தொழில் மீண்டும் நடைபெற, வீடு மனை நல்ல விலைக்கு விற்க, லாட்டரியில் வெற்றி பெற, எதிரியை அடக்க, வழக்குகளில் வெற்றி பெற குடும்பப்பிரச்சனை தீர, தகுதிக் கேற்ற வேலை / தொழில் அமைய, போட்டி தேர்வுகளில் வெற்றி பெற திருமணத்தடை நீங்கி நல்ல வாழ்க்கைத்துணை அமைய, கடன் துன்பம் நீங்க மற்றும் சகலவிதமான வசியங்கள் என இது போல நூற்றுக்கும் மேலான காரியங்களுக்கு வெற்றிகரமான முறையில் ஜாதக ப்ராண பிரயோகம் செய்து தருகிறோம்.

உங்களுக்கு தேவையான ஐந்து விஷயங்களைக் கூறி பெயர் அல்லது ஜாதக விபரம் தெரிவித்தாலே போதும். ஜாதக ப்ராண பிரயோகம் செய்து மாந்த்ரீகப் பொருட்களை அனுப்புகிறோம்.

**சேவைக் கட்டணம் ரூபாய் ரூ.1500 மட்டுமே**

**மற்றும் நேரில் ஜோதிட ஆலோசனை மட்டும் பெற கட்டணம் ரூபாய் 550 மட்டுமே முன் பதிவு அவசியம்**

**குரு அருள் ஜோதிட ஆலோசனை மையம்**

12, L.M. காம்ப்ளக்ஸ், காயத்ரி நகர் 1-வது தெரு, உச்சப்பரம்புமேடு மெயின் ரோடு,
அய்யர்பங்களா, மதுரை-625014 Cell: 78680 92515



ஸ்ரீ ஜெயவீர ஆஞ்சனேயர் துணை



# அம்மன் அருள் பிரசன்னம்



## குருஜி திருமதி S. சாந்தி சண்முகம்

உங்களது அனைத்துப் பிரச்சினைகளும், செய்வினை, தீயசக்தி, ஏவல், பேய், பிசாசு, கணவன்- மனைவி பிரச்சினை, தவறான உறவு, தொழில் மேன்மை, வியாபார வளர்ச்சி, மனநிலை பாதிப்பு, கடன் பிரச்சினை, எதிரி பயம், தவறான பிள்ளைகள், மாமனார்- மாமியார் பிரச்சினை, விரும்பியதை அடைய, திருமணத் தடை, குழந்தைப் பாக்கியம், உத்தியோகம், ஆபீஸ், கோர்ட், கல்வி, தொழிலாளர்கள் பிரச்சினை, கொடுத்த பணம் திரும்பி வருதல் போன்றவைகளுக்கு ஸ்ரீ சமயபுரம் அம்மன் அருளால் நிரந்தர பலன் அடையலாம். நம்பிக்கையுடன் வாருங்கள்! நல்வாழ்வு பெறுங்கள்!!

✸ ஆலோசனை ஒரு நபருக்கு ரூ.501/- பூஜை பொருட்களுடன் வரவும்.
✸ நேரில் வர முடியாதவர்கள் ரூ.1000/- மணியார்டர் செய்து உங்களது புகைப்படத்துடன் தாய், தந்தை பெயர், வயது, நட்சத்திரம், செல் நம்பருடன் அனுப்பி வைக்கவும்.
✸ பிரச்சினைக்கு எற்ப அதற்குண்டான பரிகாரங்களுக்கு தனிக் கட்டணம் உண்டு. ✸ முன் அனுமதி பெற்று நேரில் வரவும்.

ஸ்ரீவராகி தெய்வீக சாதனங்கள் முழு உத்திரவாதத்துடன் வழங்கப்படுகிறது.

**1. ஸ்ரீவராகி பிரசாதம்:** ஏவல், பில்லி, சூன்யம், வைப்பு, செய்வினை, காத்து, கருப்பு, உடல்பிணி, இடுமருந்து முதலி யவைகள் அப்போதே பலன் காணிக்கை ரூ.1,108/- மட்டுமே. **2. ஸ்ரீ வராகி சரடு + பிரசாதம்:** தொழில் முன்னேற்றம் கணவன்- மனைவி பிரச்சினை, குழந்தைகள் பிரச்சினை, எதிரி தொல்லை நீங்கி வாழ்வில் உடனடி முன்னேற்றம் காணிக்கை ரூ.1,108/- மட்டுமே. **3. ஸ்ரீவராகி கூர்ம அவதார அஞ்சனம்:** எப்படிப்பட்ட தரித்திரமும் நீங்கி செல்வச் செழிப்பு, பணவரவு, ஐஸ்வர்யம் உண்டாக்கும் காணிக்கை ரூ.3,108/- மட்டுமே.

**உங்களுக்கு தேவையான விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. விருப்பமிருந்தால் முன் அனுமதி பெற்று நேரில்/ தபாலில் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவும். தேவையில்லாத அநாகரிகமான கேள்விகளுக்கு கண்டிப்பாக பதில் இல்லை.**



மாந்திரீகச் செம்மல் குருஜி. திருமதி S. சாந்தி சண்முகம்
SS இல்லம், திருச்சி மெயின் ரோடு, சக்தி நகர், விராலிமலை-621316, புதுக்கோட்டை (Dt)
செல்: 97885 32991

Advt


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவாரணி என்பதைக் குறிப்பிடுவதுபோல, ஹோமங்களில் எந்தெந்த யாகங்களுக்கு எத்தகைய மூலிகைகள் பயன்தருமென்று விவரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக கணபதி ஹோமத்தில், விநாயகருக்கு பிரதானமாகப் பயன்படும் அறுகம்புல்லைக் கொண்டு செய்தால் ஆயுள்விருத்தி உண்டாகும். பலாமரக்குச்சி புத்திரப்பேறு தரும்; கதிரா மரக்குச்சி செல்வம் தரும்; அபமார்க்க மரக்குச்சி புத்திரபாக்கியம் தரும்; உதும்பர மரக்குச்சி அதிர்ஷ்டம் தரும்; சமி மரக்குச்சி-பாவம் போக்கும் என விருட்சங்களின் தன்மைக்கேற்ப பயன்பாட்டின் மூலம் பெறப்படுகின்றன. இதுபோல் ஆயுஷ் ஹோமம், நவகிரக ஹோமம், வயதிற்கேற்ப சாந்திப் பரிகாரங்கள் மற்றும் காரிய சித்தி ஹோமம் உட்பட பலவகை ஹோமங்களை முறைப்படி செய்தால் பலன்கள் விரைவில் கைகூடும்.


யாகங்களின் தந்தை- படைத்தல் தொழில் புரியும் பிரம்மதேவர். கிருஷ்ண பரமாத்மா கீதையில், 'படைப்பு என்பதே ஒரு யக்ஞம்' என்கிறார். யக்ஞம் என்பதற்கு தியாகம் என்ற பொருளும் உள்ளது. படைத்தல், அதை அழித்தல், மற்றொன்று பிறத்தல் ஆகியவை படைப்பின் யக்ஞமாகின்றது.

'பற்றற்றவனாய், முக்தனாய், ஞானத்தில் நிலைபெற்ற மனத்தினனாய் உள்ளவனுடைய கர்மம், யக்ஞத்தின் பொருட்டு செய்யப்பட்டு முழுவதும் கரைந்து போகின்றது' என்கிறது பகவத் கீதை.

சிரத்தையே எக்காரியத்திலும் உடனே பலன் பெற உதவும்சாதன மார்க்கம். பஞ்சபூதங்களில் அக்னியை ஏன் தேர்ந்தெடுத்து ஹோம வழிபாடு செய்கிறோம் என்றால், வேத வழியில் அக்னியே பிரதான தெய்வத்திற்கு சேவகனாக, ஜாதகரின் பிரதிநிதியாக இருந்து வேள்விமூலம் பலன்தர முன்வருகிறது. மந்திரம்- திரவியம்- ஆகாரம் ஆகிய வழிகள் மூலம் செய்யப்படும் ஹோமவழி தெய்வத்திற்கான பிரீதியாக உள்ளது. மணி, மந்திரம், ஔஷதம் என்ற மூன்றும் ஹோமத்தில் ஒன்றுசேர்கின்றன.

இப்படி முறையாக ஹோமங்கள் செய்து, ஹோமங்களிலே க்ஷேமங்களையும், யாகங்களிலே யோகங்களையும் தருகின்ற ஒரு புண்ணிய க்ஷேத்திரம்தான் கோவில்பாளையத்தில் உள்ள காலகாலேஸ்வரர் திருக்கோவில்.

**கோயம்புத்தூரிலிருந்து சத்தியமங்கலம் சாலையில் 20 கிலோமீட்டர் தொலைவில் கோவில்பாளையம் உள்ளது. நகரப்பேருந்து, புறநகர்ப் பேருந்து என பஸ் வசதி உள்ளது.**



தட்சிணாமூர்த்தி (ஆசியாவிலேயே பெரிய திருமேனி)

### சிறப்பம்சங்கள்

✶ கரிகாற்சோழன் திருப்பணி செய்ததாக கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. (அதாவது துடியலூர்- வடமதுரை விருந்தீஸ்வரர் கோவில், இடிகரை வில்லீஸ்வரர் கோவில், கோவில்பாளையம் காலகாலேஸ்வரர் கோவில் இம்மூன்றுக்கும் சுரங்கப்பாதை அமைத்து, ஒரேசமயத்தில் திருப்பணி செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. காலப்போக்கில் சுரங்கப் பாதைகள் மறைந்தன.)

✶ சுவாமி சந்நிதியில் உள்ள நந்தி பச்சை நந்தி என்று சொல்லக்கூடிய மரகத நந்தி!

✶1,300 ஆண்டுகள் பழமைவாய்ந்த சிறப்புடன், ஆசிய துணைக்கண்டத்திலேயே மிகப்பெரிய தட்சிணாமூர்த்தி அமைந்துள்ள ஆலயமிது.

✶ மூன்று மூலவிமானத்துடன் தனித்தனி சந்நிதிகள் கிழக்குநோக்கி இருப்பதுடன், ஸ்ரீகாலகாலேஸ்வரர் சந்நிதிக்கும் கருணாகரவல்லி அம்பாள் சந்நிதிக்கும் நடுவில், வள்ளி, தேவசேனாவுடன் கால சுப்ரமணியர் இருப்பதால் சோமாஸ்கந்த அமைப்புள்ள கோவிலாகத் திகழ்கிறது.

✶நாள்பட்ட நோய் தீரவும், விஷக்கடிக்கும்- குறிப்பாக தோல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளும் தீர இங்குள்ள நஞ்சுண்டேஸ்வரருக்கு தேன், பால், சந்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிட்ட பல்வேறு திரவியங்களுடன் அபிஷேகம் செய்தால் நற்பலன் கிட்டும். தோல் நோய்க்கு, நோய் வாய்ப்பட்டவர் வயது எவ்வளவோ அவ்வளவு எண்ணிக்கை இளநீர் அபிஷேகம் செய்தால் நிவாரணம் கிடைக்கும். தேன் மற்றும் சந்தனம் பிரசாதமாகத் தருவர். அதை சாப்பிடுவதன்மூலம் நிவர்த்தி பெற்று மகிழ்ச்சியடையலாம். எமபயம் நீங்கும்.

✶ குருப்பெயர்ச்சி, சனிப் பெயர்ச்சியின்போது வெகு விமரிசையாக வேள்வி பூஜைகள் நடக்கும்.

✶விஷ்ணு துர்க்கை, அஷ்ட புஜ துர்க்கை என இரண்டு துர்க்கைகள் அருள்புரிவதும் சிறப்பு.

✶ குரு ஹோரையில் இங்குள்ள சிறப்புமிகு தட்சிணாமூர்த்தியை வழிபட பதவி, புகழ் உண்டாவதோடு கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவர்.

ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஸ்ரீசீனிவாசப் பெருமாள் அருள்வதும் சிறப்பு.




ஆயுள் விருத்திக்கு காலகாலேஸ்வரரும்; ஆரோக்கிய விருத்திக்கு ஸ்ரீநஞ்சுண்டேஸ்வரரும்; பணம், பதவி, புகழ் சேர தட்சிணாமூர்த்தியும்; துக்க நிவாரணம்பெற இரு துர்க்கைகளும் அருளுகின்றனர். சங்கடஹர சதுர்த்தியில் காலவிநாயகரும், தேய்பிறை அஷ்டமியில் காலபைரவரும், ஆதிரையன்று ஆடல்வல்லானும் ஒருங்கே அமையப்பெற்று அந்தந்த கால கட்டத்தில் அருள் புரிந்தாலும், காலாகாலத்திற்கும் நம்மைக் காத்தருளும் ஸ்ரீகாலகாலேஸ்வரரை வழிபடுவோம். கவலைகள் நீங்கி களிப்புடன் வாழ்வோம்.

ஆலயத் தொடர்புக்கு: ஸ்ரீகாலகாலேஸ்வரர் ஆலயம், கோவில்பாளையம்- 641 107. கோவை மாவட்டம்.

பகவதி சிவாச்சார்யார், அலைபேசி: 94868 06041; தொலைபேசி: 0422-2654546.

படங்கள்: போட்டோ கருணா


# கலியுக சித்தர் சாய்பாபாவைப் போலவே!

அருள்திரு சாய்பாபாவைப் போலவே 1. விபூதி 2. குங்குமம் 3.விக்கிரகங்கள் 4.மஞ்சள் 5. சந்தனம் 6. நவரத்தினங்கள் 7. கற்கண்டு 8. சர்க்கரை. 9. பல தானியங்கள் 10. பால் 11. பன்னீர் 12. தீர்த்தங்கள் முதலியவைகளை ரகசியகலை மூலம் வரவழைத்தல் அனைவரும் பாகுபாடின்றி ஒரே நாளிலேயே எளிதாக கற்றுக்கொள்ள முடியும். தாங்கள் கற்றுக்கொள்ளும் ரகசியகலையை அகில உலகம் எங்கும் எந்த இடத்திலும் எந்த நேரமும் எளிதில் செய்ய முடியும் அந்த ரகசியகலை கற்க முன் பதிவு செய்துகொண்டு நேரில் வாருங்கள். **கட்டணம் - ரூ.5000/-**

## வேண்டிய பலன் தரும் தாந்த்ரீகம் கற்றுக்கொள்ளுங்கள்

விரும்பிய காரியங்களில் வெற்றிபெற நீங்களே தாந்த்ரீகர் ஆகலாம். எண்ணியது எதுவாயினும் எண்ணியவாறு நிறைவேற்றிக்கொள்ளலாம். செல்வந்தர் ஆகுதல், வருமானம் பெருக, ஏவல் செய்வினைகளை நீக்குதல், வீடு மனை வாங்க, தொழில் மேன்மை, தொழில் போட்டியில் ஜெயிக்க, யாரையும் வசியம் செய்யும் தாந்த்ரீகம், வியாபார விருத்தி, பதவி உயர்வு, கடன் பிரச்சனை தீர, வேலைவாய்ப்பு, திருமணம், நோய் தீர, கணவன் மனைவி பிரிவினை தீர, குழந்தை பாக்கியம், தொழிலில் தன வசியம், ஆண், பெண் வசியம், கல்வியில் வெற்றிபெற இன்னும் அநேகமான காரியங்களுக்கும் நீங்களே வெற்றி பெறலாம். மேலும் எண்ணற்ற தேவைகளை தாந்த்ரீகம் மூலம் நிச்சயமாக அடையலாம். முன்பதிவு செய்துகொண்டு நேரில் வாருங்கள். **கட்டணம் - ரூ.3000/-**

## திருமகள் ஜோதிட தாந்த்ரீக மையம்

7/5, R.S.நாயுடு தெரு, (காவல் நிலையம் அருகில்)
செல்லூர், மதுரை - 625 002, தமிழ்நாடு, இந்தியா,
Cell : 9597907924, 9344110540

கலியுக சித்தர் சாய்பாபாவைப் போலவே !

கலியுக சித்தர் சாய்பாபாவைப் போலவே !

கலியுக சித்தர் சாய்பாபாவைப் போலவே !

Advt




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2015 ஜனவரி மாத ராசி பலன்கள்

## மேஷம்

மேஷ ராசிக்கு டிசம்பர் 16 முதல் சனி எட்டாமிடத்துக்கு மாறியுள்ளார். அஷ்டமச் சனியால் சோதனைகள் சூழும். மனதில் நிம்மதி குறையும். உடல் ஆரோக்கியம் பாதிக்கும். மதிப்புக்கும் அந்தஸ்துக்கும் குறையுண்டாகலாம். எடுத்த காரியங்களில் வெற்றிபெற முடியாதவாறு குறுக்கீடுகளும் தடைகளும் உண்டாகும். மக்கள்வகையில் மனஅமைதி கெடும். பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கவனம் தேவை. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளை எண்ணி ஏமாற வேண்டாம். யாருக்கும் ஜாமீன் கொடுப்பதைத் தவிர்க்கவும். தொழிலதிபர்கள் புதிய துறைகளில் அதிக பொருளை முதலீடு செய்யலாகாது. ஆசிரியர்கள், மதபோதகர்கள், சட்டவல்லுநர்கள் ஆகியோர் தங்கள் கடமைகளை சரிவர ஆற்றிவந்தால் அழிவுக்கு ஆளாகாமல் தப்பலாம்.

## ரிஷபம்

ரிஷப ராசிக்கு சனி 7-ல் இருந்தாலும் குரு பார்வை பெறுவதால் நலம் புரிவார். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்பு கூடிவரும். பொருளாதார நிலையில் வளர்ச்சி காணலாம். பெரியவர்கள், தனவந்தர்கள் ஆகியோரது தொடர்பு பயன்படும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். தெய்வப் பணிகளை நிறைவேற்றிக்கொள்ள சந்தர்ப்பம் கூடிவரும். எதிரிகள் அகலுவார்கள். வாழ்வில் முன்னேற்றம்காண நல்லவாய்ப்புகள் உருவாகும். தொழிலதிபர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். கணவன்- மனைவியிடையே சலசலப்பு விலகும். வாழ்க்கைத் துணைவரது உடல் நலம் சீராகும். கூட்டுத்தொழில் புரிபவர்கள் தங்கள் நிலையில் வளர்ச்சி காண்பார்கள். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டாகும். பயணத்தின்மூலம் நன்மைகள் உண்டாகும்.

## மிதுனம்

மிதுனத்திற்கு 2-ல் குருவும், 6-ல் சனியும் இருப்பது விசேஷம். மனதில் தெளிவும், தன்னம்பிக்கையும் கூடும். பொருளாதார நிலையில் அபிவிருத்தி காண வழிபிறக்கும். தடைப்பட்டிருந்த சுபகாரியங்கள் நிகழ வாய்ப்பு உண்டாகும். திருமணமாகாதவர்களுக்கு திருமண யோகம் கூடிவரும். திருமணமானவர்களுக்கு மக்கட்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். புத்திரர், புத்திரிகளின் முன்னேற்றம் சிறப்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோதிடபானு 'அதிர்ஷ்டம்' சி.சுப்பிரமணியம்

அமையும். மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையைப் புரிவர். வங்கிகள், சேமிப்பு நிறுவனங்கள், கஜானாக்கள் போன்ற வரவு- செலவுள்ள இடங்களில் தொழில் புரிபவர்களுக்கு செழிப்பு கூடும். தெய்வப் பணிகளை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பு அமையும்.

### கடகம்

கடக ராசிக்கு ஜென்மத்தில் குரு உச்சம்பெற்று 9-ஆம் இடத்தைப் பார்ப்ப தாலும், 2-ஆம் இடத்தை 7-க்குடைய சனி பார்ப்பதாலும் எதிர்ப்புகளை சமாளிக்கிற சக்தி பிறக்கும். நண்பர்கள், உற்றார்- உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். உங்கள் ராசிநாதனுக்கு குரு நண்பர் என்பதாலும், உங்கள் ராசிக்கு பாக்கிய ஸ்தானாதிபதி என்ப தாலும் நலம்பெறலாம். நிலம், வீடு, வாகன வசதிகள் எல்லாம் ஏற்படும். சொத்துகளால் ஆதாயமும் அனுகூலமும் கிடைக்கப்பெறலாம். வீண்செலவுகள் குறையும். தொழில்ரீதியாக முன்னேற் றம் காணலாம். உடல் ஆரோக்கியம் சீராகும். சகோதர- சகோதரிகள் வகையில் அனுகூலம் உண்டாகும். உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் இருந்த கருத்து வேறுபாடுகள் மாறும். மகான்கள், சாதுக்கள், ஞானிகள் தரிசனம் கிடைக்கும்.

### சிம்மம்

சிம்மத்திற்கு சனி 4-ஆம் இடத்திற்கு மாறியுள்ளார். இந்த மாதம் அலைச்ச லாலும் கடும் உழைப்பாலும் உடல் சோர்வு ஏற்படும். எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். தந்தை நலனில் அக்கறை தேவை. ஆன்மிகவாதிகள், அறப்பணியாளர்கள், ஜோதிடர்கள் ஆகியோருக்கெல்லாம் நல்ல வாய்ப்புகள்


விரும்பிய காரியங்களில் வெற்றி பெற
இன்றே தாந்த்ரீகர் ஆகுங்கள்

நம்மைச்சுற்றியுள்ள நம்மிடமுள்ள பொருட்களின் உதவியால் தாந்த்ரீகத்தில் எதையும் சாதிக்கலாம். மணிக்கணக்கில், நாள் கணக்கில் பூஜைகள் செய்ய வேண்டாம். நாற்பது விதமான பிரயோக முறைகள் அடங்கிய முழுமையான தாந்த்ரீக பிரயோகப் பயிற்சி ஏடு.

ஒவ்வொரு காரியத்திற்கும் 10 முதல் 20 நிமிடங்களே போதும். 108, 1008 முறைகள் மந்திரங்கள் கூற வேண்டாம். 21 முறை தாந்த்ரீக மந்திரப் பிரயோகமே போதும். ஒரு பிரயோகத்திற்கு 300 ரூபாய் வரையிலுமே அதிகம் செலவாகும். செலவில்லாமலும் சிலவற்றை செய்து கொள்ளலாம்.

எண்ணியது எண்ணியவாறு நிறைவேற தீபதவப் பயிற்சி, செல்வந்தராகும் குபேர மந்த்ர திராடகம், பாதுகாப்பு கவசம் தயாரித்தல், தவறான உறவு கொண்டவரை (ஆண், பெண்) யாராக இருந்தாலும் மாற்றலாம். கடன் நிவாரணம், தொழில் வருமானம் பெருக, அதிர்ஷ்ட தேவதை வசியம், எதிரிகளை அடக்க கட்ட, விரும்பிய வேலை கிடைக்க, நோய் நிவர்த்தியாக, விரும்பியவர்களை மணம் புரிண, ஏவல், செய்வினைகளை திருப்பி விடுதல், கண்ணேறு, பொறாமை தாக்கங்களை விலக்கும் பாதுகாப்பு கவசம், சொந்த வீடு அமைய, முதல் மதிப்பெண் பெற, விரும்பிய நாடுகளில் வேலை கிடைக்க, விரும்பிய குழந்தைப்பேறு. ஒரே மந்திரத்தால் சகலவிதமான தெய்வ தேவதைகள், வசியம், முகவசியம், சகல வசியம், வசிய முறிவுகள், போதை வஸ்துவிலிருந்து விலக்க, தொழில் போட்டியில் ஜெயிக்க விளைச்சல் பெருக, கொடியோரைத் தண்டிக்க ஆடுமுறை தாந்த்ரீகம் இன்னும் பல பிரயோகங்களிலும் யாரும் படித்த உடனே தாந்த்ரீகராக ஸித்தி பெறலாம்.

யாரையும் நம்பி மோசம் போகாமல் தெய்வ பேராற்றலின் தாந்த்ரீக உதவியுடன் நீங்களே சாதிக்கலாம். தொழில் முறையில் பிறருக்கும் நன்மை செய்து சம்பாதிக்கலாம். யாராலும் முடியும். தபால் மூலம் பயிற்சி புத்தகம் பெற ரூ.1500 மட்டுமே. நேரடி பயிற்சியும் உண்டு. நேரடி பயிற்சி பெற கட்டணம் ரூ.2000/- முன் பதிவு அவசியம்.

குரு அருள் ஜோதிட ஆலோசனை மையம்
12, காம்ப்ளக்ஸ், காயத்ரி நகர் 1வது தெரு, உச்சபரம்புமேடு மெயின் ரோடு, அய்யர்பங்களா, மதுரை - 625 014.
செல் : 98433 72663

Advt





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க

# மாலவனின் திருக்கோவில்கள்!

**21. பெரிய அய்யம்பாளையம்**



வேலூர்- திருவண்ணாமலை சாலையிலுள்ள கண்ண மங்கலத்திலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவிலுள்ள தலம். 300 படிகள் கொண்ட மலைமீதுள்ள திருக் கோவிலில் ஸ்ரீ உத்தமராயப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சிதருகிறார். ஆடு மேய்க்கும் ஊமைச் சிறுவன்முன் ஒரு பெரியவர் தோன்றி, அவன் சிரசின்மீது கை வைத்து, 'நான் வந்திருக்கிறேனென்று ஊர் மக்களிடம் போய் சொல்லிவிட்டு வா' எனக்கூற, அவனும் ஊர் மக்களிடம் சென்று 'பெரியவர் வந்திருக்கிறார்' என்று கூறினான். ஊமையாய் இருந்தவன் பேசுவதைக்கண்டு மலைத்த மக்கள் இம்மலைக்கு வந்தபோது சங்கு, சக்கரத்துடன் பெருமாள் சிலையாகக் காட்சி தந்தாராம். ஊமைக்கு வாய் கொடுத்ததால் உத்தமராயர் ஆனார். சனிக்கிழமைகளில் மாவிளக்குப் போட்டு பிரார்த்தனை செய்யப்படுகிறது. அன்று திருமஞ்சனம் நடைபெறுகிறது. பேச்சுத் தன்மைபெற, பாடகர்கள் குரல் வளம்பெற இப்பெருமாளிடமிருந்து தேன் பெற்று துளசியால் நாக்கில் தடவினால் பலன் கிடைக்கும்.

**தொகுப்பு: எஸ். காந்திமதி**

கூடிவரும். பொறியியல் துறையைச் சேர்ந்த வர்கள் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். மாணவர்கள் தங்கள் படிப்பில் முழுக்கவனம் செலுத்தினால் நல்ல வளர்ச்சி காணலாம். உத்தியோகஸ்தர்கள் சீரான வளர்ச்சி காண்பார்கள். தொழிலாளர்கள், விவசாயிகள், பொதுநலப் பணியாளர்களுக்கு சிறிய இடர்ப்பாடுகள் ஏற்பட்டு விலகும்.

**கன்னி**

இந்த மாதம் மனதில் தெளிவும், பேச்சில் இனிமையும், குடும்பத்தில் குதூகலமும், பொருளாதார நிலையில் வளர்ச்சியும், தொழில் மேன்மையும், நல்லவர்களின் தொடர்பும், உத்தியோகத்தில் உயர்வும், பொன், பொருள், சேர்க்கையும் நிகழும். சனிப்பெயர்ச்சி உன்னத மான காலமாகும். கூட்டாளிகளால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர் கள் உங்களிடம் சுமுகமாகப் பழகுவார்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நிகழும். கணவன்- மனைவி உறவு நிலை திருப்தி தரும். உடல் ஆரோக்கியம் சீராகும். பிள்ளைகள் வகையில் நல்ல செய்தி கள் கிடைக்கும். எதிர்பாராத பயணங்களால் அனுகூலம் உண்டாகும்.


**துலாம்**

துலா ராசிக்கு பாதச் சனியும் (2-ஆம் இடத்து சனி) 10-ல் குருவும் இருக்கிறார்கள். எனவே உடல்நலம் பாதிக்கும். மனதில் தெளிவிருக்காது. தலை, மூளை சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்படும். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும். பக்குவமாக சமாளிப்பது நல்லது. விரும்பத்தகாத இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் பொறுப்புணர்ந்து கடமையாற்றுவது அவசிய மாகும். பொருளாதார நிலையில் வளர்ச்சி காண அதிகம் பாடுபட வேண்டியிருக்கும். வீண் வம்பு, வழக்குகளில் சிக்க நேரலாம். எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழக லாகாது. சுபகாரியங்கள் நிகழ ஜனன கால ஜாதகம் வலுத்திருப்பது அவசியமாகும். அனா வசியமான அலைச்சல்கள் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனைத்தும் சக்திமயம்! அருள்மிகு அனைத்தும் அன்புமயம்!!


அன்னை ஆதிபராசக்தி

# அன்னை ஆதிபராசக்தி அறநிலையம்

எண்.4, புகழேந்தி தெரு, பெரியார் நகர்,
பள்ளிக்கரணை, சென்னை-600 100,
போன் : 044-2246 0820, 2246 2910.
web - www.pallikkaranaisakthi.org
E mail : contact. us@pallikkaranaisakthi.org


அன்னை மந்திரப்பாவை

## மந்திரபாவையின் மகிமை

ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்டும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே பல கல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காகம் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக்கண்டால் அலைந்து குலைந்திட -கந்தசஷ்டி கவசம்

-வேண்டியே ஏவிடும் வேதனை ஏவலும்
தோண்டியே வைத்திடும் தொல்லைதரும்- மண்டையோடு
மந்திரமும் பில்லி மணமருட்டும் சூனியமும்
தந்திரமாய் நம்மை தளர்த்திடும்- ஏந்திர
வட்டமும்தான் பரிதிவந்திட ஆவியாய்
கட்டோடழிபனிபோல் காத்தெனை- விட்டோட
-அன்னை அருளிய சக்தி கவசம் கலி வெண்பா

மேற்கண்ட தெய்வீக அருட்கவசங்களின் மூலமாக தீய எண்ணம் கொண்டவர்கள் தமது எதிரிகளுக்குப் பலவிதமான மந்திரங்களின் மூலம் ஓயாமல் இன்னல்களைத் தொடர்ந்து தருவார்கள் என அறிய முடிகிறது. இப்படிப்பட்ட மந்திரத் தொல்லைகளிலிருந்து விடுபட வேண்டி பல மகான்கள் தெய்வங்களின் மீது அருட்கவசங்களைப் புனைந்து, பாடி, தாங்களும் அடியவர்களும் மந்திரத் தொல்லைகளிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள வழி செய்துள்ளார்கள்.

இதுபோன்றே யோக நிலையில் அமர்ந்து இருக்கும் சித்தர்களுக்கும் சில தீயசக்திகள் தொடர்ந்து அவர்களுடைய யோகத்தைக் கெடுக்கும் பொருட்டு பலவிதமான மந்திர சக்திகளைக் கொண்டு இடையூறுகளைச் செய்து வந்தன. இந்த தீய மறந்திரங்கள் அனைத்தும் ஒரு பொழுதும் தம்மைத் தாக்காமலும் மற்றும் தங்களுடைய நோக்கம் பரிபூரணமாய் வெற்றியடையவும் சித்த குருமார்கள் ஒன்றுகூடி தங்களுடைய யோக சக்தியால் தேரைய சித்தர் தலைமையில் அனைத்து வகையான தீய மந்திரங்களையும் அழிக்கவல்ல பெரும் சக்தி படைத்த மந்திரப்பாவை எந்திரத்தை உருவாக்கி பேரெழில் மிக்க மந்திரப் பாவை உருவமும் அதற்கு வடிவமைத்து தாம் வழிபடும் பொருட்டு அமைத்தனர். அந்த மந்திரப்பாவையை சித்தர்கள் தங்களுக்கு உரிய உயரிய நல்வழிகாட்டும் நல்வழிகாட்டும் தெய்வமாக வழிபட்டனர்.

இத்தகு பெரும் சக்தி வாய்ந்த மந்திரப்பாவை அன்னையை ஆலயத்தில் அமாவாசை மற்றும் பௌர்ணமி தினத்தில் வந்து தரிசனம் செய்வதின் மூலம் பாவையின் திருவருளாலும் பீடத்தில் உள்ள சக்தி மிகுந்த மந்திர ஆற்றலாலும் தரிசிப்பவர் குடும்பத்திற்கு அவர்களின் எதிரிகள் மூலம் செய்யப்பட்ட எவ்வளவு சக்தி மிகுந்த மந்திர தொல்லைகள் ஆனாலும் நீங்கிவிடும் என்பது நம்பிக்கை. மேலும் அவர்கள் தங்கள் வாழ்வில் தொடர்ச்சியாக பல நல்ல முன்னேற்றங்களையும் அடையக்காணலாம்.

காரணமே கண் நிறைந்த கமலத் தாயே
கமலரச பூரணமதாய் நின்ற மாதே
பூரணமாய் சகல சித்தும் தானே தானானாய்
மகாமந்திர சொரூபமதாய் நின்றதாயே -பாடல்- 348

இவ்வாறு பாவையைப் பற்றி தோத்திரம் எனும் தலைப்பில் அகத்தியப் பெருமாள் தமது வாத சௌமியத்தில் போற்றி பாடியுள்ளார்.

குரு பார்க்க கோடி புண்ணியம் என்பர். 18 சித்த குருமார்களும், குருமார்களுக்கே குருவாக விளங்கி காத்தருளம் மந்திரப்பாவை அன்னையையும் நாம் ஒரு சேர தரிசிப்பதின் மூலம் நமது பூர்வ பாவ கர்மவினைகள், கெடுபலன்கள் விலகி எண்ணிய நற்பலன்களையும், செல்வங்களையும் அடையலாம்.

அருள்வாக்கு நேரம் : ஞாயிறு காலை 10.00 மணி, செவ்வாய் மற்றும் வெள்ளி மாலை 5.00 மணி.
பேருந்துத் தடம் : 5-A, M-51, M-21, H-51, A-51, D-51, PP-51, 51L, 270.

இத்திருத்தலம் சைதாப்பேட்டையில் இருந்து வேளச்சேரி வழியாக தாம்பரம் செல்லும் சாலையில் வேளச்சேரிக்கும் மேடவாக்கத்திற்கும் இடையில் பள்ளிக்கரணையில் அமைந்துள்ளது.

Advt.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருச்சிகம்

விருச்சிகத்திற்கு ஜென்மச் சனி விசேட மில்லை என்றாலும், 9-ஆமிடத்து குரு ராசி யைப் பார்ப்பதால், உத்தியோகத்துறையில் உள்ளவர்களுக்கு இடையூறுகள் ஏற்பட்டா லும் சமாளிக்கலாம். செய்யும் தொழிலில் பாதிப்பு ஏற்படாது. குடும்பத்தில் சிறு பிணக்கு கள் ஏற்படும். அந்நியரின் சகாயமும் நண்பர் களின் உதவியும் ஆலோசனைகளும் நிலைமையை சீராக்கப் பயன்படும். பொருளா தாரத்தில் சங்கடமான சூழ்நிலைகள் ஏற்பட்டா லும் (வரவுக்குமேல் செலவு) எளிதாக சமாளித்துக்கொள்ள முடியும். தயக்கமின்றி கேட்ட இடங்களில் கைமாற்றாக பெருந் தொகை கிடைப்பதற்கு யோகமுண்டு. கணவன்- மனைவியிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் அது உடனடி யாக மாறிவிடும்.

## தனுசு

தனுசு ராசிக்கு ஏழரைச் சனி ஆரம்பித்தா லும் குரு பலம் காரணமாக அனைத்தையும் சமாளிக்கும் திறனும் ஆற்றலும் உண்டாகும். நண்பர்கள், உற்றார்- உறவினர்கள் ஆகியோ ரால் அதிகம் அனுகூலமிராது. நிலபுலங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஈடுபடும்போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. பிற மொழி, மதக்காரர்களால் சங்கடங்கள் நீங்கி உதவியுண்டாகும். பொறியியல் துறைகள், சட்டம், காவல், ராணுவத்துறையில் இருப்பவர் கள் கவனமாக செயல்படவேண்டிய காலமிது. நேரான பாதையில் சிந்தையைச் செலுத்துவது நல்லது. குறுக்கு வழிகளில் ஈடுபடலாகாது. குடும்ப நலம், மக்கள் நலம், சகோதர நலம் ஆகியவற்றில் பாதிப்பில்லை. வீண் செலவுகள், விரயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

## மகரம்

ராசிநாதன் சனி மகர ராசிக்கு 11-ஆமிடத் திற்கு மாறியுள்ளார். இது அனுகூலமான இடமாகும். மனதில் தெளிவும் தன்னம் பிக்கையும் புத்திசாலித்தனமும் பளிச்சிடும் நேரமிது. தொட்டது பொன்னாகும் பொற்கால மிது. புதிய முயற்சிகளை தாராளமாக மேற் கொள்ளலாம். மதிப்புக்கும் அந்தஸ்துக்கும் குறையேற்படாது. உடல்நலம் சீராகும். தெய்வ ஸ்தல யாத்திரை, சாது, மகான்களின் தரிசனம் கிட்டும். நல்லவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற சொத்துகள் சேரும். பொன், பொருள் சேர்க்கை கூடும். கொடுக்கல்- வாங்கல் இனங்கள் லாபம் தரும்.

## கும்பம்

இந்த மாதத்தின் ஆரம்பத்திலிருந்து எடுத்த காரியங்கள் தடங்கலின்றி எளிதாக நிறைவேறி வருவது மனதிற்கு மகிழ்ச்சியையும் தெம்பையும் அளிக்கும். தொழில், உத்தியோகத் தில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். சிக்கலான பல பிரச்சினைகளை சுலபமாக முடிப்பதற்குரிய வழிவகைகளும், குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் குதூகலமும் உண்டாகும். நண்பர்களும் உறவினர்களும் வலிய வந்து உதவிசெய்வார்கள். தொழில், வியாபாரத்தில் போட்டிகளை சமாளித்து லாபகரமாக நடத்தலாம். குடும்பத்தில் தடைப்பட்டுவந்த சுபகாரியங்கள் நிறை வேறும். கணவன்- மனைவி உறவு மேம்படும். பிள்ளைகள்வகையில் குதூகலம் உண்டாகும்.

## மீனம்

இந்த மாதம் பொருளாதார நிலையில் அனுகூலமான பலன்களே நிகழும். சிலருக்கு எதிர்பாராத தனப்பிராப்திகளும் ஆடை, ஆபரணச் சேர்க்கைகளும் உண்டாகும். புதிய சொத்துகள், புதிய வாகனம் வாங்கும் யோகமும் ஏற்படும். அரசாங்க மானியங்களைப் பெறுவதற்கு வாய்ப்புண்டு. குடும்ப வாழ்க்கை அவ்வளவு அனுகூலமாக இராது என்றாலும், பொருளாதார நெருக்கடிகளோ மனக் கிலேசமோ ஏற்பட வாய்ப்பில்லை. போட்டி பந்தயங்களில் எதிர்பாராத வெற்றி வாய்ப்புகள் ஏற்படலாம். தடைப்பட்டுவந்த திருமணங்கள் நிகழும். உடல்நலனில் அக்கறையும் கவனமும் தேவை. எதிர்பாராத அலைச்சல்கள் ஏற்படும். சகோதரவகையில் மனக்கசப்பு நீங்கும். முடிந்தவரை தொலைதூர பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை-63. செல்: 93817 42363, போன்: 22760612, 22762299
**City Office : No.7/4,** கீழ்தளம் வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்), சென்னை-600 033, போன் : **23714942.**

## ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்!

நம் சாரதா சக்தி பீடத்தின் சார்பில் கடந்த **25** ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற **200** மாணவ- மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் **பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்** ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| ✧ **காலை சிற்றுண்டி (200 பேருக்கு)** | **ரூ. 1,000/-** |
| ✧ **மதிய உணவு** | **ரூ. 2,000/-** |
| ✧ **இரவு சிற்றுண்டி** | **ரூ. 1,000/-** |
| ✧ **இனிப்பு மற்றும் பால் வழங்குதல்** | **ரூ. 1,000/-** |
| ✧ **ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை** | **ரூ. 1,000/-** |
| ✧ **ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)** | **ரூ. 12,000/-** |
| ✧ **குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு** | **ரூ. 4.00.000/-** |

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/ வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **"ஸ்ரீ சாரதா சக்தி பீடம்"** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**இறைவன் தொண்டில்**

**A. ராஜா பக்கிரிசாமி, M.Sc., M.Ed.,**

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

**Email: Ssspeetam@gmail.com**
**website: www.sspeetam.org**

Advt.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர் பின்பற்ற வேண்டிய 36 நெறிகள்!



'இம்மையிலும் மறுமையிலும் அரசனுக்கு நன்மை தரக்கூடிய குணங்கள் யாவை?' என பீஷ்மரிடம் தருமன் கேட்டான். அதற்கு பீஷ்மர், 'ஒரு மன்னன் 36 குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்று சொல்லி அவற்றை விளக்கினார். அவை பின்வருமாறு:

1. விருப்பு வெறுப்பின்றி தர்மங்களைச் செய்தல்.
2. பரலோகத்தில் விருப்புடன் நட்பு பாராட்டுதல்.
3. அறவழியில் பொருளீட்டுதல்.
4. அறம், பொருளுக்கு அழிவின்றி இன்பத்தைப் பெறுதல்.
5. யாருடனும் அன்புடன் பேசுதல்.
6. நல்லவர் அல்லாதாருக்குத் தராத கொடையாளியாக இருத்தல்.
7. தற்புகழ்ச்சியின்றி இருத்தல்.
8. கருணையுடன் இருத்தல்.
9. கெட்டவர்களுடன் சேராது நல்லவர்களுடன் சேர்ந்திருத்தல்.
10. பகைவன் எனத் தீர்மானித்துப் போரிடல்.
11. நற்குணம் அற்றவரிடம் தூதர்களைச் சேராதிருத்தல்.
12. பிறருக்குத் துன்பம் தராது பணிபுரிதல்.
13. சான்றோரிடம் பயனை அறிவித்தல்.
14. பிறரது குணங்களை மட்டுமே கூறுதல்.
15. துறவியர் அல்லாதாருடம் கப்பம் வாங்குதல்.
16. தக்காரைச் சார்ந்திருத்தல்.
17. நன்கு ஆராயாமல் தண்டனை தராதிருத்தல்.
18. ரகசியத்தை வெளியிடாதிருத்தல்.
19. உலோபிகள் அல்லாதார்க்குக் கொடுத்தல்.
20. தீங்கு செய்பவரை நம்பாதிருத்தல்.
21. அருவருப்படையாமல் மனைவியைக் காத்தல்.
22. தூய்மையுடன் இருத்தல்.
23. பல பெண்களுடன் சேராதிருத்தல்.
24. நலம் பயக்கும் சுவைகளை உண்ணுதல்.
25. வழிபடத்தக்கவர்களை கர்வமின்றி வழிபடல்.
26. பெரியோர்க்கு வஞ்சனையின்றி பணிவிடை செய்தல்.
27. ஆடம்பரமின்றி தெய்வ பூஜை செய்தல்.
28. பழிக்கு இடமில்லாப் பொருளை விரும்புதல்.
29. பணிவுடன் பணிபுரிதல்.
30. காலமறிந்து செயல்படுவதில் வல்லவனாய் இருத்தல்.
31. பயனுள்ளவற்றையே பேசுதல்.
32. தடை சொல்லாது உதவி புரிதல்.
33. குற்றத்திற்கேற்ப தண்டித்தல்.
34. பகைவரைக் கொன்றபின் வருந்தாதிருத்தல்.
35. காரணமின்றி சினம் கொள்ளாதிருத்தல்.
36. தீங்கு செய்தவரிடம் மென்மையாக இராமை.


-எம்.ஆர். பெரியாண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க
# மாலவனின் திருக்கோவில்கள்!

## 22. மாமல்லபுரம்



சென்னை- புதுச்சேரி கடற்கரை சாலையில் அமைந்துள்ளன வைணவ திவ்யதேசம். இங்குள்ள திருக்கோவில் கருவறையில், ஸ்ரீதேவி, பூதேவி இல்லாமல்- வேறெங்கும் காணாதவகையில் தரையில் படுத்தகோலத்தில் தலசயனப் பெருமாள் காட்சியளிக்கிறார். பல்லவ மன்னன் மல்லேஸ்வரன் ஆட்சிக்காலத்தில், தினமும் 1,000 பேருக்கு வழங்கப்பட்டு வந்த அன்னதானத்தை திடீரென நிறுத்திவிட்டான். இதனால் கோபமடைந்த வைணவ அடியார்கள், மன்னனை 'முதலையாய் இருப்பாய்!' என்று சபித்தனர். அதன் காரணமாக அவன் முதலையாகி குளத்தில் கிடந்தான். அக்குளத்தில் 1,000 தாமரை இதழ்களைப் பறித்து பெருமாளுக்கு படைக்க புண்டரீக மகரிஷி சென்றார். அவருடைய அறிவுரையின்படி மல்லேஸ்வரன் பறித்துக் கொடுத்த 1,000 தாமரை இதழ்களை பெருமாளுக்கு முனிவர் சாற்றினார். பெருமாளிடம் மல்லேஸ்வரனின் சாபத்தை நீக்க வேண்டினார். இறைவன் அருள, சாபம் நீங்கப்பெற்ற மல்லேஸ்வரன் மீண்டும் 1,000 பேருக்கு அன்னதானம் வழங்கும் பணியைத் தொடங்கினான்.


ஸ்ரீ விஷ்ணு பகவான் துணை



ஜெயா டி.வி. புகழ் 'பரிகாரச் செம்மல்'
'மூலிகைச்சித்தர்' ஞானகுரு
செல்: 95002 19209



1. மூலிகை கையேடு மூலிகை டி.வி.டி.யுடன் 60 மூலிகை விபர கையேடு -ரூ.3,500/-
2. சித்தர் சூட்சும ஆருடம் கையேடு -ரூ.2,000/-
3. திதி சூன்யப் பரிகாரம் கையேடு -ரூ.2,000/-
4. எண் கணிதம் கையேடு -ரூ.2,000/-
5. சித்தர் எளிய யந்திரம் 30 பிரச்சினைக்குண்டானது 1-ஆம் பாகம் -ரூ.2,000/-
6. சித்தர் எளிய 30 பிரச்சினைக்குண்டான யந்திரம் 2-ஆம் பாகம் -ரூ.2,000/-
7. சித்தர் எளிய 30 பிரச்சினைக்குண்டான யந்திரம் 3-ஆம் பாகம் -ரூ.2,000/-
8. பைரவர் வழிபாட்டு முறைகள் மற்றும் 5 வித யட்சிணி வசிய பயிற்சி கையேடு -ரூ.2,000/-
9. அனைத்து பிரச்சினைகளையும் நீக்கும் அற்புத பரிகாரங்கள் 30 பிரச்சினைகள்- 1-ஆம் பாகம் -ரூ.2,000/-
10. அனைத்து பிரச்சினைகளையும் நீக்கும் அற்புத பரிகாரங்கள் 30 பிரச்சினைகள்- 2-ஆம் பாகம் -ரூ.2,000/-.
11. மலை போல் எந்த பிரச்சினைகளையும் தூள்தூளாக்கும் 20 பிரச்சினைக்குண்டான மகத்தான மந்திரம்- 1-ஆம் பாகம் -ரூ.2,000/-.
12. மலை போல் எந்த பிரச்சினைகளையும் தூள்தூளாக்கும் 20 பிரச்சினைக்குண்டான மகத்தான மந்திரம்- 2-ஆம் பாகம் -ரூ.2,000/-.
13. தீராத வியாதிகளையும் தீர்க்கும் எளிய யந்திரப் பயிற்சி -ரூ.2,000/-.
14. தீராத வியாதிகளையும் தீர்க்கும் மூலிகை மருத்துவம் -ரூ.2,000/-.

விருப்பமுள்ளவர்கள் போன் செய்துவிட்டு நேரில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது M.O. செய்து கையேட்டை, கூரியரில் பெற்றுக்கொள்ளலாம்.




முன்பதிவு செய்ய: 95002 19209.
ஜெயா டி.வி. புகழ் 'பரிகாரச் செம்மல்'
'மூலிகைச்சித்தர்' ஞானகுரு
பியூட்டிமூன் லாட்ஜ், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, டவுட்டன், புரசைவாக்கம், சென்னை-600 007. (டவுட்டன் சிக்னல் அருகில்,

Advt.,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னையே நீ



ஒரு மனிதன், உத்தம குரு ஒருவரை முதன்முதலாக என்று தரிசிக்க ஆரம்பிக்கிறானோ, அன்றே- அப்பொழுதே அவன் வாழ்வில் ஒளிவீசத் தொடங்கிவிடுகிறது. அவன் பூமியில் பிறந்ததற்கான பலனை அடைந்து விடுகிறான். பலரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி நிம்மதி தருவதற்காக மகான்கள் பூமியில் அவதரிக்கின்றனர். ஒருவனுக்கு எது வேண்டுமானாலும் கிடைத்துவிடும். ஆனால் மனநிம்மதி கிடைப்பது மட்டும் அவ்வளவு சுலபமல்ல. அதை ஒரு குருவின் சந்நிதி தருவதுபோல வேறெதுவும் தராது. நாம் பிறந்துவிட்டதால் வாழுகிறோம். ஆனால் குருமார்கள் வாழ்வதற்காகவே பிறக்கின்றனர். உலக நன்மைக்காக அவர்களின் வாழ்வு நடந்துகொண்டிருக்கிறது. பாமர மக்கள் இறைவனை மறந்துவிட்டு, தங்களை மட்டுமே எண்ணிக்கொண்டு வாழ்கிறார்களே- அவர்களை இறைவன்பால் இழுத்து பக்தியை வளர்க்கவே அவர்கள் தங்களை அர்ப்பணித்துக்கொள்கின்றனர்.

இந்த வகையில் ஒரு ஜீவன்முக்தர்- நமக்கு முக்தியை அளிக்கக்கூடிய ஒரு மகாகுருவாக இருந்தவர்- இன்றும் இருந்துகொண்டிருப்பவர் பகவான் ஸ்ரீரமண மகரிஷி ஆவார். தன்னை ஈன்ற தாய்க்கும், தன்னிடம் மிகுந்த பக்தியோடும் பணிவோடும் அன்போடும் இருந்த சீடனுக்கும், 'வள்ளல் தரும் பசு' என்று சொல்லக் கூடிய தன் மனதிற்கினிய பசுவுக்கும் முக்தியைக் கொடுத்த ஒரு அற்புத மகான் பகவான் ரமண மகரிஷி அவர்கள்.

எதையும் நாம்தான் செய்கிறோம் என்ற எண்ணத்தில்- 'நான்... நான்' என்ற அகங்காரத்தில் பெரும்பான்மை யான மக்கள் வாழ்ந்துவருகின்றனர்.

ஸ்ரீரமணர், ' நீ யார் என்று சொல். எப்படி வந்தாய்? உன்னை இங்கு கொண்டுவந்துவிட்டது யார்? நீயாகவே செயல்படுகிறாயா? நினைத்துப் பார்! உன்னை நீ அறிந்துகொள் வாய்' என்கிறார்.

ஆம்; நம்மைப் படைத்து பூமிக்கு அனுப்பிவைத்தது இறைவன். அந்த இறைவன்தான் நம்மை இயக்குகிறான்; நாம் இயங்குகிறோம். அப்படியிருக்க 'நான் செய்தேன்... என்னால்தான் இது செய்துமுடிக்கப்பட்டது' என்பது எந்த வகையில் நியாயமாகும்? தவறுசெய்தவன் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். அவன் திருந்தி வாழ்ந்தால் சமுதாய சீர்திருத்தம் தானே ஏற்பட்டுவிடும். 'அனைவரும் சகோதரர்களே' என்ற மனப்பாங்கு ஏற்பட வேண்டும். மனித சமுதாயத்தின் மிக உயர்ந்த குறிக்கோள் இது. சகோதரத்துவத்தின் மூலமே நாட்டில் அமைதியையும் நட்பையும் நம்மால் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாய்!

**ஃ ராமசுப்பு**


**ஸ்ரீரமண ஜெயந்தி 6-1-2015**

மற்றவர்களுக்கு நன்மை செய்யும்போது இதயத்தில் ஏற்படுகின்ற நிறைவே இறைவனுக்கு சமமாகும். அங்கே அன்பு, பரிசு எல்லாம் ஒன்றாகிவிடுகிறது- என்பன போன்ற எத்தனையோ அறிவுரைகளை வழங்கியவர் பகவான் ஸ்ரீரமணர்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டைக்கு அருகில், 'திருச்சுழி' என்ற சிவஸ்தலம் உள்ள ஊரில், 30-12-1879 அன்று சுந்தரமையர், அழகம்மாள் தம்பதிக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார் ஸ்ரீ ரமண மகரிஷிகள். இவருடைய இயற்பெயர் வெங்கடராமன். திருச்சுழியில் உள்ள சேதுபதி ஆரம்பப்பள்ளியில் பயின்றார். இவரது தகப்பனார் இயற்கை எய்திவிடவே, தனது சித்தப்பா சுப்பையர் பராமரிப்பில் மதுரைக்கு வந்து, அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்கலானார். இருந்தாலும் அவருக்கு படிப்பதில் அவ்வளவு ஈடுபாடில்லை. ஆன்மிகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவே ஆசைப்பட்டார்.

ஒருசமயம் அவர் உறங்கிக்கொண்டிருக்கும்போது அவரது உடல், ஆவி அனைத்தும் சிறிது நேரம் அடங்கி விட்டதுபோலவும், பிறகு உயிர்பெற்றெழுந்ததுபோலவும் உணர்ந்தார். அப்போதுதான் அவர் இந்த உடம்பு வேறு, உயிர் வேறு; உடம்பைவிட்டு உயிர் போய்விட்டால் ஆன்மா இல்லாத இந்த உடம்பு எதற்கும் பயனற்றது. இந்த ஈன உடம்பை வைத்துக்கொண்டு மனிதன் போடும் ஆட்டமென்ன என்று தன்னை மறந்தார். தவத்தில் ஈடுபட எண்ணம் கொண்டார்.

அந்த நிலையில், அண்ணாமலை செல்லுமாறு இறையாணை கிடைக்க, அங்கு செல்ல முடிவு செய்தார். ரயிலேறி திருவண்ணாமலைநோக்கி வந்தார். போதிய பணமில்லாமையினால் விழுப்புரத்திலிருந்து

**டாக்டர் ஜாண். பி. நாயகம்**

M.B. B.S., M.D., Ph.D., D.Sc., F.C.D.

நடத்தும்



**நேரடி தந்திரயோகப் பயிற்சி முகாம்கள்**

இடம்: **ஆஷா நிவாஸ், ரட்லண்ட் கேட் 5-ஆவது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34.**

நேரம்: **காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை. (முன்பதிவு அவசியம்).**

**முதல் நிலை பயிற்சி**

நாள்: **2015, பிப்ரவரி 14, 15 (சனி, ஞாயிறு).** கட்டணம்: **ரூ. 2,400/-**

**பஞ்சபட்சி சாஸ்திர பயிற்சி**

நாள்: **2015, ஏப்ரல் 11, 12 (சனி, ஞாயிறு).** கட்டணம்: **ரூ. 2,400/-**

**இரண்டாம் நிலை சக்கரா பயிற்சி**

(முதல் நிலை பயிற்சியை முடித்தவர்களுக்கு மட்டும்).

நாள்: **2015, மே 1, 2, 3 (வெள்ளி, சனி, ஞாயிறு).** கட்டணம்: **ரூ. 3,600/-**

கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள், தங்களைப் பற்றிய சிறு குறிப்பு (பயோடேட்டா), ஒரு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், பயிற்சிக் கட்டணத்திற்கான வரையோலை (D.D. favouring 'Dr. John.B. Nayagam'- Payable at Chennai) ஆகியவற்றுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு உடனே அனுப்பவும்.

**டாக்டர் ஜாண். பி. நாயகம்**

ஜே.பி. நீரிழிவு நோய் மையம், 222, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

விவரங்களுக்கு செல்:
**98408 09700,**
**98408 42865**

Advt




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணாமலைக்கு நடந்தே வந்தார்.

தன் உடம்பிலிருந்த ஆடைகளைக் கழற்றி தூர எறிந்தார். கோவணத்தைக் கட்டிக்கொண்டார். ஒவ்வொரு நாளும் அண்ணாமலையாரை தரிசித்துவிட்டு, அங்குள்ள கோவில் மண்டபங்களில் ஆங்காங்கே அமர்ந்து, அண்ணா மலையாரை மனதில் எண்ணியபடி தியானத்தில் அமர்ந்து விடுவார். இப்படி தியானத்தில் சில நேரமும், கோவிலில் அங்குமிங்கும் அலைந்துகொண்டும் இருந்த இவரை, அந்த கோவில் ஊழியர்கள், அண்ணாமலை பக்தர்கள் 'ஏதோ பைத்தியம்போல இருக்கிறார்' என்று ஏளனமாகப் பேசுவதும் மிரட்டுவதும், சில சிறு குழந்தைகள் அவர்மீது கல்லை வீசியெறிவதும் அங்கே அவ்வப்போது நடக்கும் காட்சிகளாக இருந்தன. கல்லால் அடிபட்ட காயங்கள் அவரது உடம்பில் இருக்கும். அதனால் ஏற்பட்ட புண்கள் ஆறாமல் ஈக்கள் மொய்க்கும். இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபட, அங்குள்ள பாதாள லிங்க குகைக்குள் புகுந்து அங்கிருந்தபடியே தியானத்தில் ஆழ்ந்தார். வெகு நாட்கள் அவர் அந்த குகைக்குள் தியானத்தில் இருந்ததால் அவரது உடம்பில் பூச்சிகள் கடித்து புண்ணாகிவிட்டன. உடம்பில் பல பகுதிகளும் புண்கள் தோன்றி அவற்றில் நீர் கசிய ஆரம்பித்தன. 'இன்னும் கொஞ்ச நாட்கள் அவர் அப்படியே இருந்தால், தோலெல்லாம் உரிந்து போய்விடுமே' என்று வேதனைப் பட்ட மகான் சேஷாத்திரி ஸ்வாமிகள், அந்த குகையி லிருந்து ஸ்ரீரமணரை வெளியே கொண்டுவந்து ஓரிடத்தில் தங்கவைத்து அவரை வாழவைத்தார்.

கொஞ்ச நாட்களில் அவருடைய தியானமும் மௌனமும் அவரை மனித தெய்வமாக மக்களுக்குக் காட்டியது. நாள் போகப் போக பல பக்தர்கள் இவரை நாடிவர ஆரம்பித்தனர். இவருடை அருட்பார்வையால் பக்தர்கள் நல்ல பல நன்மைகளை அடைந்தனர்.

வெகுகாலம் மௌனமாகவே இருந்து தவம், தியான மென்று பகவானிடத்திலே தன்னை அர்ப்பணம் செய்து கொண்டிருந்தார். அதிகமாகப் பேசாவிட்டாலும், இவர் பேசும் சின்னச் சின்ன வார்த்தைகளே மாபெரும் ஞானிக்கு இணையாக இருக்கும்.

ஸ்ரீரமண மகரிஷிகளின் மௌனம்தான் அவரது அருட் கடாட்சம். மலைகள் பேசுவதில்லை; மௌனமாகவே இருக்கின்றன. அந்த மலையிலுள்ள அடர்ந்த காடுகளில் வளர்ந்த மரங்கள் பேசுவதில்லை. அவை அப்படி மௌனமாக இருப்பதால்தான் நீண்ட நாட்கள் நீடித்து அசைக்கமுடியாத அளவுக்கு உறுதியாக இருக்கின்றன. அதேபோல் ரமண மகரிஷிகளின் மௌனமே அவரது மனவுறுதிக்கு ஊன்றுகோலாய் இருந்தது.

ஒருமுறை ரமண மகரிஷி தன் பக்தர்களுடன் திருவண்ணாமலை கிரிவலத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது ஒரு குறிப்பிட்ட தூரம் வரை மலைமீது சென்ற பின்பு, "இதற்குமேல் போகவேண்டாம்; திரும்பலாம்" என்று சொல்லி திரும்பிவிட்டார். இருந்தாலும், 'ஏன் இதற்கு மேல் போகக்கூடாது. போனால் என்னாகிவிடும்...?' என்று எண்ணிய சில பக்தர்கள், அந்த மலைமீது மீண்டும் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து மேலே போனார்கள். கொஞ்ச தூரம் சென்றதும் அவர்களின் கண்கள் குருடாகிவிட்டன.

இதேபோல் ஒரு பெரிய மகான் இவரிடம், "நீங்கள் சந்நியாசி என்றால் காவி உடை உடுத்தி, கையில் தண்டம் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு குருவிடம் உபதேசம் பெறவேண்டும். ஆகவே நானே உங்களுக்கு உபதேசம் செய்து காவியுடையும் தண்டமும் தருகிறேன்" என்று வந்தார். வந்தவர் குளித்துவிட்டு வருவதாகக் கூறி குளக்கரைக்குப் போய்விட்டார். அந்த மகான் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் வேடன்போல ஒருவன் தன் தலையில் ஒரு பெரிய மூட்டையுடன் வந்து ஸ்ரீரமணரைப் பார்த்து, "இந்த மூட்டையைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொள்ளுங்கள். நான் அந்தக் குளத்தில் போய் குளித்துவிட்டு வருகிறேன்" என்று கூறி மூட்டை யைப் போட்டுவிட்டுப் போனான். அவன் போட்ட வேகத்தில் மூட்டை அவிழ்ந்து அதிலிருந்து ஒரு புத்தகம் கீழே விழுந்தது. சிறிது நேரம் அந்த புத்தகம் அப்படியே கிடந்தது. அடுத்த சில நொடிகளில் காற்று சற்று வேகமாக வீச அப்புத்தகத்தில் இருந்த பக்கங்கள் பறந்து விரிந்து, ஒரு பக்கத்தில் அப்படியே நின்றது. அந்தப் புத்தகத்தையெடுத்து அந்தப் பக்கத்தைப் படித்துப் பார்த்தார் பகவான் ஸ்ரீரமண மகரிஷி. அதில் 'திருவண்ணாமலையைச் சுற்றி ஐம்பது மைல் தூரத்திற் குள் யார் துறவறம் மேற்கொண்டாலும், காவி அணிந்து, தண்டம் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இது இறைவனின் கட்டளை' என்றிருந்தது. இதைப் படித்துப் பார்த்த சிறிது நேரத்தில் குளிக்கப்போன அந்த மகான் "உபதேசம் செய்யலாமா?" என்று வந்து நின்றார். ஸ்ரீரமணர் அந்தப் புத்தகத்தில் உள்ளதை எடுத்துப் படித்துக் காட்ட அந்த மகான் வந்த வழி திரும்பிச் சென்றுவிட்டார். வேடன்போல வந்தவன் திருவண்ணாமலை ஈஸ்வரன் என்பதைத் தெரிந்துகொண்டார் ஸ்ரீரமணர்.

தனது மௌன சக்தியாலேயே எதையும் கற்பிக்கும் ஆற்றல் பெற்றவர் ஸ்ரீரமணர். இப்படித் தன்னுள் தானடங்கி வாழ்ந்த இந்த கருணை வள்ளல் அண்ணாமலையார்மீது பாடிய 'அருணாசல அக்ஷர மணிமாலை' என்ற பாடல் மிகவும் அற்புதமானது. மகிமை மிகுந்தது.

எந்தவித பற்றுமின்றி பரமஞானியாக வாழ்ந்த ஸ்ரீரமணர் 14-4-1950-ல் முக்தியடைந்தார். திருவண்ணா மலையில் 'ரமணாஸ்ரமம்' என்ற அவருடைய ஆசிரமம் இன்றும் சிறப்புடன் விளங்குகிறது. அந்த புண்ணிய புருஷரை- 'பகவான்' என்று அழைக்கப்படும் அந்த ஞானியை வழிபட்டு நற்பேறு பெறுவோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதி வடிவானவன் ஆடும் ஒலி கேட்போமா?


நடராஜர்

⌘ எம். ரோகிணி

சைவர்களுக்கு கோவில் என்றாலே அது சிதம்பரம்தான். அதேபோல் வைணவர்களுக்கு கோவில் என்றால் திருவரங்கம். இந்த இரு தெய்வங்களுமே தமிழகத்தின் கண்களாக இருந்து காப்பவை.

தில்லை திருச்சிற்றம்பலத்தில் காலமெல்லாம் ஆடிக்கொண்டே இருக்கும் தெய்வம் நடராஜப் பெருமான். பண்டைத் தமிழர் ஆட்டத்தை பொதுவாக கூத்து என்றனர். எனவே ஆடும் தெய்வத்தை 'கூத்தபிரான்' என்றனர். இறைவனின் இந்த ஆட்டம் பொழுதுபோக்குக் களியாட்டமல்ல! அவருடைய இந்த ஆட்டம்தான் அண்ட சராசரங்களிலுமுள்ள அனைத்து உயிர்களின் இயக்கத்துக்கும் அடையாளம். அவரது ஆட்டம் நின்றுபோனால் இயக்கம் நின்றுபோகும்!

இறைவன் ஆடுவது அம்பலத்தில். அதாவது ஆகாயவெளியில் ஆடுகிறார்! ஆகாயத்தலம் சிதம்பரம். ஆகாயம் என்பது பேரம்பலம். தில்லை திருத்தலத்தில் அதுவே திருச்சிற்றம் பலம் என்னும் நடன சபையாக (அரங்கம்) குறிப்பிடப்படுகிறது. பொன் வேய்ந்த கூரை. அதனால் பொன்னம்பலம். அதற்கேற்ப இறைவனுக்கும் 'சிற்றம்பலவாணன்', 'பொன்னம் பலவாணன்' எனும் திருநாமங்கள்.

தில்லை நடராஜப்பெருமானுக்கு ஆண்டுக்கு ஆறுமுறை சிறப்பு அபிஷேகம் நடைபெறும். அதில் மார்கழியில் (திருவாதிரை நாளில்) நடைபெறும் விழாவை ஆருத்ரா தரிசனம் என்பர். முதல் நாள் இரவு அபிஷேகம்; மறுநாள் இறைக்காட்சி. இவ்விழாவையொட்டி பத்துநாள் தேர்த்திருவிழா நடக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி மாதத்தில் நடைபெறுவதை ஆனித் திருமஞ்சனம் என்பார்கள். இதுவும் பத்து நாள் தேர்த்திருவிழா. நட்சத்திரங்களில் இரண்டுமட்டும் திரு எனும் அடைமொழி பெற்றவை. ஒன்று திருவாதிரை; இது சிவனுக்குரியது. மற்றொன்று திருவோணம்; இது திருமாலுக்குரியது. மார்கழியில் திருவாதிரை நாளில் இறை தரிசனம் காண்பது பெரும் பாக்கியமாகும்.

பொதுவாக படைத்தலுக்கு பிரம்மன் என்றும்; காத்தலுக்கு விஷ்ணு என்றும்; சம்ஹாரத்திற்கு (அழித்தலுக்கு) சிவன் என்றும் கூறுவது மரபு. அழித்தல் தொழில் புரிவதால் சிவனை உக்ரதெய்வமென்று எண்ணி விடக்கூடாது. திரிபுரங்களை அவர் சிறு புன்னகையாலல்லவா அழித்தார்! சிவனை ஆசுதோஷி என்பார்கள். அவருக்கு சிறிதளவு வில்வதள பூஜை செய்தால்கூட எளிதில் மகிழ்ந்திடுவார். சிவராத்திரி இரவில் தன்னையறியாமல் வில்வத்தழைகளை அவர்மேல் போட்ட குரங்குக்கு பூவுலகில் சோழப் பேரரசனாகும் அருள்புரிந்தார் எம்பெருமான்.

சகல ஜீவராசிகளின் பாவங்களையெல்லாம் தான் ஏற்றுக்கொண்டு உக்ரரூபியாகத் தோன்றுகிறார். அதனால் அவருக்கு அபிஷேகம் அவசியமாகிறது. அபிஷேகத்தால் மனம்குளிர்ந்து ஆனந்தத் தாண்டவம் ஆடு கிறார். வில்வம் குளிர்ச்சியுடைய மூலிகை. எனவே வில்வார்ச்சனையும் அவரைக் குளிர்விக்கும். சிவபெருமான் செய்யும் சம்ஹாரம் மக்களின் பாவ சம்ஹாரமேயாகும். அடியார்களுக்காக தன்னையே தரும் தியாகி அவர். ஆகவே அவருக்கு திருவாரூரில் தியாகேசர் என்றே திருநாமம்.

'ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே' என்கிறார் மணிவாசகர். இறைவன் ஜோதிவடிவான வர். அதேசமயம் ஒலிவடிவானவர். அவரது கையிலுள்ள டமருகம் (சிறு உடுக்கை) ஓங்கார ஒலி எழுப்பும். ஆடும் ஆட்டத்தின்போது பாதங்கள் பூமியில் படுவதிலும் ஒலியெழும். பொதுவாக வலது பாதம் ஊன்றி இடது பாதம் தூக்கியாடுவார். தூக்கிய திருவடி 'குஞ்சிதபாதம்' எனப்படும்.

ஸ்ரீராமகிருஷ்ணானந்த சரஸ்வதி சுவாமிகள் நடராஜரின் பாத ஒலிகளை விளக்கிக் கூறியுள்ளார். இடது பாதத்தை தரையில் வைக்கும்போது 'தத்' என்ற ஒலி. வலது பாதத்தை வைக்கும்போது 'தரிகிட' என்ற ஒலி. இவ்வாறு இருபாதங்களையும் மாற்றி ஆடும்போது 'தத் தரிகிட, தத் தரிகிட' என்ற தொடர் ஒலியெழும்.

(நடனப் பயிற்சியளிப்பவர்கள் இரு உலோகக் கட்டைகளைத் தட்டி மேற்சொன்ன ஒலிகளை உச்சரித்து கற்பிப்பதைக் காணலாம்.)

இடது பாதத்தை முன்னோக்கி வைக்கும்போது 'தாம்' என்ற ஒலியும்; வலது பாதத்தை பின்நோக்கி வைக்கும்போது 'தீம்' என்ற ஒலியும் தோன்றும். இப்படி முன்னும் பின்னும் வைக்கும்போது 'தாம், தீம், தாம், தீம்' என்று ஒலிக்கும். மற்றும் தாம், தோம், தீம் என்று தொடர்ந்தாடும் ஒலியும் எழும்.

'தத்' என்ற ஒலி அசைவற்ற நிலையைக் குறிப்பது. 'தாம்' என்ற ஒலி பிரபஞ்சத்தின் வடிவத்தைக் குறிப்பது. 'தோம்' என்ற ஒலி சகல ஜீவராசிகளின் பிரணவத்தின் தத்துவமாகவும்; 'தீம்' என்ற ஒலி சகலவித குணாதிசயங்களின் நிலையாகவும் விளங்குகிறது.

பஞ்சபூதங்களின் காரணனாகவும்; சத்வ, ரஜஸ், தமோ குணங்களின் காரணனாகவும்; பிரபஞ்சத்தின் சகலவித ஜீவராசிகளின் உயிர்க்கார்ண சக்தியுடனும் சர்வேஸ்வரன் நடராஜ தத்துவத்தில் காட்சியளிக்கிறார்.

சிவபெருமான் நடராஜமூர்த்தியாக தில்லையில் ஆடியது ஆனந்தத் தாண்டவம் எனப்படும். ஆகவே நடராஜ மூர்த்தியே ஆனந்த வடிவம்! இதுதவிர ருத்ர தாண்டவம், சந்தியா தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் (ஒரு காலை உயரே தூக்கி ஆடியது) என பல தாண்டவங்கள் உண்டு. அனைத்திலும் மேற்சொன்ன ஒலிக்குறிப்புகள் பொருந்துவன வாகும்.

சிவபெருமானது ஆடல் உலகை உய்விப்பது. அனைத்துயிர்களுக்கும் ஆனந்தம் தருவது. நம் இதயத்தில் நின்றாடும் அக் கருணாமூர்த்தியைப் பணிவோம். ■


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தாங்கள் ஜென்ம லாபங்கள் பெறவும், தங்கள் இல்லங்களில் அமைதியும் ஆனந்தமும் நிலவ வேண்டியும், புது வருடம் மற்றும்

# மாட்டுப்பொங்கல் (16-1-2015) அன்று கோதானம் செய்து கோடி நன்மை பெறுவீர்

கோதானம் செய்தால்... நிலம், வீடு, வாகன வசதி, பொன், பொருள், புகழ், கல்வி, நிகரற்ற செல்வம் உண்டாகும். நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, கிரஹங்களின் பாதிப்பு, அஷ்டமச் சனி போன்றவை விலகி, மனசாந்தி உண்டாகும். ஜாதக ரீதியான தோஷம், பித்ரு, தலைமுறை தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், களத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நவகிரஹ தோஷம், நாக தோஷம், கால ஸர்ப்ப தோஷம், பிரம்மஹத்தி தோஷம், பாப தோஷம், ஆபிசார தோஷம் விலகி, திருமணம் கைகூட, தீர்க்க சுமங்கலி, புத்திர பாக்கியம் பெற, மாமியார், நாத்தனாரிடம் நன்மதிப்பைப் பெற, பிரிந்த குடும்பம் மீண்டும் ஒன்று சேர, சகல செல்வங்களும் வரங்களும் கிடைத்து, நினைத்த காரியம் கை கூடி, பதினாறு செல்வங்கள் பெற்று, ஸ்ரீ மஹாலெக்ஷ்மி பேரருளுடன் தாங்கள் மகிழ்ச்சியாக வாழ, கோதானம் செய்ய அன்புடன் அழைக்கிறோம்


பசுமடத்தில் நடைபெறும் கோதானம்

புது வருடம், மாட்டு பொங்கல் மற்றும் தாங்கள் விரும்பும் விசேஷ நாட்களில் தங்கள் சார்பாக நாட்டுப் பசுவும் கன்றும்-கோதானம் செய்ய ரூ. 12,000 அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான கோமாதா விக்ரஹமும், வெள்ளியிலான சிவன்-பார்வதி விளக்கும், பித்தளையிலான மதுரா கிருஷ்ணன் விக்ரஹமும் மற்றும் பிரசாதங்களும் அனுப்பி வைக்கப்படும். பணம் அனுப்பும் போது யார் பெயருக்கு கோதானம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் விவரங்களை குறிப்பிடவும்

உடல் வளம் பெற, மனம் வளம் பெற, உயிராற்றல் பெருகிட, தீய அதிர்வை எடுத்திட, இறையாற்றல் பெற்றிட, இனிய வாழ்க்கை வாழ்ந்திட, துணை புரிவது வலம்புரி சங்கே!

## குடும்ப சந்தோஷத்தின் திறவுகோளான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும்.

## மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கித் தருவதும் வலம்புரி சங்கே!

வாழ்க்கையில் நல்ல துணையை பெறவும், மனதில் தைரியம் ஏற்படவும், மாணவர்களின் கல்வியறிவு பெருகவும், குழந்தைகளுக்கு அடிக்கடி வரும் நோய்களை தடுக்கவும், இல்லத்தில் வாஸ்து குறைகள் நீங்கவும், இழந்த செல்வாக்கை மீண்டும் பெறவும், வியாபாரத்தில் குபேர தனவசியம் பெறவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கும் சக்தி பெறவும், ரியல் எஸ்டேட் மற்றும் பங்கு வியாபாரத்தில் யோகம் பெறவும், கடன் தொல்லை தீரவும், குடிப்பழக்கம், தீயபழக்கம் மற்றும் அமானுஷ்ய தீயசக்திகளை நெருங்க விடாமல் தடுக்கவும், கண் திருஷ்டிகள் விலகவும், அதிர்ஷ்டம் நிலைக்கவும், மனதை ஒரு நிலைப்படுத்தி சர்வ காரிய சித்தி பெறவும், ராஜயோக பலன்களைப் பெறவும் வலம்புரி சங்கை வழிபடுவீர். **பசுமடத்தில் உள்ள வயதான ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து சம்ரக்ஷனைக்காக ரூ. 6,600 அனுப்புவோருக்கு அபிஷேகம் செய்த ஒரிஜினல் வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்.** பணம் அனுப்பும் போது யார் பெயருக்கு பிரார்த்தனை செய்ய விரும்புகிறீர்களோ அவரின் விவரங்களை குறிப்பிடவும்

பசுக்களைப் பாதுகாக்க, தங்களால் முடிந்த நன்கொடைகளை தீவனம், பராமரிப்பு மற்றும் மருத்துவ செலவிற்கு வழங்கி, கோமாதாவின் அருளைப் பெற வேண்டுகிறோம். பசுமடத்தை பார்வையிட்ட பின்னும் உதவலாம். நன்கொடையாளர்களுக்கு பூஜிக்கப்பட்ட பொருட்களும் பிரசாதங்களும் பொங்கலுக்கு பிறகு அனுப்பி வைக்கப்படும்



பசுவை பராமரிக்கவும், கோதானத்திற்கும், வலம்புரி சங்கிற்கும் நன்கொடையை **CHEQUE / DD / MO** ஆக **SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI** என்ற பெயரில், கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பும் போது தங்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண்ணை குறிப்பிட வேண்டுகிறோம்

# பசுமடம்

**RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA**

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

வயதான, ஆதரவற்ற, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு, சென்னை–77

**Ph : 3299 9888 Cell : 8754 555 555**



இதுவரை முக்திநாத்தில் யாரும் செய்திடாத ஸ்ரீ ராமானுஜர் ஜெயந்தி விழாவில் எம்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகமும் வழிபாடும் ஸ்வாமிஜி தலைமையில் நடைபெறும். மிகப்பெரிய அளவில் நடத்தப்படும் இந்த விழாவில் அடியார்கள் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருள் பெற அன்புடன் அழைக்கிறோம்



ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான்

## பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா

அவர்களின் தலைமையில் சுதர்சன ஹோமம்-பக்தி உபன்யாசத்துடன் கூடிய முழுமையான

# முக்திநாத் யாத்திரை 22-04-2015



காட்மண்ட்டிலிருந்து சூப்பர் டீலக்ஸ் ஏசி பஸ் மூலம் பயணித்து வழியில் மனக்கமனா தேவி தரிசனம் செய்து, போக்ரா அடைந்து, விமானம் மூலம் ஜோம்சோம் வழியாக முக்திநாத் சென்று கண்டகி நதி சாளக்கிராம திவ்ய தரிசனம் செய்து, 108 தீர்த்தங்களில் புனித நீராடுதல். அதன்பின் பாவ, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, சுதர்சன ஹோமம் முடித்து ஒரு லட்சம் தீபம் ஏற்றி வழிபாடு செய்தல். மீண்டும் போக்ரா அடைந்து அன்னபூர்ணா சூரிய தரிசனம் முடித்து, பின் அங்குள்ள டேவிஸ்பால்ஸ், பேவா ஏரி, பிந்துவாசினி, ஐந்து லிங்க மூர்த்தி, வராஹி கோயில் தரிசனம் முடித்த பின் காட்மண்டு அடைந்து பசுபதி நாதருக்கு அபிஷேகம் செய்து, புத்தநீல்கண்ட், குக்கேஸ்வரி சக்திபீடம் தரிசனம் செய்து வருவதற்கு 6 நாட்கள் ஆகும்

யாத்திரை முடிந்தவுடன் 'வைணவமணி' சான்றிதழும் கண்டகி நதியில் இருந்து நேரடியாக எடுக்கப்பட்ட சாளக்கிராமமும் ஸ்வாமிஜியால் தங்களுக்கு வழங்கப்படும்

விமானம் மூலம் எவரெஸ்ட்டை சுற்றி பார்க்க சிறப்பு ஏற்பாடு

முக்திநாத்தில் 6 நாட்கள் இருந்தால் மட்டுமே, முழுமையான தரிசனம் செய்வதற்கான Acclimatization சக்தியையும் ஆற்றலையும் நாம் பெற முடியும் என்பதால் பயண நாட்களை குறைக்காமல் அழைத்துச் செல்வது நாங்கள் மட்டுமே

சென்னையிலிருந்து காட்மண்டு சென்று வர விமானக் கட்டணம் மற்றும் ரயில் கட்டணம் தனி. அவரவர் வசதிக்கேற்ப பயண ஏற்பாடுகள் செய்து தருகிறோம் விமான பயணத்திற்கு **VOTER ID** அல்லது **PASSPORT** அவசியம். பயணிகள் முன்பதிவு செய்து ரயில் மற்றும் விமான டிக்கெட்டை உறுதி செய்து கொள்ளவும்

**இதர முக்திநாத் யாத்திரை தேதிகள் :** ஏப்ரல்-28, மே-10,28, ஜீன்-9, 22, ஜீலை-4, 26, ஆகஸ்ட்-7, 24, செப்டம்பர்-5, 18, 30, அக்டோபர்-14, 31

**சலுகை கட்டணம் உட்பட ரூ. 21,900/- மட்டுமே**

அடியார்கள் குழுவாக வரும் பட்சத்தில் கட்டணச் சலுகையோடு தாங்கள் விரும்பும் தேதியில் ஏற்பாடு செய்து தரப்படும். இன்சூரன்ஸ் வசதி உண்டு

கடந்த 17 வருடங்களாக, முக்திநாத் யாத்திரையை யாரும் தர இயலாத நவீன வசதிகளுடன், குறைந்த கட்டணத்தில் தங்கள் உடல்நிலை, சூழ்நிலை அறிந்து மேற்கொள்கிறோம். எங்களின் பயண கட்டணத்தை மற்ற நிறுவனங்களுடன் ஒப்பிட்டு பாருங்கள். முன்பணத் தொகையாக ரூ. 5,000 மட்டுமே பெறுகிறோம். நவீன வசதிகளை குறைக்காமல், பயண தேதிகளில் மாற்றம் இல்லாமல், நிர்ணயித்த கட்டணத்தை மட்டுமே பெற்று நிறைந்த சேவை புரிகிறோம்

## கைலாஷ் மானஸரோவர் யாத்திரை 2015

- ஏப்ரல் 28 ● மே 28 ● ஜீன் 22 ● ஜீலை 26 ● ஆகஸ்ட் 24 ● செப்.18
- திருக்கயிலாய நடை திறந்தவுடன் சித்ரா பௌர்ணமி அன்று சிறப்பு தரிசனம்
- புத்த பூர்ணிமா தரிசனம் ● கயிலாயத்தில் 14 நாட்கள் முழுமையான தரிசனம்

தமிழக அரசின் மானியத் தொகை
முக்திநாத் யாத்திரைக்கு ரூ. 10,000
கைலாஷ் யாத்திரைக்கு ரூ. 40,000
எங்கள் குழுவில் வரும் அடியார்களுக்கு கிடைக்க ஆலோசனை வழங்கப்படும்

# ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்

SPECIALIST IN KAILASH - MANASAROVAR & MUKTHINATH YATRA

63, NADU STREET, MYLAPORE, CHENNAI-4 | B.O.: BANGALORE. Ph:080-23313166/67

Cell : 97911 11979, 9444 676757 | email : sapyservice@gmail.com | www.annapooraniyatra.com

Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சம் போக்கி அபயம் தரும் சிம்மாச்சல நரசிம்மர்!

⌘ மகேஷ் வர்மா

சிம்மாச்சல நரசிம்மர்





சிம்மாச்சல ஆலயம்

இந்தியாவில் பிரசித்திபெற்ற நரசிம்மர் ஆலயங்களில் ஒன்று சிம்மாச்சலம். ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்திலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவில், கடல்மட்டத்திலிருந்து சுமார் 800 அடி உயரமுள்ள குன்றின்மீது இவ்வாலயம் அமைந்துள்ளது. அடிவாரத்திலிருந்து கோவிலை அடைய ஐந்து கிலோமீட்டர் பயணிக்கவேண்டும். நடந்தும் செல்லலாம். பஸ் உள்ளிட்ட வாகன வசதிகளும் உள்ளன.

சுற்றிலும் மலைகள் சூழக் காணப்படும் சிம்மாச்சலம், இயற்கை எழிலோடு விளங்குகிறது. பலவண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. மா, முந்திரி, அன்னாசி போன்ற பழ மரங்கள் ஏராளமாக உள்ளன.

மிகப் பழமைவாய்ந்த இவ்வாலயம் எப்போது அமைக்கப்பட்டது என்று அறியமுடியவில்லை. புராணகாலத் தொடர்புடையது. ஹிரண்யகசிபு தன்னையே கடவுளாக வணங்குமாறு அனைவரையும் நிர்பந்தித்தான். ஆனால் அவன் மகன் பிரகலாதனோ 'ஸ்ரீஹரியே தெய்வம்' என்பதில் உறுதியாக இருந்தான். அதனால் சினம் கொண்ட ஹிரண்யகசிபு பிரகலாதனை பலவிதங்களிலும் கொடுமைப்படுத்தினான். அனைத்திலும் இறையருளால் பிரகலாதன் மீண்டுவர, அவனை கடலில் வீசிக் கொல்லுமாறு உத்தரவிட்டான் ஹிரண்யகசிபு.

அதன்படி அவனது படைவீரர்கள் பிரகலாதனை கடலில் போட்டு, மேலே வந்துவிடாமலிருக்க ஒரு குன்றைப் பெயர்த்து அவன்மேல் வைத்தனர். மகாவிஷ்ணு அந்தக் குன்றின்மீது காட்சிதந்து, அதைத் தூக்கிவைத்துவிட்டு பிரகலாதனைக் காப்பாற்றினார். அந்தக் குன்றுதான் சிம்மாச்சலம். ஹிரண்யவதம் நடந்தபின் பிரகலாதன் மகாவிஷ்ணு காட்சிதந்த அந்தக் குன்றின்மீது நரசிம்மருக்கு கோவில் அமைத்தான் என்பது வரலாறு.

கலிங்க மன்னனை போரில் வென்ற குலோத்துங்க சோழன் கி.பி. 1098, 1099-ஆம் ஆண்டுகளில் இவ்வாலயத்தை நிர்வகித்தான் என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

மூன்றாம் கங்க மன்னன் இப்பகுதியை கி.பி. 1137 முதல் 1156 வரை ஆட்சி செய்தான். அவன் மனைவி இத்தல நரசிம்மருக்கு தங்கக் கவசம் அணிவித்தாள்.

கிழக்கு கங்கைப் பகுதியை ஆட்சிசெய்த நரசிம்மன் என்ற மன்னன் இவ்வாலயத்துக்கு திருப்பணி செய்தான் என்ற குறிப்பும் உள்ளது.



கிருஷ்ணதேவராயரின் மனைவி முத்துமாலையை காணிக்கையாகச் செலுத்தியுள்ளார்.

விஜயநகர மன்னர் 11,000 ஏக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியில் தரிசிக்க

# மாலவனின் திருக்கோவில்கள்!

### 23. பள்ளிகொண்டா



பிரம்மாவுடன் கொண்ட கோபத்தால் சரஸ்வதி தேவியானவள் அவரது யாகத்தைக் கலைக்க நதி வடிவில் பிரவாகமெடுத்து வந்தாள். நான்முகனின் வேண்டுகோளின்படி, திருமால் பாலாற்றுக்குக் குறுக்கே பள்ளிகொண்டார். இத்தலமே பள்ளிகொண்டா என்ற பெயருடன் வேலூருக்கு அருகிலுள்ளது. ஸ்ரீதேவி இடது கரத்தையும், பூதேவி திருவடியையும் தாங்க, ஆதிசேஷன் மீது பெரிய திருவுருவத்துடன் பள்ளிகொண்டுள்ள பெருமாள் கிரீடம், குண்டலம், திருமண் காப்பு தரித்து அற்புத திருக்கோலம் காட்டுகிறார். பெருமாளின் திருமேனி சாளக்கிராமத்தாலானது. பெருமாளுக்கு உதவியாக வைகுண்டத்திலிருந்து வந்த ஆதிசேஷன், இத்தலத்தில்தான் முதன்முறையாக அவரை தன்னில் சயனிக்க வைத்தது என்கிறது தலபுராணம். பெரியாழ்வாரின் 'உடுத்துக் களைந்த' எனத் தொடங்கும் பாசுரத்தில் குறிப்பிடப்பட்ட தலம். இத்தலத்தில் ஓரிரவு தங்கினால் மோட்சம், கல்வி, செல்வம், தேக ஆரோக்கியம் ஆகியவற்றை நல்கும் பெருமாள் இவர்.

நிலத்தை இவ்வாலயத்துக்கு நிவந்தமாக வழங்கி, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு இவ்வாலயத்தைப் பராமரிக்க ஏற்பாடுகள் செய்தார்.

இப்படி பலரும் இவ்வாலயத்தைப் பேணிக் காத்துள்ளனர்.

இவ்வாலயத்துக்குச் செல்லும் வழியில் இரண்டு குளங்கள் உள்ளன. பக்தர்கள் அவற்றில் நீராடிவிட்டு இறைவனை வணங்கச் செல்கின்றனர்.

கருவறையில் ஸ்ரீநரசிம்மர் சிங்க முகத்துடனும் மனித உடலுடனும் காட்சி தருகிறார். தங்கக் கவசம் அணிவிக்கப்பட்ட அவரது திருக்கோலம் பேரழகுடன் காணப்படுகிறது. லட்சுமி சந்நிதியும் உள்ளது.

இவ்வாலயத்தில் ஒரு தூண் உள்ளது. அதைப் பிடித்துக்கொண்டு நாம் என்ன வேண்டிக்கொள்கிறோமோ, அவை நிறைவேறுகின்றன என்று கூறுகிறார்கள். இதற்காக வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு ஆலய நிர்வாகத்தினர் ஒரு சிவப்பு நிற பட்டுத் துணியை இடுப்பில் கட்டிவிடுகிறார்கள். அந்தத் துணியோடு சென்றுதான் வேண்டிக் கொள்ளவேண்டும். அந்தத் தூணுக்குக் கீழே சந்தான கோபால யந்திரம் பதிக்கப்பட்டுள்ளது. அங்கே வேண்டிக்கொண்டு தங்களால் இயன்றதை தானம் செய்தால், அவர்களுக்கு பிள்ளைப்பேறு உறுதி என்கிறார்கள்.

பலவகை நோய்கள், மனநோய், பேய், பில்லி, சூன்யம் போன்ற ஏவல்கள் நீங்க பல்லாயிரம் பக்தர்கள் இங்கேவந்து வழிபடுகிறார்கள்.

ஜாதகத்தில் லக்னாதிபதி அஸ்தமனமாக இருப்பவர்கள் இங்கு சென்று வழிபட்டால் துன்பங்கள் தீரும். ஒருவர் ஜாதகத்தில் சந்திரனுக்கு 8-ல் சனி இருந்தால், அவருக்கு பிறந்தது முதல் 14 வயதுவரை உடல்நலம் அடிக்கடி பாதிக்கும். மனதில் இனம்புரியா பய உணர்வு தோன்றும். அப்படிப்பட்டவர்கள் கண்டிப்பாக இந்த ஆலயத்துக்குச் சென்று வழிபடவேண்டும்.

சென்னையிலிருந்து கொல்கத்தா செல்லும் ரயில் வழியில் 800 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது விசாகப்பட்டினம். அங்கிருந்து சிம்மாச்சலத்துக்கு போக்குவரத்து வசதிகள் உள்ளன. ஆலயம் மிகத் தூய்மையாகப் பராமரிக்கப்படுவது சிறப்பு. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு மாயை!

ஒருசமயம் ஸ்வேதத்வீபத்தில் சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மகாவிஷ்ணுவைக் கண்டு வணங்கிய நாரத முனிவர், "பகவானே! தங்களுடைய மாயை எப்படிப்பட்டது? அதன் வடிவத்தை எனக்குக் காட்டியருள வேண்டும்" என்று கேட்டார். அதற்கு பகவான், "என் மாயையை அறிவதால் உனக்கென்ன பயன்? என்றாலும் நீ என் உண்மையான பக்தன். அதனால் உனக்குக் காட்டுகிறேன். என்னுடன் வா" என்று கூறி, ஸ்வேதத்வீபத்தை விட்டுப் புறப்பட்ட மகாவிஷ்ணு, தன் ரூபத்தை ஒரு வயோதிகராக மாற்றிக்கொண்டார். அவருக்கு யக்ஞசர்மா என்று பெயர்.

இருவரும் வான்வழியே புறப்பட்டு ஜம்பூத்வீபத்தை அடைந்து, அங்குள்ள கன்யா குப்ஜம் என்ற நாட்டிற்கு வந்தனர். வழியில் குளமொன்று எதிர்ப்பட, "இதில் நாம் இருவரும் நீராடவேண்டும். முதலில் நான் நீராடிவிட்டு வந்துவிடுகிறேன். பிறகு நீ நீராடு" என்று கூறிய வயோதிகரான மகாவிஷ்ணு குளத்திலிறங்கி நீராடினார். பின்னர் நாரதரை நீராடச் சொன்னார். குளத்திலிறங்கி நீராடிய நாரதர் கரையேறும்போது ஒரு அழகிய இளம்பெண்ணாக மாறியிருந்தார். பழைய நினைவுகள் எதுவுமில்லை. மகாவிஷ்ணு அங்கிருந்து மறைந்துவிட்டார்.

அதே சமயத்தில் கன்னோஜி நாட்டு அரசன் தாளத்வஜன் என்பவன் தன் படைகளுடன் அவ் வழியே வந்தான். குளக்கரையில் அழகான பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✠ எம்.கே. இராதாகிருஷ்ணன்

ணொருத்தி தனியாக நின்றிருப்பதைப் பார்த்த அவன், "பெண்ணே, நீ யார்?" என்று கேட்க, "நான் யாருமற்றவள். என்னைக் காப்பாற்ற ஒருவருமில்லை" என்றாள்.

உடனே இளவரசன் அவளைத் தன் நாட்டுக்கு அழைத்துச்சென்று, முறைப்படி திருமணம் செய்துகொண்டான். அவள் பட்டத்து ராணியானாள்.

பதின்மூன்று வருடங்களுக்குப் பிறகு ராணி கர்ப்பவதியாகி ஒரு சுரைக்காயைப் பெற்றாள். சில நாட்கள் கழித்து அந்த சுரைக்காயிலிருந்து மிகச் சிறிய- ஆனால் பலசாலிகளான ஐம்பது ஆண் குழந்தைகள் வெளிவந்தனர். அவர்களை ஒரு பெரிய நெய் அண்டாவில் போட்டு மூடிவைத்தாள் ராணி. சிலகாலம் கழித்து அந்த ஐம்பது பேரும் பெரியவர்களாகி வெளியே வந்தனர். அவர்களுக்குத் திருமணமாகி ஏராளமான குழந்தைகள் பிறந்தனர். அவர்களும் பெரியவர்களாக வளர்ந்தனர். அவர்களுக்கும் திருமணமாகி, அநேக குழந்தைகள் பிறந்து வளர்ந்து பெரியவர்களாயினர். ராணியின் குடும்பம் கணக்கிட முடியாதபடி வளர்ந்திருந்தது. ஆனால் அவர்களுக்குள் ஒற்றுமையில்லை. நாட்டையாள ஆசைப்பட்டு ஒருவரையொருவர் அடித்துக்கொண்டனர். இறுதியில் அனைவருமே இறந்துபோயினர்.

தன் பிள்ளைகளும் பேரன்களும் இப்படி அடித்துக்கொண்டு இறந்து போனதைக் கண்ட ராணி மிகவும் துயருற்றாள். அரசன் தாளத்வஜனும் பெரும் சோகத்தில் ஆழ்ந்திருந்தான்.

அந்த சமயத்தில் பகவான் விஷ்ணு பழைய வயோதிகராக உருவம்கொண்டு அரண்மனைக்கு வந்தார். மன்னனையும் ராணியையும் பார்த்து, "நடந்த சம்பவங்கள் யாவும் விஷ்ணு மாயை. வீணாக நீங்கள் கவலைப்பட வேண்டாம். உலகிலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் இந்த கதிதான் ஏற்படுகிறது. அவரவர் செய்த நல்வினை- தீவினைகளை அவரவர் அனுபவித்துதான் ஆக வேண்டும். வருவது நல்லதா கெட்டதா என யாராலும் அறியமுடியாது. மீண்டும் மீண்டும் பிறந்து ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வதும் மடிவதும் உலக நியதி. மகிழ்ச்சி ஏற்பட்டால் கூத்தாடுகிறார்கள். துன்பம் வந்தால் புலம்புகிறார்கள். இதுதான் உலக வழக்கம்" என்று கூறி ராணியின் கையைப் பிடித்தார். உடனே ராணி நாரதராகவும், வயோதிக பிராமணர் மகாவிஷ்ணுவாகவும் மாறிக் காட்சியளித்தனர்.

மகாவிஷ்ணு நாரதரைப் பார்த்து, ''மாண்டவர்கள் உன்னுடைய பிள்ளைகள் - பேரன்கள் - கொள்ளுப் பேரன்களாகிறார்கள். அவர்களுக்கான கிரியைகளை நீ செய்யத்தான் வேண்டும்" என்றார். அப்படியே நாரதரும் செய்தார்.

பகவான் விஷ்ணு நாரதரைப் பார்த்து, "என் மாயையைப் பார்த்து விட்டீர். நான் மீண்டும் ஸ்வேத த்வீபம் செல்கிறேன்" என்று கூறி மறைந்தார். நாரதரும் பகவானின் மாயையை எண்ணி வியந்தபடி வான்வழி தேச சஞ்சாரம் புறப்பட்டார்.

ஒருசமயம் தர்மபுத்திரர் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்து, 'விஷ்ணுமாயை எப்படிப்பட்டது?' என்று கேட்க, அதற்கு இந்தக் கதையைச் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணர். ■

**உலகிலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் இந்த கதிதான் ஏற்படுகிறது. அவரவர் செய்த நல்வினை- தீவினைகளை அவரவர் அனுபவித்துதான் ஆக வேண்டும். வருவது நல்லதா கெட்டதா என யாராலும் அறியமுடியாது.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரகத நடராஜர் (உத்தரகோசமங்கை)



பாண்டிய நாட்டுப் பழம்பெரும் தலங்களில் ஒன்று திருஉத்தரகோச மங்கை. பார்வதிக்கு சிவபெருமான் பிரணவ மந்திரத்தை உபதேசித்த இடம். சிவத் தலங்களிலேயே பாடல்பெற்ற முதல் க்ஷேத்திரம் உத்தரகோசமங்கை.

சிவன் உண்பதும் உறங்குவதும் உத்தரகோச மங்கை தலத்தில்தான் என்பார்கள். இத்தலத்தில்தான், 'சிக்கெனப் பிடித்தேன்; எங்கு எழுந்தருளுவது இனியே' என்று சிவபெருமானிடம் மாணிக்கவாசகர் கேட்கிறார். மற்றும் நீத்தல் விண்ணப்பம் என்ற பாடலை மனமுருகிப் பாடியுள்ளார் மாணிக்கவாசகர். எல்லா சிவாலயங்களிலும் அர்த்தஜாம பூஜையில் பாடக்கூடிய ஊஞ்சல் பாடல் (திருப்பொன்னூஞ்சல்) உத்தரகோசமங்கை பாடல்தான்.

மங்களநாதர் பார்வை பட்டால் அனைத்துப் பாவங்களும் நம்மை விட்டோடும்.

**⌘ எஸ்.ஆர்.எஸ்.ரெங்கராஜன்**

உலகைப் படைத்து அதில் பெரும் மாயையைப் பரப்பிய நான்முகனாகிய பிரம்மனுக்கு ஒருசமயம் சொல்லொணாக் கோபம் தன்னையறியாமல் சூழ்ந்து உலகத்து உயிர்களை ஆட்டுவித்தது. தன்னுள் புதிதாக உருவான ராட்சத குணத்தையழிக்க பிரம்மா பலவாறு முயன்றார்.

இந்தத் தீவினையை அகற்ற தவத்தை நாடினார். தகுந்த இடத்தில் அமர்ந்து தவம்செய்தால் ஊழ்வினை அகலு மென்று எண்ணி உத்தரகோசமங்கை வந்தடைந்தார். அங்கே அக்னி தீர்த்தக் கரையில் கடும் தியானத்தில் ஈடுபட்டார்.

கோபமெனும் பாவத்திலிருந்து விமோசனம் கிடைத்தது. பிரம்மனுக்கு சிவன் இன்னருள் புரிந்த இடம் இதுவென்பதால், உத்தரகோசமங்கை பிரம்மபுரம் என்றும் அழைக்கப்படுகிறது.

### ஆலய அமைப்பு


முதலில் நம்மை வரவேற்பது ஆயிரம் வருடங்களைக் கடந்து நிற்கும் இலந்தை மரமும், அங்கு வீற்றிருக்கும் சகஸ்ரலிங் கமும்தான். ஒரே லிங்கத்தில் ஆயிரம் சிறிய லிங்கங்கள் பொதிந்திருப்பதுதான் சகஸ்ரலிங்கம். பதரி (இலந்தை) மரத்துடன் சிவபெருமான் வீற்றிருப்பதாலேயே இவ்விடத்துக்கு இலந்திகைப் பள்ளி என்றும், பத்ரிகா க்ஷேத்திரம் என்ற பெயரும் உண்டு. சகஸ்ரலிங்கத்தை வேத வியாசரும் புஜண்ட மகரிஷியும் பூஜை செய்ததாகக் கூறுவர்.

இலந்தை மரத்தின்கீழ் வேத வியாசரின் பாதரட்சையும், அவர் வணங்கி பூஜை செய்த வலம்புரி விநாயகரும் இத்தலத்தின் பழம்பெருமையை உணர்த்துகின்றன.

இந்த ஆலயத்துக்கு அருகில் அக்னி தீர்த்தக்கரை அருகே மரகத நடராஜர் காட்சியளிக்கிறார். ரத்தினசபாபதி, ஆதி சிதம்பரேசன் என்றழைக்கப்படும் ஐந்தரை அடி உயரம் கொண்ட இந்த மரகத நடராஜருக்கு வருடம் முழுவதும் சந்தனக் காப்பு இடப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு வருடமும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இம்மையில் நன்மைகள் தந்து மறுமையில் முக்தியளிக்கும் உத்தரகோசமங்கை!

மார்கழி மாத திருவாதிரையன்று சந்தனப்படி கலைந்து விசேஷ அபிஷேகம் நடைபெறும். அன்றைய தினத்தில் மட்டும் நடராஜரை மரகத மேனியாக பக்தர்கள் தரிசனம் செய்யலாம். காப்பு அகற்றிய தினம் அதிகாலை மீண்டும் சந்தனம் வைத்து அருணோதய காலத்தில் தரிசனம் நடைபெறும். அதை ஆருத்ரா தரிசனம் என்று கூறுவர். அதைக் காண கண்கோடி வேண்டும். 5-1-2015-ஆம் தேதி ஆருத்ரா தரிசனத்தை உத்தரகோசமங்கையில் காணுங்கள்.

மற்ற நாட்களில் மரகத நடராஜருக்கு அபிஷேகம் இல்லையென்பதால், அதற்கு மாற்றாக சிறிய ஸ்படிகம் மற்றும் மரகத லிங்கங்களுக்கு அபிஷேகம் செய்யப்படுகின்றன. இவற்றை தரிசித்தாலே பச்சை வண்ண நடராஜரை தரிசித்த பலனில் பாதி கிட்டிவிடும் என்பர்.

மூலஸ்தானத்தில் சுயம்புலிங்க மாகக் காட்சியளிக்கிறார் மங்கள நாதர். அவருக்குப் பக்கத்தில் தேவி மங்களநாயகி தனியாகக் காட்சி யளிக்கிறார். இவர்கள் இருவரையும் தரிசிப்பதற்குமுன், அங்கு வீற்றிருக்கும் பாண லிங்கத்தை தரிசித்தால் முழுமையான பிரார்த்தனைப் பலன் கிட்டும்.

திருமணம் கைகூடாதவர்கள் மரகத நடராஜருடன், சுவாமியையும் அம்பாளையும் தரிசித்து விமோசனம் பெறுகிறார்கள்.

இம்மையிலேயே நன்மை அனைத்தையும் நல்கி, மறுமையில் முக்தியைக் கொடுக்கும் தலமாக இது விளங்குகிறது. மாணிக்கவாசகருக்கு இங்கு தனிச்சந்நிதி உண்டு. இங்கு மாணிக்கவாசகர் சடையுடன் காணப்படுகிறார்.

இவ்வாலயத்தை தரிசிக்கும் பேறு அனைவருக்கும் கிட்டாது. தரிசிக்கவேண்டுமென்ற பாக்கியம் பெற்றவருக்கே கைகூடும். ஆருத்ரா தரிசன நாளில் மட்டும் இங்கு பக்தர்கள் கூட்டம் நிரம்பிவழியும். நிறைய திருமணங்கள் இவ்வாலயத்தில் நடைபெறுகின்றன.

ராமநாதபுரத்திலிருந்து 15 கிலோமீட்டர் தூரத்தில் உத்தரகோசமங்கை அமைந்துள்ளது. அடிக்கடி பேருந்து வசதியுண்டு.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ⌘ அர்ச்சனை

கார்த்திகை தீபத்துக்கு பொருத்தமாக 'அமுதமழை பொழியும் அண்ணாமலை' கட்டுரை, அடுத்து பிறக்கும் மார்கழிக்கு, 'மார்கழி ஆனந்தம் கீத கோவிந்தம்', அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு 'கோலம் பலகொண்டு குறையெல்லாம் போக்கும் செல்வன்' கட்டுரை, தொடரும் புத்தாண்டுக்கு காலண்டர் என முழுமையான ஆன்மிக விருந்து படைத்துவிட்டீர்கள்!

**-மல்லிகா அன்பழகன், சென்னை-78.**

சில வருடங்களுக்குமுன் வித்தியாசமான பதினாறு விநாயகர் படங்களை இலவசமாகத் தந்த 'ஓம்', இந்த வருடம் கல்வி, வீரம் செல்வம், அருளும்; நோய் நொடி, பயம் அணுகாமல் காக்கும் கடவுள்களின் படங்களோடு சிறப்புமிக்க காலண்டரைத் தந்துவிட்டீர்கள். கையில் வாங்கிப் பார்த்த கணமே பூஜையறையில் மாட்ட முடிவெடுத்துவிட்டேன். உங்கள் தொண்டு மகத்தானது.

**-சிம்மவாஹினி, வியாசர்பாடி.**

சென்னை காளிகாம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற 'பெருந்தேவி அன்னையர் பெருஞ்சாந்திப் பெருவேள்விப் பெருவிழா' பற்றிய தகவல்களும் படங்களும், விழாவில் கலந்துகொள்ள முடியாத பக்தர்களுக்கு கண்குளிர கண்டுகளித்த நிறைவை அளித்தன.

**-எஸ்.ஆர். ஹரிஹரன், சென்னை-109.**

'மொட்டை பிக்குகளிடம் சீப்பு விற்க முடியுமா? என்ற கேள்வி சிண்டைப் பிய்க்கவைக்கும் சமாச்சாரம்தான். எனினும் மூன்று மகன்களும் புத்த பிக்குகளிடம் சீப்பு விற்ற திறன் ஆன்மிகத்தையும் தன்னம்பிக்கையையும் ஒருசேர அளித்தது.

**-ஆர்.ஜி. பிரேமாபாலன், மணலிவிளை.**




அரிய பொக்கிஷம்!

'மார்கழியில் தரிசிக்க மாலவனின் திருக்கோவில்கள்' பெட்டிச்செய்திகள் தொகுப்பு ஏ-ஒன்.

**-ஏ.என். சுப்பிரமணியன், குடியாத்தம்.**

சிவாச்சாரியார், ஓதுவார், நாதஸ்வரக் கலைஞர்களை பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை தி.ஸா. சண்முக சிவாச்சாரியார் நயம்பட எடுத்துரைத்திருந்தார். அந்த நல்ல காலம் வரவேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**-வீ.பி.கே. மூர்த்தி, பாபநாசம்.**

2015- காலண்டர் இலவச இணைப்பு 'ஓம்' இதழின் ஈகையின் மாண்பினை வெளிப்படுத்தியது. இல்லம் தோறும் வளம் பெருக- உளம் நிறைந்த கடவுள்களின் தரிசனம்பெற- அற்புத வண்ணப்படங்களுடன்கூடிய அரியதொரு பொக்கிஷத்தை அளித்து அகம்நெகிழச் செய்துவிட்டீர்கள்.

**-துரை. இராமகிருஷ்ணன், எரகுடி.**

திருப்புன்கூர் சிவாலயத்தின் பெருமையையும் நந்தனாரின் சிறப்பையும் கோவை ஆறுமுகம் தன் கட்டுரையில் அழகுற வார்த்திருந்தார். பக்தனின் பக்தி உண்மையெனில் இறைவனே உதவிக்கு வருவான் என்பதை ரிஷப தீர்த்தக் குளம் வெட்டிய விநாயகர் உணர்த்துகிறார்.

**-பி. கன்னியப்பன், சாலிகிராமம்.**

மக்கள் சேவைக்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்ட ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்கள் அனுபவிக்கும் துயரங்களைக் கண்டு கண்ணீர் சிந்திய அன்னை சாரதாதேவி, அவர்களுக்காக தன் கணவரிடம் வைத்த வேண்டுதலைப் படித்தபோது நெக்குருகினேன்.

**-கே. பரத்வாஜ், ஹைதராபாத்.**


நக்கீரன் பப்ளிகேஷனுக்காக நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014.-ல் அச்சிட்டு வெளியிடுபவர் : நக்கீரன்கோபால்

Owned by Nakkheeran Publications, Printed and Published by **Nakkheeran Gopal.** Printed at Nakkheeran Printers and Binders, 105, Jani jahan khan road, Royapettai, Chennai-14. and Published from the same address. Phone: 43993000

Editor: **Nakkheeran Gopal**    Editor Incharge: **Malaron**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கும்
# ஆவியுலக ஆராய்ச்சி மையம்

Website :http://www.spiritworldresearch.2truth.com/
www.megathudanpathippagam.in



எவ்வளவு பூஜை செய்தும் பலனில்லையே. கோயில், குளம் என்று எவ்வளவு சுற்றி வந்தும் கஷ்டங்கள் தீரவில்லையே என்று திகைத்து நிற்கிறீர்களா? கவலை வேண்டாம். ஆவியுலக ஆராய்ச்சி மையம் உங்களுக்கு உதவி செய்ய முன்வருகிறது.

தீய ஆவிகளின் பாதிப்புகள், ஏவல் சூனியப் பிரச்சினைகள், திருமணத்தடை, தொழில் முடக்கம், வியாபாரமந்தம், குழந்தையின்மை, வழக்கு, பிரிவினை மற்றும் உங்கள் குடும்பப் பிரச்சினைகள் எதுவாயினும் எங்களை அணுகலாம். உங்களது பிரச்சனைகளை சித்தர்கள் ஆத்மாக்களிடம் சமர்ப்பித்து அவர்களின் உதவியை பெற்றுத்தருகிறோம்.

ஆவியுலக ஆராய்ச்சியில் தமிழ்நாட்டின் முன்னோடிகளில் ஒருவரும் 40 ஆண்டுகள் ஆராய்ச்சி அனுபவம் உடையவரும் இந்தத் துறையில் பல புத்தகங்களை எழுதியவரும், 'ஆவிகள் உலகம்' மற்றும் 'மனோசக்தி' என்னும் மாத இதழ்களின் ஆசிரியருமான விக்கிரவாண்டி. வி. ரவிச்சந்திரன் அவர்களால் இந்த மையம் செயல்படுத்தப்படுகின்றது.

**கண்டிப்பாக முன் அனுமதி பெற்று வரவும்!**
**தொலைபேசி: 044 - 42155831**

நேரில் வர முடியாதவர்கள் கட்டணம் அனுப்பி விட்டுக் கடிதம் மூலமும் பயனடையலாம்.
அனுப்பும் விபரங்களைப் பற்றியும் மேலே கண்ட தொலைபேசிகள் மூலம் அறியலாம்.

**முன் அனுமதி பெற்றவர்கள் வரவேண்டிய விலாசம்**
(கடிதம் அனுப்பவும் இதே விலாசம் தான்) (ஞாயிறு விடுமுறை)

## விக்கிரவாண்டி.வி.ரவிச்சந்திரன்
**ஆவியுலக ஆராய்ச்சி மையம் மற்றும் மேகதூதன் பதிப்பகம்**
பழைய எண். 7, சின்னப்ப ராவுத்தர் தெரு, (ரத்னா கஃபே என்ற ஹோட்டலின் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

## பயனடைந்தவர் பாராட்டுகிறார்

மதிப்புக்குரிய விக்கிரவாண்டி. வி. ரவிச்சந்திரன் சாருக்கு வணக்கம்.

நீண்ட காலம் கஷ்டப்பட்ட எங்கள் குடும்பத்தில் செய்வினை இருப்பதாகக் கூறிப் பரிகாரங்களை எழுதித்தந்தீர்கள். உங்கள் மூலமே செய்வினையை நீக்கியதில் நல்லமாற்றங்கள் தெரிகின்றன. எனக்கு வேலையும் கிடைத்துள்ளது.

நீங்கள் தெரிவித்த உணவுமுறை வைத்தியத்தால் எங்கள் அம்மாவும் ஆரோக்கியம் அடைந்துள்ளார்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை.

**M. சண்முகம்,** அனைமலையன்பட்டி, தேனி - 625 526.

தங்கள் அறிவுரைப்படி எளிய பரிகாரம் செய்து வந்ததில் எனது பழைய நிலுவைத் தொகை 21.4.14ல் கிடைத்தது. இப்போது புதிய ஊதியம் பெறுகிறேன். மகனும் நீங்கள் சொன்ன பரிகாரத்தைச் செய்ததில் 14.5.14ல் மேல் படிப்புக்காக ஜெர்மனிக்குச் சென்றுள்ளார். உங்களது சேவைக்கு நன்றி.

**P. ரெங்கநாதன்,** கிருஷ்ணாநகர், புதிய பெருங்களத்தூர், சென்னை - 600 063.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OM SARAVANABHAVA TAMIL MONTHLY REGD. NO.TNTAM/2001/4692


உயர்ந்த தரம் ! உணவிற்கு ருசி உடல் ஆரோக்கியம் !!

இவை அனைத்திற்கும்

TÜV SÜD
South Asia
ISO 9001:2008
CERTIFIED
COMPANY

PC

PC
இருந்தால்
ஈசி !

பெருங்காயம்

ISO 9001:2008 CERTIFIED COMPANY

ஆரோக்கியமான உடலுக்குத் தேவை நல்ல உணவு...
நல்ல உணவுக்கு தேவை நல்ல சுவையும் மணமும்...
சுவையும் மணமும் உள்ள உணவுக்கு P.C. பெருங்காயம்




Manufacturers : P.C.COMPANY
5/244, Sivagangai Main Road, (Near Pandi Kovil) Madurai - 625 020.
Off : 2624331, Factory : 2582324, Fax : 2582423
E-mail : pccompanyindia@yahoo.com
B.O. : CHENNAI : 044-25388576 TIRUCHUR : 094470-84826 Bangalore : 098860-84101
Dealers in all Types of Marbles, Granites & Classtiles





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org